# குசேலோபாக்கியானச் சுருக்கம்

சென்னை யூனிவெர்ஸிடி

1916-ஹூலத்து 'இன்டர்மீடியேட் பரீக்ஷைக்குப் படிக்கும்

மாணவர்க்கு உபயோகமாகப் பதிப்பித்த

# குசேலோபாக்கியானச் சுருக்கம்

&

# அரிச்சந்திர புராணச் சுருக்கம்


சென்னபட்டணம்

கி. க. அ. சங்கத்தார் அச்சுக்கூடம்

1914

## Foreword

The necessity for an Expurgated Edition of the poetical portion of the non-detailed study in Tamil for the Intermediate candidates of 1916 was felt only in the beginning of August last. The expurgation of the books and their abridgment as well as the reading of the proofsheets had all to be expedited to avoid delay.

The aim in preparing this edition has been to minimize the difficulty of the candidates, most of whom come to the Intermediate class without sufficient grounding in their vernaculars. This necessitated certain innovations which it is believed will not be misunderstood.

# முன்னுரை

அபிமன்யு புத்திரனும் அருச்சுனன் பௌத்திரனுமான பரிக்ஷித்து மஹாராஜனுக்கு ஸுகமுனிவர் உபதேசித்த ஸ்ரீ பாகவதபுராணத்தில் கண்ணனுடைய வைபவங்களை விரித்துரைக்கும் தசமஸ்கந்தத்தில் கூறியிருக்கும் கிளைக் கதைகளில் ஒன்றாகும் இக்குசேலோபாக்கியானம். இதைத் தமிழ்ச் செய்யுளில் சிறு காப்பியமாக இயற்றினவர் வல்லூர் தேவராஜபிள்ளை என்னும் கருணீகர். இவர் திரிசிரபுரம் மஹா வித்வான் மீனாக்ஷிஸுந்தரம் பிள்ளையவர்களுடைய மாணாக்கரில் ஒருவர். மீனாக்ஷிஸுந்தரம் பிள்ளையவர்களே இந்நூலை யியற்றினாரென்றும் கர்னபரம்பரை வழங்கிவருகின்றது. இந்நூல் அரங்கேறியது கி-பி. 1850-௵.

“ஆந்திரகவி கட்டுப்பிரபுநாமர் என்பவர் மூன்று அத்தியாயங்களாக வகுத்துப் பத்திய கத்தியங்களால் வரைந்துள்ள குசேலோபாக்கியானம் என்னும் நூலையே பெரும்பாலுந் தழுவி இந்நூலாசிரியர் இதை இயற்றியதாக நன்கு புலப்படுகின்றது” என்பர் இந்நூலைக் குறிப்புரையோடு அச்சிட்ட ஸ்ரீ திருவேங்கடநாயடு என்பவர். அவ்வாந்திர நூலினின்றும் சில பகுதிகளை நாயடு அவர்கள் அங்கங்கே எடுத்துக்காட்டி யிருக்கின்றனர்.

இந்நூல் 773 விருத்தங்களாலானது. அவைகளில் இந்தப் பதிப்பு, அசப்பியமான வர்ணனைகளையும் உயர்வுநவிற்சியான வர்ணனைகளையும் நீக்கி, உரையிடையிட்டு, 150 விருத்தங்களை மாத்திரமே கொண்டுள்ளது.

அகராதி யில்லாதவரும் அகராதியைக் கையாளத் தெரியாதவருமான மாணவர் பொருட்டாகச் சில அரும்பதங்களுக்கு மாத்திரம் அவ்வச்செய்யுளின் கீழே உரை சேர்த்திருக்கிறது. இயன்றமட்டில் சந்தி பிரித்திருப்பதால், மாணவர்கள் தாங்களே சிலமுறை படித்துப் பாடல்களின் பொருளை அறிவது ஸுலபஸாத்தியமே.

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR : MADRAS-41

# குசேலோபாக்கியானம்

## I. குசேலர் துவாரகைக்குப்போகப் புறப்படுதல்.

பூமிதேவிக்கு முகம்போல் விளங்கும் உத்தர மதுரையின் அருகில் அவந்தியென்னும், ஓரழகிய நகரம் உண்டு. அதனருகில் உள்ள பெரிய காட்டில் குறவரு மருளும் குன்ற மொன்றுண்டு. அந்தக் குன்றின்மீது ஒரு பெரிய முனிவர்சேரி இருந்தது.

அருமறை முழக்கும், வினைதபும் யாகவழற்கண் நன்மந்திர முழக்கும்,
பெருமைசால் சுரரைக் கூய் அவியளிக்கும் பெருமுழக்கமும், அவரேற்கும்
செருமலி முழக்கும், உண்டபின் ஆசி செப்பிடு முழக்கமும் ஒன்றிக்,
கருநிறக் கரைகொன் றிரங்கெறி தரங்கக் கடல்முழக் கெழாவகை அடக்கும்.

தபும்—கெடும். சுரர்—தேவர். அவி—தேவருணவு. செரு—சண்டை. ஆசி—வாழ்த்து
இரங்கெறிதரங்கம்—(இரங்கு எறி தரங்கம்)—சப்திக்கிற வீசுகின்ற அலை.

தருப்பை கொய்குநரும், சமிதை தேடுநரும், தழைந்தமாவிலை பறிக்குநரும்,
விருப்பொடுநல் ஆனைந்து கூட்டுநரும், வியன்பவித்திர முடிகுநரும்,
அருப்புமென்மலர் நந்தனவனந்தன்னை அடைந் தெடுக்குநரும், நூலாய்ந்த
திருப்பொலி பெரியோர்க் குபசரிக்குநரும், செறிதர விளங்கு மச்சேரி.

ஆனைந்து—பஞ்சகௌவியம்—பஞ்சதிரவியம்—(கோசலம்—கோமயம்—தயிர்—நெய்—பால்)

சரியைய ரொருபால், கிரியைய ரொருபால், சார்ந்த யோகத்தின ரொருபால்,
பெரியஞானத்தில் நிற்பவ ரொருபால், பெட்பொடு போதிப்பா ரொருபால்,
விரிதரு மோத்துக் கற்பவ ரொருபால், மெய்ப்பொருள் பொய்ப்பொரு ளிரண்டும்
தெரிதர விசாரம் செய்பவ ரொருபால் திகழ்தரப் பொலியும் அச் சேரி.

சரியை—கிரியை—யோகம்—ஞானம் are the four states of bliss.

அந்த முனிவர் சேரியில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். சுதாமா என்று பெயர் பெற்றவர் ஒருவர் இருந்தார். அவரை

மெத்திய பற்பல் கிழிதுணி இயைத்து மெல்லிழைச் சரட்டினால் பொல்லம்
பொத்திய சிதரே நல்லுடையாகப் புனைந்த காரணத்தினால் கடல்சூழ்
எத்திசையவரும் குசேல னென்றொரு பேரிட்டழைப்பர்கள்.

பொல்லம்—துண்டு; தொளை. சிதர்—சீலைத்துணி.

படியிலா மறைநூல் முற்றுணர்ந் தடுத்தோர் பக்குவத் திறன்[1]மதித் தறியா;
ஒடிவறு சரியை யாதியா நான்கும் உற்றுறப் பயிற்று சாந்தீபன்
அடிமலர் அடையா, இருக்குமுன் மூன்றும்[2] ஐயமுன் மூன்றும்[3] விட்டோடக்,
கடிகெழு காயாம்பூங் கதிர்மேனிக் கண்ணனோ டமர்ந்து கற்றனனே.

[1]பக்குவத்திறன்—தகுதி—யோக்யதை—docility. [2]ருக் முதலிய மூன்று வேதங்கள். [3]ஐயம் முதலான மூன்று—முத்திக்கிடையூறான மூன்று—அவை ஐயம் திரிபு அறியாமை.

கொழுந்துவிட் டெரியும் பசித்தழல் அவித்துக், கோதில் வைராக்கிய மிக்குற்,
றழுந்துபட்டிடாத சாந்திராயண முன் அளப்பரும் செயற்கரு விரதம்
எழுந்துவிட் டொளிரப் பற்பக லாற்றி, என்பொடு நரம்புகள் தோன்றிச்
செழுந்தசை வற்றி, இளைத்த யாக்கையனாய்த் திகழ்ந்தனன் சீர்த்தி யந்தணனே.

வைராக்கியம்—வெறுப்பு. முன்—முதலாகிய.

மாற்கடல் கடந்த மனத்தனாய் வேத வரம்புகண் டிலங்கும் இக்குசேலன்,
பாற்கடல்மிசை ஓர் கார்க்கடல் போலப் பையரவணைமிசைத் துயில்வோன்
சேற்கரு நெடுங்கண் திருமகள் வருடச் சிவந்துகாட்டிடு மரைமலர்த்தாள்
ஏற்குமென் றுள்ளத் திருவி, எந்நாளும் இயற்றரும் பூசனை இயற்றும்.

குசேலன் துயில்வோனது மலர்த் தாளை உள்ளத் திருவிப் பூசனை இயற்றும் (என்று கூட்டிக் கொள்வது).

அவர் தாம்செய்யும் தவத்துக்கு உதவிசெய்யுமாறு ஒரு மாதை மணஞ்செய்து கொண்டார். அவள்

மாசிலாக் குலத்து வந்தாள், வருவிருந் துவப்ப ஊட்டும்
நேச மிக்குடையாள், கொண்கன் நினைப்பறிந் தொழுகும் நீராள்,
தேசுறு வாய்மை உள்ளாள், சினந்திடல் என்று மில்லாள்,
பேசுதிண் கற்பு வாய்ந்தாள், பெற்றதே கொண்டு வாழ்வாள்.

## குசேலர் வறுமை.

புத்திரரைப் பெறுதவர்கள் புத்தெனும் நரகத்தை அடைவர் என்ப வாதலின், அம்முனிவர் அம்மனைவியிடம் பல புத்திரரைப் பெற்றார். அதனால் வறுமை மிக்கது.

பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரல் முகத்தில் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரிந்து நீட்டி
மல்லெலாம் அகல வோட்டி மான மென்பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ இழிவிழி வெந்த ஞான்றும்.

பருவரல்—துன்பம். வீட்டி—அழித்து.

இருநிலத் தியாவர் கண்ணும் ஏற்பதை இகழ்ச்சி யென்ன
ஒருவிய உள்ளத்தான், காட்டில் உதிர்ந்து கொள்வாரு மின்றி
அருகிய நீவாரப்புல் தானியம் ஆராய்ந் தாராய்ந்
திருவவொள் நகத்தால் கிள்ளி, எடுத்துடன் சேரக் கொண்டு

ஒருவிய—நீக்கிய.

வந்து தன்மனைக்கை நீட்ட, வாங்கி மற்றவற்றைக் குற்றி
அந்த மெல்லியல் பாகஞ்செய்து அதிதிக்கோர் பாகம் வைத்துத்
தந்த தன்பங் கயின்று, தவலரு முவகை பூத்து,
மந்திர மறைகட் கெட்டா மாலடி நினைந்திருப்பான்

அதிதி—விருந்தாளி. அயின்று—உண்டு, தவல்—குறைவு; கெடுதல்.

அப்பால் மக்களுக்கிட்டு மிகுந்ததை மனைவி தானும் உண்டு, அது போதாமையால் உடல்மெலிந்து துன்புற்றிருந்தாள்.

ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு கைநீட்டும், முந்தி மேல்வீழ்ந்
திருமகவும் கைநீட்டும், மும்மகவும் கைநீட்டும், என்செய்வா ளால்.
பொருமி ஒருமக வழும், கண்பிசைந் தழு மற்றொருமகவு. புரண்டு வீழாப்
பெருநிலத்தில் கிடந்தழு மற்றொரு மகவு. எங்ஙனம் சகிப்பாள் பெரிதும் பாவம்.

பொருமி—வீங்கி.

அந்தோ என்வயிற்றெழுந்த பசி அடங்கிற்றில்லையென அழுமால் ஓர்சேய்.
சிந்தாத கஞ்சி வாக்கிலை எனக் கன்னாய் எனப் பொய்செப்பும் ஓர்சேய்.
முந்தார்வத் தொருசேய் மிசையப் புகும்போதினில், ஒருசேய் முடுகி ஈர்ப்ப,
நந்தா மற்றச்சேயும் எதிரீர்ப்பச் சிந்துதற்கு நயக்கும் ஓர்சேய்.

நயக்கும்—விரும்பும்.

''அடுத்தமனைச் சிறுனொருவன் 'இன்று நமதகம் கறியென் அட்டார்?' என்று தொடுத்துவினாயினால்.அச்சொற்பொருள்யாது? அதுதான் எச்சுவைத்து? அன்னாய் எடுத்துரை'' என்றிடும் மழவுக் குரைக்கில்,'' அது செய்யென்னில்,என்செய்வாம்'' மடுத்த அதைத்தறிந்திலேன்'' என மற்றொன்றுரைத் ததனை மறக்கச்செய்வாள். என்று

அட்டார்—சமைத்தார். மடுத்த—உட்கொண்ட.

வேறுமனைச் சிறுன் அயின்ற பக்கணங்கண் டோடிவந்து விழிநீர் வாரச்
சீறுத லிலாத அன்னைமுகம் பார்த்''தின்னான் இன்ன தின்றான். என்வாய்
ஊறுதலால் இப்பொழுதே செய்தளித்தி'' என உடுத்த உடைதொட் டீர்க்கும்
சேறுதலில் சிறுமகவை எடுத்து மார்பிடையணைத்துச் சிந்தைநோவாள்.

பக்கணம்—பக்ஷணம்; சிற்றுண்டி. அன்னமுகம்—அன்னையின்முகம்.

''குண்டலம் மோதிரம் கடகம் சுட்டி அயல்மனையார் தம்குழவிக்[1] கிட்டார்.
புண்டரீகக் கண்[2]அன்னாய்! எனக்குநீ இடாதிருக்கும் பொறுமை என்னே?
கண்டெடுத் திப்போ திடு'' எனக் கரைமதலைக்கு, இல்லாதான் கடன்தந்தானுக்
கெண்டபச்[3] சொல் வார்த்தையென ''நாளைக்கு நாளைக்''கென் றியம்பிச் சோர்வாள்.

[1]குழந்தை. [2]தாமரைபோன்ற கண். [3]எண்தப-கணக்குத்தப்ப,
கணக்குவைத்த நாள் தப்ப.

சிறிய சிதமணிப்பூணையன்றி வேறொரு பூண் அச்சேய்கட் கில்லை.
வறிய மரநாருரியே உடையன்றி மற்றுடைகள் மருவ வில்லை.
வெறிய பொழில் தழைத்த இலையுண்கல மல்லாது கலம் வேறொன் றில்லை.
குறிய மனைவயின் புகும் ஓர் எறும்பினுக்கும் ஆங்குணவு கொடுத்தற் கில்லை.

சிதமணி—(சிதம்—வெண்மை)—வெள்ளைமணி. மரநாருரி—மரவுரி—நார்ச்சீரை,

நண்பு கூர்தரும் அன்னப்பால்[1] சிறிதல்லாமல் மற்றோர் நற்பா லில்லை.
பண்புகூர்தரு தநயர்க்[2] கென்றொன்றும் பசிதீர்ந்த பாடு மில்லை.
கண்புகா இவ்வறுமை கண்டு மறையவனும் உளம் கவற்சி [3]யில்லை.
எண்புகாப் புக [4]ழவன்றன் செயல் கண்டு மனைவி விருப்பிகத்த லில்லை

[1]கஞ்சித்தண்ணீர். [2]பிள்ளைகள். [3]வருந்துதல். [4]கணக்கி லடங்காத கீர்த்தி.

## கண்ணனைக் காணும்படி குசேலரை அவர் மனைவி வேண்டுதல்.

மனைவியானவள், கணவனையும் வெறுத்துரையாமல், மைந்தரிடத்தும் மனஞ்சலியாமல், இந்த வறுமையை ஒழிக்கும் உபாயம் என்னவென்று சிந்தித்திருந்தவள், ஒருநாள் தக்க தருணம் பார்த்துக் கணவனை நோக்கிச் சொல்லலுற்றாள்.

"கொழுந்துவிட் டெரியும் முத்தழல்[1] வளர்க்கும் கோதிலா முனிவ! நம் சிறார்கள்,
அழுந்துபட் டேங்க எழும்பசி யொழிக்க அனமிலா துயங்கினர் அந்தோ.
முழங்கும் ஈரொன்பான் புராணம்[2] நன்கோர்ந்தோர் மூரலால் உயிர்நிற்கு மென்று
வழங்குவர். அச்சொல் மறிதிரைக்[3] கடல்சூழ் மண்ணிடத் துண்மையே யாமே.

[1] The three kinds of வேதாக்கினி used for sacrificial purposes. [2]பதினெட்டுப் புராணங்கள். [3]மடங்குதலான அலை.

"தரித்திரம் மிக்க வனப்பினை ஒடுக்கிச் சரீரத்தை உலர்தர வாட்டும்.
தரித்திரம் அளவாச் சோம்பலை எழுப்பும்: சாற்றரும் உலோபத்தை மிகுக்கும்.
தரித்திரம் தலைவன் தலைவியர்க் கிடையே தடுப்பரும் கலாம்பல விளைக்கும்.
தரித்திரம் அவமானம் பொய் பேராசை தரும். இதிற் கொடியதொன் றிலையே.

கலாம்—பகை.

"தரித்திரம் களிப்பாங் கடலுக்கோர் வடவை. சாற்றும் எண்ணங்கள் வாழ் இடமாம்.
தரித்திரம் பற்பல் துக்கமுந் தோன்றத் தக்க பேராகரம் என்ப.
தரித்திரம் நன்மைசால்ஒழுங் கென்னும் தழை வனந்தனக் கழல் தழலாம்.
தரித்திரம் கொடிய எவற்றினும் கொடிது. அத்தகையதை ஒழித்தல் நன்றாமே."

வடவை—வடவைத்தீ. பேராகரம்—(பேர் + ஆகரம்)—பெரிய உறைவிடம் அல்லது பிறப்பிடம். அழல் தழல்—சுடுகின்ற நெருப்பு.

"யாதவர் குலத்தில் தோன்றிய அரசர் யாவர்க்கும் அதிபனும் இணையில்
மாதவனுடன் நீ பலகலைக் கடலை வாய்மடுத்தனை எனவகுப்பார்.
ஆதலின் அப் பீதாம்பரன் மருங்கில் அணைந் தவன்பால் பெருஞ் செல்வம்
தீதறக் கொண்டு கொடுத்து நம் சிறுவர் செல்லனோய் தவிர்க்குதல் வேண்டும்."

பீதாம்பரம்—பொன்னுடை. செல்லனோய்—செல்லல் + நோய்—துன்பமாகிய நோய்.

## குசேலநுடைய ஞானோபதேசம்.

அதைக்கேட்ட குசேலமுனிவர் கூறலானார்.—

"மக்களுக் கிரங்கி வாடும் மடத்தகை அணங்கு! கேட்டி:—
தக்க முற்பவத்தில் ஆன்ற[1] தருமம் நன் கியற்றினோர்கள் [1] மிகுத
ஒக்க இப்பவத்தில் இன்பம் ஒருங் கனுபவிப்பர்: இன்றேல
மிக்க வெந் துயரத் தாழ்வர். இதற் குளம் மெலித லென்னே?

"தேற்ற முற்பவத்தில் செய்த தீங்குநன் கெனும் இரண்டும்
ஆற்றல்சால் கருமம் என்பர். அக்கருமத்தை நோக்கிச்
சாற்றும் இப் பிறப்பில் தக்க தரித்திரம் செல்வம் நல்கிப்
போற்றுவன் உயிரையெல்லாம் பொலிசுடர்த் திகிரி வள்ளல்[1].

[1] மிக்க பிரகாசம் பொருந்திய சக்கராயுதத்தை உடைய சுவாமி—திருமால்.

"கல்லினுள் சிறுதேரைக்கும் கருப்பை அண்டத் துயிர்க்கும்
புல்லுண வளித்துக் காக்கும் புனத்துழாய்க் கண்ணி அண்ணல்
ஒல்லும் நின் மைந்தர்க் காவா தொழிவனோ' ஒழியான் உண்மை.
மெல்லியல்! கொண்ட துன்பம் விடுவிடு; மறந்தும் எண்ணல்.

மைந்தர்க்காவாது—மைந்தரைக் காக்காமல் எண்ணல்—எண்ணாதே.

பொருள் பெற்றவர்களோ

"ஒருசிறு தரும மேனும் உஞற்றிடார். இரப்போர் வந்து
'தருகிகர் கரத்தாய்!' என்று சாற்றினும் கொள்ளா ராகிக்
கருணை சற் றின்றி எல்லை கடந்திடத் துரந்து மீள்வர்.
மருவு பல் கிளை[1]யும் ஓம்பார். வளம்படைத் தென் பெற்று ரால்? [1] சுற்றத்தார்.

"முறைதவிர் கொடுங்கோல் மன்னர் முனிவி[1]ற்கு நனியும் அச்சம். [1]கோபம்
கறை[2]தெழு களவு செய்வார் கரத்திற்கும் அழற்கும் அச்சம். [2]குற்றம்
மறைவறு தாயமாக்கள் வெளவுவர் என்றும் அச்சம்.
அறைபொருள் பெற்ற ரல்லர்: அச்சமே பெற்றார் போலும்.

பொருளோ

"பொருவறு பந்த[1] மெல்லாம் புணர்த்திடும்: தெய்வ சிந்தை [1]பற்று.
ஒருவ[2] மேலிட்டு நிற்கும்: உறக்கமும் இறக்கச் செய்யும்: [2]நீங்க.
கருவினுள் புகுத்தும். இன்ன கரிசு[3] கண்டதனு லன்றோ [3]குற்றம்.
இருநிலத்திடை வெறுக்கை என்பனர் புலமை சான்றோர்.

"சிறியரோ மதிக்கும், இந்தச் செல்வம் வந்துற்ற ஞான்றே,
வறிய புன் செருக்கு[1] மூடி வாயுள்ளார் மூக [2]ராவர்; [1]கர்வம். [2]ஊமைகள்.
பறி[3]யணி செவியுளாரும் பயில்தரு செவிட ராவர்; [3]பொன்.
குறிபெறு கண்ணுளாரும் குருடராய் முடிவ ரன்றே.

"பல்கதிர் விரித்துத் தோன்றிப் பாடுசெய் கதிரே போல
மல்லல்நீர் உலகில் தோன்றி மறைந்திடு நம்மை விட்டுச்
செல்வம் என் றுறுவதற்கும் செல்வம்என் றுரைக்கும் பேர்நன்(று).
அல்லலை விளைப்ப தாகா தரும்பெறற் செல்வம். பாவாய்!

கதிர்—சூரியன். விட்டுச் செல்வம்—விட்டுப்போவோம்.

"மதுமடை யுடைத்துப் பாயும் வளத்துழாய்க் கண்ணி வேய்ந்து
விது[1]முகப் பதுமை[2] செங்கை மெல்லென வருடச் சேந்து[3] [1]சந்திரன். [2]லக்ஷ்மி.
கதுமென[4]க் கருதும் அன்பர் கருத்தினுள் புகுந்து வாழும் [3]சிவந்து. [4]விரைவில்.
முதுமறைப் பெருமான் பாதம் பெறுதலே மூரி[5]ச் செல்வம். [5]பெருமை.

நீ வீணாக மக்களை நோக்கி மனம் வருந்துகின்றாய்.

"மதலையைப் பெறுநாள் துன்பம்; வளர்த்திடு நாளும் துன்பம்;
விதலை நோய் அடையில் துன்பம்; வியன் பருவத்தும் துன்பம்;
கதமுறு காலர் வந்து கைப்பற்றில் கணக்கில் துன்பம்.
இதமுறல் எந்நாள் சேயால், எற்றைக்கும் துன்பமானல்?

விதலை—நடுக்கம். கதம்—கோபம். எற்றைக்கும்—என்றைக்கும்.

"இளமையில் இயற்றும் தண்டம் ஏற்றும் எவ்வெறுப் புய்த்தாலும்
உளம் நடுநடுங்கிப் பின்னி ஊற்றுறப் பற்றி நிற்பார்.
தளர்வறு பருவம் சார்ந்தால் தந்தைதாய் நடுங்கச் சீறி
அளமரு தம்மனம் செல் அவ்வாறே ஒழுகி நிற்பர்.

அளமரு—(அளம்—கூர்மை) கூர்மை பொருந்திய.

"அத்தகு மைந்தர் ஆர்? நீ யார்? இஃது துரைக்கும் நான் ஆர்?
இத்தரையிடைக் காப்பாற்றற்கு யான் திருநெடுமால் அல்லன்.
கொத்துறு மைந்தராசைக் கோட்பட்டு வருந்துகின்ருய்.
பித்துளார் செய்கை ஈது: பெரியர் இம் மயக்கம் பூணர்.

ஆசைக் கோட்பட்டு—ஆசையால் கொள்ளப்பட்டு.

"தரித்திரம் என்று பல்கால் சாற்றினை.[1] எதிர்மறுத்தல்
பரித்திடும் அச்சொல் தன்மைப் பன்மை முற்ருக வல்லோர்
விரித்துரை பொருள் நீ சற்றும் விளங்கிட உணர்ந்தாயல்லை.
அரித் தடங் கருங் கண் மாதே! ஆதலின் நிலைத்த தன்ருல்.

[1]சொன்ஞய். எதிர்மறுத்தல் பரித்திடும் அச்சொல் That word signifying negation. தன்மைப் பன்மை முற்ருக—i.e., தரித்திருக்க மாட்டோம்.

"பாற்கடல் அடுத்த மீன் அப் பால் விரும்பாது மற்ற
ஏற்குமா விரும்பினுற்போல், எம்பிரான் திருமுன் சார்ந்தும்,
நாற்கதி கடக்கும் இன்பச் செல்வத்தை நண்ணிடாமல்,
சேற்கருங்கண்ணுய்! துன்பச் செல்வமோ நண்ணுவேன் யான்?"

ஏற்குமா—ஏற்கும் + ஆ(று) = தகுந்த விதம்.
நாற்கதி—(கதி—பிறப்பு). தேவர்—நரகர்—மனிதர்—விலங்கு.

### கணவன் கடமையை மனைவி வற்புறுத்தல்.

இங்ஙனம் கணவன் எடுத்துரைத்தவைகளைச் செவியேற்று, இவையெல்லாம் உண்மையேயென்று உணர்ந்தும், மைந்தர்மேல் உள்ள ஆசை நீங்காமல், பின்னும் கணவனை வணங்கி,

"மானிடன் ஒருவன் தனக் கருஞ்செல்வம் வாய்க்கவென் றனுதினம் முயற்சி
தான் உஞற்றுவனேல், கடவுளும் அதனைத் தந்தளிக்குவன். அதாலன்றே
ஆனபேரறிஞர் திருவினை முயற்சி ஆக்கும் அம் முயற்சியில்லாமை
ஈனமார் இன்மை புகுத்திடுமால் என்று யாரும் நன் குணர்தர நவில்வார்.

உஞற்றல்—செய்தல். திரு—செல்வம்.

"கடவுள் ஈகுவனென் றெண்ணி, நித்தியமும் கருதுறும் முயற்சி செய்யானேல்,
அடலுறு செல்வம் அடைகுவனேகொல்[1]? அருங்கலத் திட்ட பாலடிசில்[2]
மிடலுடைக் கரத்தால் எடுத்துண தெங்ஙன் வீங்கு வெம் பசிப்பிணி ஒழிப்பன்?
உடல் பவந் தனக்கோ ராகரமாகும் உடல் நனிவாட்டும் மெய்த்தவத்தோய்!

[1]அடைவானோ? [2]சோறு. மிடல்—வலிமை. உடல்...உடல்—வருத்துதலான பிறப்புக்கு ஓர் உறைவிடமாகும் உடல்; (First உடல்=வருத்துதலான.)

"மாசறு கற்பின் மடவரல்தனக்கு வகுக்கரும் கொழுநனே உலகம்
மாசறத் துதிக்கும் கடவுளாம் என்று அரியநான்மறை சொலும். அதனால்
பாச முற்றிரியப் பல்கலை ஒருங்கு பளகறத் தேர்ந்த நீ எனக்குப்
பேசரும் கடவுளாம். எளியேனைப் பெட்பொடு புரத்தல் நின் கடனே.

இரிய—ஓட. பளகு—குற்றம். பெட்பு—விருப்பம்.

"வெண்டிரை வீசும் கருங்கடல் புடவி விண்ணகம் பாதலம் இவற்றுள்
மண்டிய உயிர்கள் எவற்றையும் கமலைமார்பினன்[1] புரப்பனே யெனினும்,
அண்டர்கள் புகழும் ஐய! நீ உயிர்த்த அரிய மக்களையும் என்றனையும்
பண்டைநூற்[2] கியையப் பாதுகாத்தளித்தல் பகரும் நின் கடன்"எனப் பகர்ந்தாள்.

[1]லக்ஷ்மியை மார்பில் உடையவன்=விஷ்ணு. [2]பழமையான நூல்=வேதம்.

## குசேலர் இணங்குதல்.

இதுகேட்ட முனிவர் அவளுடைய வேண்டுகோளுக் கிணங்கி,
"தெய்வம் குரவன் அரசன் திரு[1]முன்னர்ச் செல்வோர்,
மெய்வந்த அன்னார் அருள்வேண்டி, விரும்பெதேனும்
கைவந்த[2] பெற்றுச் செலீஇ[3]க் காண்குவர். கண்ணன் முன்பு
மைவந்த கண்ணாய்! இனி தென்கொடு வல்லை[4] செல்வல்?[5]"

[1]ஸந்நிதானம். [2]கைக்குக் கிடைத்தவை. [3]சென்று. [4]சீக்ரம், [5]செல்வேன்.

என்றார்.

என்றுரைத்தகொழுநனுரை கேட்டுமகிழ்ந்திதற்கென்னே செயலென்றெண்ணி,
அன்றுமுதல் உபவாசம் தானிருந்து, மாமுனிவன் அரிதின் தேடி
நன்றளிக்கும் நெல்லினில் தன்னொருபாகம் வேறெடுத்து நலக்கச் சேர்த்து,
துன்றிய அந்நெல்லை ஒருதினத் தறலில் நனைத்து வறுத்தெடுத்துத் தூய்தா,

அறல்—ஜலம். தூய்தா—சுத்தமாக.

கறை[1]யிட்டு நனிகாண உலக்கைகொடு மிக்கிடித்துக் கரிசு[2] போக்கி
நிறையிட்ட அவலாக்கிக் குசேலமுனி கந்தையினில் நேடி[3] ஓர்பால்
மறையிட்ட ஒழுங்குடையாள்[4] முடிந்துகொடுத் தினிதுபோய் வருக என்றாள்
சிறையிட்ட பவம்[5] நீங்கும் வழி கண்டோன் வழிதேடிச் செல்ல லுற்றான்.

[1]உரல். [2]குற்றம். [3]தேடி. [4]வேதவிதிப்படி நடப்பவள். [5]பிறப்பு.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR . : : MADRAS-41

## II. குசேலர் கண்ணனைக் கண்டு திரும்புதல்.

முன்னும் நெடுந்தூரம் வழி நடந்தறியான், தோட்கோப்பு[1] முத லாதாரம்
தன்னமும்[2] இலான், பதிகர்[3]தமை வினவி வழிதேர்ந்து தடையிலாது
பன்னெடுங் காவதம் போகிக், கவர்வழி[4]கண் டுளம் மயங்கிப் பரிந்து நின்றங்
குன்னி மதிப்பால் இதுசெல்வழி எனத்தேர்ந் தவணின்றும்[5] உற்றுச் செல்வான்.

[1]கட்டுச்சோறு. [2]சிறிதும். [3]வழிபோவார். [4]பல கவராய்ப் போகும் பாதை (கவர்த்தல்—ஒன்றிலிருந்து பல தோன்றல்). A place where a road divides itself into two. [5]அவ்விடத்திலிருந்து,

### வழிநடத்தல்.

பல மலைகளையும் காடுகளையும் நாடுகளையும் நகரங்களையும் நதிகளையும் கடந்து சென்றார். வழியில்

மண்கொதிப்ப, அறல்[1]கொதிப்ப, வளி[2]கொதிப்ப, எண்ணுவார் — [1]ஜலம்.
எண்[3]கொதிப்ப, நறுநீழல் இவை மனைவிட் டகலார்க்கும் — [2]காற்று.
கண்கொதிப்பக், கரம்கொதிப்பக், கால்கொதிப்பக், கற்பகம்சார் — [3]மனம்.
விண்கொதிப்ப, முதுவேனில் வெம்பருவம் மேவியதால்.

இத்தகைய வேனிலிடை இரும்பசி[1]யால் அறமெலிந்தும், — [1]மிக்கபசி.
பைத்ததரு[2] நிழல் இருந்தும், பள்ளமெலாம் ஆராய்ந்தும் — [2]பசுமையான மரம்.
தத்துபுனல்[3] கிடையாமைத் தாகத்தால் வாய்புலர்ந்தும், — [3]ஜலம்.
சுத்த விரதத் தவ நற்றுறை நின்றோன் சொல்லுமால்.

'சுடர்[1]மறைய ஊரகத்துத் துயில்வதற் கார் இடங்கொடுப்பார் — [1]சூரியன்.
படர்வழிச்செல் நமக் கிவ்வூர்ப் பழக்கமுடையார் இல'ரென்று
இடருடைய மனத்தினனாய், எதிர்கோயில்முன் உறங்கி
அடர் கதிரோன் எழுமுன் எழுந் தாறு[2]ணர்ந்து நடந்திடுமால் — [2]ஆறு—வழி.

கானவேல்[1] முள்தைத்துக் காலூன்ற முடியாமல்,
ஈனமார் முள்வாங்கும் கருவியுங் அங்கில்லாமல்,
மானமார் பெருந்தவத்தோன் மனமெலிந்து முகம்புலர்ந் தோர்
தானமேவுற[2] இருந் துள்ததைய[3] இவை யெண்ணுவான்:—

[1]காட்டிலுள்ள வேலமரம். [2]ஓரிடத்தில் பொருந்த. [3]கூட, நெருங்க.

"செறிதருதன்மனப்படியே செய்தல் ஒருவற் கினிதாம்.
அறிவுறுக்கும் குருமொழிகேட் டாக்கல் அஃதினும் சிறப்பாம்.
முறிதரும் எதிலர்சொற்கேட் டொழுற்றல் முனிதுயர். மனையாள்
வறியஉரை கேட்டொழுற்றல் மண்இறல்[1]நேர் கெடுதியுறும். [1]உலக முடிவு.

"இதுதெரிந்தும் மனையாட்டி இயம்பியசொற் குடம்பட்டு,
முதுவெயிலால் உடல்வருந்தி மூர்ச்சித்து மெலிகின்றேன்.
கதுமெனப் பல் காவதங்கள் கடந்தேன். வண்துவரைநகர்[1] [1]துவாரகாபுரி.
எதுவெனக் கேட்டிடில் எவரும் 'இன்னும் நெடுந்தூரம்' என்பார்.

"மற்றைவழியும் கடக்க வலியின்(று). ஓர்விதத்தினால்
உற்றிடினும், கருங்கடல் யாருதவிகொடு கடந்திடுவேன்?
பொற்ற[1] அது கடப்பினும், அப் புரத்தில் எனை யார் மதிப்பார்? [1]நன்றாக.
சற்றும் உணராது வழித்தலைப்பட்டேன்: என்செய்தேன்?

"மாமகுடமுடிமன்னர் நனிவந்து காத்திருக்கும்
கோமகன்தன் தலைவாயில் எவ்வாறு குறுகுவல்[1] யான்? ஸமீபிப்பேன்.
பூமலியும் அவ்வாயில் புகினும், அவன் திருச்சேவை
ஏமம்[2]உற ஏழையேற் கெளிது கிடைத்திடுங் கொல்லோ? [2]இன்பம்.

"கற்பகத்தைச் சார்ந்தும் வறுங்காய் கேட்கத் துணிவார்போல்,
பொற்புடைய எம்பிரான் திருமுன் அரிதிற் புகுந்தும்,
அற்பமுறு திருவேட்டல்[1] அறிவேகொல்?" என உளத்துப்
பற்பலவும் எண்ணி அயர்வுயிர்த்தான்[2] அப் பனவனே[3].

[1]செல்வத்தை விரும்புதல். [2]வருத்தந்—தீர்ந்தான். [3]பனவன்—பார்ப்பான்.

"என்னதுயர் இனிஉறினும் இதுகாறும் வந்தமையால்
முன்னம் மனைக் குரைத்தபடி முற்றும்போய் வருவல்"எனத்
தன்உளத்தில் எண்ணி எழீஇ[1]த் தனிநடந்து, சின்னுளில்
மின்னுமிழ் கார்முகில்[2] பயிலும் மேல்கடலின் கரை இறுத்தான்.

[1]எழுந்து. [2]மின்னலை வீசுகின்ற கருமேகம்.

அங்கே மந்தமாருதம் சில்லென்று வீசுதலால், முனிவர் ஒரு புன்னைமரநிழலில் இருந்து இளைப்பாறினார். "மீகாமனுக்குக் கொடுக்கச் சிறிதும் பொருள் இல்லையே, என்செய்வது" என்றெண்ணி, மீகாமனிடம் சென்று, அவனுக்கு மனதிரங்கும் விதம் பல வார்த்தைகளைச் சொல்லிக் கப்பலில் ஏறினார். கப்பல் கடல் கிழித்தோடி துவாரகையின் துறையில் இறுத்தது.

**கண்ணனுடைய அரமனை வாயில்.**

இறங்குவாரோடிறங்கி முனிவர் செல்லலுற்றார். புடைநகரையும் இடைநகரையும் கடந்து மதிற்பெருவாயிலையும் கடந்து சென்றார். வசியவேளாண் மாந்தர் வசிக்கும் வீதிகள் கண்டு பார்ப்பனச்சேரியை நோக்கி அரச வீதியில் புகுந்தார். சிறிதுதூரம் சென்று அரமனையின் தலைவாயிலைச் சார்ந்தார். துவாரபாலகரிடம் சென்று,

"மக்களுள் மிக்கீர்! நீலவண்ணனுக் கடியீர்! தூய்தாத்
தொக்க புண்ணியத்தீர்!பாவம் தொலைத்த மாதவரும் செய்ய
தக்க பூங்கமலத்தோனும் நண்ணரும் புகழ் பெற்றுள்ளீர்!
எக்கலைகளினும் வல்லீர்! இயம்பும் என் ஆசி கொண்மின்.

[விக்கும்

"எளியனேன் மறையோர்தம்குலத் துதித்தேன். என்பெயர் குசேலன். மிக்கொ
ளிர்கொள்வெண் தரங்கப் பாற்கடல் நாப்பண் நாகணை[1]த்துயிலொழிந் தடியார்க்
களி[2]செய் தல்லார்[3]க் கீறுறுத்திட[4]அவதாரம்செய்த கண்ணபிரானோ
டிளமையில் பற்பல கலைபயின் றுள்ளேன், இசைக்குமுக் குற்றமும் அகல.

[1]ஸர்ப்பசயனம். [2]இருபை. [3]விரோதிகள். [4]முடிவு உண்டாக்க.

"வச்சிரத் தடக்கை வாசவன்[1] ஏவ மஞ்சினம்[2] பொழிந்த கல் மழையை
நச்சும்விண் உரிஞ்சும் போகு[3]யர் குவட்[4] டோர் நாக[5]மேந்தித் தடுத்தருளும்
அச்சுதன் பால்சென் றேழையேன் வருகை அறிவித் தென்றனை அவண் சேர்
மெச்சுறும் கடன்" என் றுரைத்தனன் எவரும் விரும்புறு குசேலமாதவனே. [த்தல்

[1]இந்திரன். [2]மேகக்கூட்டம். [3]போகுதல்—நீளம். [4]சிகரம். [5]மலை.

இதைக்கேட்டு அவர்களில் அறிவிலார் சிலர்:—

"வருத்தபல் உலகும் போற்ற மாற்றலர்[1] கூற்றூர்[2] மேவச் [1]பகைவர்.
செருத் தராசாளும் கண்ணச் செம்மல் எங்கே நீஎங்கே! [2]யமலோகம்.
இருத்த[3]பல் துவாரக் கந்தை ஏழைப் பார்ப்பானே! சற்றும் [3]இழிவான.
பகுத்தறிந்திடல் அற்றாய்கொல்? பயனில் மூப் படைந்தாய்போலும்.

"மின்மை[1]செய் பகைஞர் மோலி[2] மிதித்திடு கழற்கால் கண்ணன் [1]பிரகாசம்.
தன்மையும் ஏழையாம் நின் தன்மையும் தெரிந்துநோக்கில், [2]கிரீடம்.
வன்மைசெய் புழைக்கைமா[3]வும் மசகமும்[4] போலும்;வாரி[5]க் [4]கொசு. [5]கடல்.
கொன்மை[6]செய் நீரும் ஆவின் குளப்படி[7] நீரும்போலும். [6]பெருமை.

[3]புழைக்கை—துவாரமுள்ளகை: தும்பிக்கை, புழைக்கைமா—தும்பிக்கையுள்ள மிருகம்; யானை. [7](குளம்பு + அடி) = பசுவின் குளம்பு பதிந்த பள்ளம்.

"கனகமால் வரையும் மண்ணங்கட்டியும் போலும்; செங்கேழ்த்
தினகர ஒளியும் ஓர் கத்தியோதத்தின் ஒளியும் போலும்;
அனகமார் தருவும் புன் சீழ்கம்புலும் போலும்; சேடப்
பணகமும் சிறுநாங்கூழும் போலும்;பாய் மிடிப் பார்ப்பானே!

கனகம்—பொன். கனகமால்வரை—மேருமலை. கேழ்—நிறம். கத்தியோதம்—மின்மினிப்பூச்சி. சேடப்பணகம்—ஆதிசேஷனாகிய நாகம். நாங்கூழ்—நாகப்பூச்சி.

பொருள்நனி உளனென்று யாரும் புகழும் ஓர் வார்த்தை வேண்டும்;.
இருகையும் கடகம் வேண்டும்; இலங்கு குண்டலங்கள் வேண்டும்;
வருவிரல் ஆழி வேண்டும்; மார்பிடை மதாணி வேண்டும்;
உருவ முத்தாரம் வேண்டும்; உயர்ந்த பட்டாடை வேண்டும்;

THIRUVANMIYUR

"சிவிகை[1]முன்[2] ஊர்தி[3] வேண்டும்; செழும்பொருள் செலவு வேண்டும்;
குவிகை[4] ஏவலரும் வேண்டும்; கோலமார்ந் திருக்க வேண்டும்;
கவிகை[5] தாங்குநரும் வேண்டும்; கையுறை[6] சிறப்ப வேண்டும்;
அவிகையில்[7] விளக்கம்[8] வேண்டும், அரசவை குறுகுவார்க்கே.

[1]பல்லக்கு. [2]முதலான. [3]வாகனம். [4]குவிந்தகை—folded hands. [5]குடை. [6]காணிக்கை. [7]அழியாத. [8]ஒளி.

"கோதறு கல்வி சால் ஊர்க் குடியிருந் தறியானேனும்,
ஓதரும் செல்வம் மிக்கோன் ஒருவனே சிறந்தோ னவன்:
காதலின் வேதம் முன்னும் கலைகள் கற்றுணர்ந்தோ னேனும்
தீதமை மிடியனாயின் சிறந்திடான் வேத்தவைக்கே.

மிடியன்—தரித்திரன். வேத்தவை—(வேந்து + அவை) ராஜஸபை.

"கலைபயில்நாள் நட்பென்று கரைந்தனை. அந்தநட் பிச்
சிலைவலாற் கிருக்குமாயின், சென்ற பற்பல ஆண்டிற்குள்
உலைவறும் முடங்கல் தீட்டி ஒன்றிரண் டனுப்பலாமே;
மலைவறு தூதுய்த் துன்னை வருகவென் றழைக்கலாமே.

உலைவறும்—கெடுதலில்லாத. முடங்கல்—ஓலை—கடிதம்.

"பழியில் உன் குலத்தோர் செய்யப்படும் தொழில் நன்கியற்றி
இழிவுற உண்டுடுத்த லின்றி,மிக் கெண்ணங் கொண்டு
வழிநடந் திளைத்தாய்: மெய்யும் வாடினாய். அந்தோ வானில்
கழிமதி வருக வென் றுள் கசிந்தழும் மழவு போன்றாய்.

"மாத்திருந் தளகை வேந்தும்[1], வானர சளிக்கும் வேந்தும்[2], [1]குபேரன்.
பாத்திருந்திய சீர்கேட்டுப் பரிவுறப் போகம் துய்க்கும் [2]இந்திரன்.
ஏ[3]த்திருந்திய வில்வல்லான் சேவைக்கு வந் திவ் வாயில் [3]அம்பு.
காத்திருக்கின்ற மன்னர்க் கண்டிலை போலு மாலோ.

"இவன் மகத்நாடாளும் மன்னன்; இவனருகில் நிற்பவன் கொங்கண நாட்டு வேந்தன்; அவனண்டையில் நிற்பான் அங்கநாடாளும் அரசன்; மற்றவர்கள் கூர்ச்சரத்தரசன், காம்போசத்தரசன், துளுவநாட்டரசன், கலிங்கவரசன், கேகயத்தரசன் முதலானவர்கள்.

# குசேலோபாக்கியானம்

மூடங்குகைகால்ஓர்பேதை[1] மூரிவான் அணவும் கோட்[2]டின் [1]மூடவன்.
டம்படு தேத் திரு[3]லுக் கிச்சைவைத் ததனைப் போலும்,
நாடங்கிய சிரார்த்தவில்லந்தோறும் சென்றிரத்தல் நீத்து
டங்கொள்வாள் மன்னற் காண விருப்புவைத் தஃது மாதோ.

[2]பெரிய ஆகாயத்தை அளாவும் மலைச்சிகரம். [3]விசாலமான (பெரிய) தேன்கூடு.

ஆதலின் வந்தவாற்றை அறிந்து நின்னூர்க்குப் போதல்
மதகு கருமம்'' என் றம்மடமையோர் விளம்பலோடும்,
தறு குணத்தால் மாண்ட செழுந்தவக் குசேல மேலோன்,
தம்[1] மிக்குறத் தன்னுள்ளத் திவையிவை எண்ணுவானல். [1]குற்றம்.

மின்செய்த மதாணியாம்; முத்தாரமாம்; விளங்கு பட்டாம்;
பொன்செய்த ஊர்தியாம், இப்போது யாம் பெறுவ தெங்கே?
ன்செயல் நம் மூதாதை நாளினும் கேட்டதின்றால்.
ரன்செய்வாம்? எண்ணு தொன்றை இயற்றுதல் என்றும் தீதே.

'கந்தையில் பொதிந்த நந்தம் கையுறை கண்டாராகில்,
ந்தலில் இகழ்ச்சி பொங்க நகைப்பரே'' என உள்சாம்பி[1] [1]ஒடுங்கி.
அந்தில்[2]நின் றுயங்குங்கால், அவ்வடர் மடமையரை நோக்கிச் [2]அவ்விடம்.
சுந்தர அறிவின் மாண்ட துவாரபாலகர் சொல்வாரால்:—

''யாரென நினைந்தீர் இந்த இருந்தவத்[1] தலைவன் தன்னை?
சேருறு பொய்மை இல்லன்; செறிந்த நோன்புழந்த[2] நல்லன்;
வாருறு மறைகள் வல்லன்; மற்றெங்கும் செல்வா னல்லன்;
ஏரு[3]றும் இனிய சொல்லன் என்னவே யாம் உட்கோடும்[4].

[1]மிக்கதவம். [2]வருந்திச்செய்த. [3]அழகு. [4]உட்கொள்வோம்—எண்ணுவோம்.

''உலகினில் மானிடப் பிறப்பே அரிய(து). இழிகுலம் ஒருவி உயர்ந்த பின்னோர்[1]
குலமுறுதல் அரிய(து). அதனினும் வசியர்குலம் அரிது. கொற்ற வேந்தர்
நிலவு பெருங்குலம் அரிய ததனினும். மற்றஃதினும் மிக்கரிய நீரால்
பலர்புகழ் அந்தணர் குலத்துத் தோன்றிடல் என் றருமறைகள் பகருமன்றே.

[1]வேளாளர்.

"அந்தணரே அரசன்முதல் மூவர்க்கும் ஆசிரியர்: அருளார் தெய்வம்.
அந்தணரே மறைககிழவன் முதலாய தேவரினும் ஆற்றல் சான்றோர்.
அந்தணரே ஆவதற்கும் அழிவதற்கும் காரணமாய் அமைந்த நீரார். [னே?
அந்தணரே தெய்வம் எனக்கென்று கண்ணன் உரைக்கவும் யாம் அயிர்த்தல்[1] என்

[1]ஸந்தேஹித்தல்.

"இத்தகைய மறையவரை எளியரென நினைப்ப தெவன்? இவண் நிற்கின்ற
வித்தகமா மறைத்தலைவன் தன்னை முழுஞானியென விளம்பல் வேண்டும்.
எத்தகைமையால் எனின், மெய்ஞ்ஞானியர்தம் குணங்குறியும் இகத்திலாசைச்
சித்தம் ஒருவாதுழல் பொய்ஞ்ஞானியர்தம் குணங்குறியும் செப்பக் கேண்மின்.

[மெய்ஞ்ஞானியர்.]

"புகழ்ந்து நறுவிரைக்கலவை[1] பூசிடினும், புல்லியரைப் போல நோக்கி
இகழ்ந்து பல பேசிடினும், விருப்பு வெறுப்பென்ப அவர்க் கென்றும் இல்லை.
அகழ்ந்த மலக்கிழங்கினரா[2]ய்ப் பசிவேளை கிடைத்தவற்றை அமுதாய்த் துய்த்துத்
திகழ்ந்திடுவர். சிறிதேனும் நாளைக்கு வேண்டுமெனச் சிந்தை செய்யார்.

[1]நல்ல வாஸனையுள்ள கலவைச் சந்தனம். [2]அகழ்ந்த மலக்கிழங்கினர்—மலமாகிய கிழங்கைத் தோண்டினவர்கள்—நிர்மலமானவர்—தோஷ ரஹித மானவர்.

"விண்ணிடை யேகுதல், மீளப் பாதலத்தில் புகல், மீட்டுப் புவியின் மேவல்,
அண்ணிய பல் பரகாயப்பிரவேசம் செயல், உறையும் அவ்விடத்தே
எண்ணியவெலாம் வரச் செய்திடல் முதல் செய் சித்திகளை என்றும் வேண்டார்.
புண்ணிய பாதகம் இலார். பெருமையிலார், சிறுமையிலார், பொய்மெய் இல்லார்.

"ஆடுவார்; உன்மத்தர்போல் திரிவார்; நகைத்திடுவார்; அங்கை கொட்டிப்
பாடுவார்; இன்றிருந்த இடம் நாளை இருக்க மனம்பற்றார்; சுற்றிக்
கூடுவார் தமில் கூடார். கந்தையன்றி வேறுடுக்கை கொள்ளார். அன்னார்
நீடுவார் புகழ்ப்பெருமை இற்றென்று மதிப்பவ ரார்? நிகழ்த்துவா ரார்?

[பொய்ஞ்ஞானியர்.]

"ஓங்குபெரு ஞானியர்போல் பேசுவார்; அவ ருண்மை வேடம் போலப்
பாங்குபெற உடல்புனைவார்; சற்கருமம் செய்வோர் தம்பக்கம் ஏகின்
நீங்குக என்றொழிப்பார்; இந்நிலை மேலாம் பிரமத்தின் நிலையே என்பார்;
ஈங்கிவர்கள் தாம்கெடுவதன்றி மற்றோரையும் கெடுக்கும் எண்ணம் பூண்டோர்.

'மிக்க அறிவுடையாரைப் போன்றும், உடற்பற் றனைத்தும் விடுத்தார் போன்றும்,
க்கவழக்கிடத்தின் உயர்திணைவினை அஃறிணைவினையாய்ச் சமையச் சொற்றும்,
தொக்க படர்க்கைப்பெயர் முன்னிலைப்பெயராகிட உரைத்தும், சுழல்வதெல்லாம்
க்குவமில் மடவோரை மயக்கி அவர் கைப்பொருளைப் பறித்தற்கன்றே.

வழக்கு—உலகவழக்கு.

[மெய்ஞ்ஞானியர் பொய்ஞ்ஞானியர்.]

'சிறப்புறும் இல்லறத் தினிதுண்டுடுத்து மனைமக்களொடும் செறிந்தாரேனும்,
பெறப்படும் அப்பற்றுடையார், மெய்ஞ்ஞான நெறியுணர்ந்த பெரியரோர்.
அறப்பெரிய துறவறம் சார்ந்தவர்க்கும் இவர் அதிகமென அறையும் நூல்கள்.
விறப்புறும் அஞ்ஞானியர் எவ்வறத்தினும் எவ்வகைச்சிறப்பும் மேவிடாரால்.

விறப்பு—பெருக்கம்.

"இம்மறையோன் முழுஞானியாயிருந்தும் சற்கருமம் இழந்தானல்லன்.
செம்மைபெறும் அக்கருமத்தால் இளைத்த திவனுடம்பு. திண்ணம் ஈதே.
மும்மை உலகத்திடத்தும் ஒருஞானி அரியவனென்றே முழங்கும் நூல்கள்
எம்மை இனிதாண்டருள எழுந்தருளினன் என்றே எண்ணங்கோடும்.

கோடும்—கொள்வோம். எண்ணுகிறோம்

"ஆதியில் நற்கலை யுணருநாள் பழக்கம் என்றுரைத்த தமைய மெய்யே.
நீதிய நம்மரசனைக் கண்டிடும் விருப்பம் மீக்கூர[1] நேடி[2]வந்தான்.
ஓதிய இவ்வன்றி[3] இவன் அரசரிடைப் பெறுங்கருமம் ஒன்றும் இன்றால்.
காதிய தீவினை உடையேம்[4] ஆதலினால் யாம் இன்று காணப்பெற்றேம்.

[1]அதிகரிக்க. [2]தேடி. [3]இவையன்றி. [4]காதிய தீவினையை அழித்துளேம்.

"ஆவா இம்மறையோனைக் காண்டொறும் உள்ளகத்துவகை அரும்பாநின்ற(து).
ஓவாது[1] மெய்யினிடைப் புளகம் எழுகின்றது. கண் உருகாநின்ற.
நா வாரத் துதிப்பதற்குத் துடிதுடிக்கின்றது. விரைந்து நாம்போய் இன்னே
தேவாதிதேவனுக் கித் தவன் வரவை விண்ணப்பம் செய்யவேண்டும்.

[1]ஒழியாமல்.

என்று சொல்லிக் குசேல முனிவரைப் பார்த்து, "இந்தச் சிறியர்கள் மடமையால் சொன்னவைகளை நீர் பாராட்டவேண்டா. இமைகொட்டு நேரம் இவ்விடம் இரும். யாங்கள் கண்ணனைச் சார்ந்து, உம்முடைய வரவு கூறிக் காற்றினும் கடுக வருவேம்" என்றுரைத்து, அவ்விடம் விட்டகன்றனர். கண்ணபிரான் திருவோலக்க மண்டபத்தைவிட்டு அந்தப்புரம் சென்றிருப்ப தறிந்து, அவ்விடம் சென்று, காவற்பெண்டிரால் தம் வரவை அறிவித்து, உள்ளேசென்று திருவடிதொழுது, குசேல முனிவருடைய வரவைத் தெரிவித்தார்கள். கண்ணன் "விரைவில் சென்று அம்முனிவரை அழையுங்கள்" என்றான். துவாரபாலகர் திரும்பிவந்து முனிவரைப் பார்த்து,

"நின்னுடை வர வுரைத்தேம். நிருபனு[1]க் கப்போழ் துற்ற     [1]அரசன்.
பன்னருங்களிப்பை யாமோ பகர்ந்திட வல்லம்! ஐய!
முன்னம் அங்கிருந்த இன்பம் முழுவதும் மறந்து நின்றான்.
நன்னர்[2]நெஞ் சுடைய நீரார் நட்பினிற் சிறந்த துண்டோ?     [2]நன்மை.

"தாயது வருகை கேட்ட தனியிளங் குழவி போன்று,
நேயம் மிக்குடையனாகி, நெஞ்சினுள் உவகை பூப்பப்,
'போயழைத்திடுமின் இன்னே, போய் அழைத்திடுமின் இன்னே,
போயழைத்திடுமின் இன்னே' என விரைபொருளில் சொற்றான்.

"இலக்கணம் இன்மைநோக்கி இதற்குமேல் சொற்றானல்லன்.
மலக்குறும் பறுத் துயர்ந்த மாதவத் தலைவர் ஏறே!
பலப்பல சொல்லி என்னை? பாணித்தல்[1] கருமமன்று.     [1]தாமதித்தல்.
நலக்க நீ விரைவின் எய்தாவிடின், அவன் நண்ணும் இங்ஙன்.

"அசைநிலை பொருணிலை இசைநிறைக் கொருசொல், இரண்டு மூன்று நான் கெல்லை முறையடுக்கும்." அதாவது, அசைநிலைக்கும், விரைவு வெகுளி உவகை அச்சம் முதலாகிய பொருணிலைக்கும், இசைநிறைக்கும், ஒரு சொல் இரண்டும் மூன்றும் நான்குமாகிய அளவும் முறையாக அடுக்கிவரும். எனவே பொருணிலைக்கு மூன்றுக்குமேல் அடுக்கிவாராது. 'போயழைத்திடுமின் இன்னே' என்பது மும்முறை அடுக்கிவந்தது: அதற்குமேல் அடுக்கிவாரா தென்பதை உணர்த்த "இலக்கண மின்மை &c." என்றார். மலக்குறும்பு—மலமாகிய குற்றம். மலம்—ஆணவமுதலியன.

"ஆதலின் எம்பிரானுக் ககத்துமிக் குவகை உய்ப்ப
ஏதமில் முனிவரேறே! எழுந்தருளுக" என் றங்கைப்
போதகம் கூப்பினார்கள். பொருக்கென எழுந்து, செம்மை
வேதம் முற்றுணர்ந்த ஐயன் விரைதர நடக்கலுற்றான்.

### கண்ணனைக் காணுதல்.

ஈங்கிவன் இவ்வா றெய்த, இன்னம் வந்திலனென் றையன்,
பூங்கதிர்[1] வரவுபார்க்கும் பொற்ற புண்டரீகம்[2] போலும்,
தீங்கதிர்[3] வரவுபார்க்கும் செவ்வரக் காம்பல்[4] போலும்,
ஓங்கும் மை[5] வரவுபார்க்கும் ஒண்டழை மஞ்ஞை[6] போலும்,

[1]ஸூர்யன். [2]தாமரை. [3]சந்திரன். [4]செவ்வாம்பல்—செவ்வல்லி. * [5]மேகம். [6]மயில்

பொருந்துதாய் வரவுபார்க்கும் புனிற்றிளங்கன்று[1]போலும்,
திருந்துதன் வரவுபார்க்கும் செம்மனத் தொருவன் போலும்,
அருந்துநீர் வரவுபார்க்கும் அறல்நசை[2] உடையான் போலும்,
கருந்துழாய்க் கண்ணி அண்ணல் கமழ்நறும் சேக்கை மீதே,

[1](புனிறு—ஈன்றணுமை)—calf recently yeaned. [2]நீர்வேட்கை—தாஹம்.

முனிவருடைய வரவைப் பார்த்திருந்தான். முனிவர் ஸமீபித்தபோது,

வருந்தும் ஓர்மிடியன்[1] சேமவைப்[2] பெதிர்கண்டாற்போலும், [1]தரித்திரன்.
அருந்துணை விழந்தோன் விண்ணோரமுதம் எதிர்கண்டாற்போலும்,
பரிந்து வெப்புழலுவோன் கற்பகம் எதிர்கண்டாற்போலும்,
சரிந்த பற்றினன்[3] மெய்யாசான்றனை எதிர்கண்டாற்போலும்,

[2](சேமம்—புதையல்)—புதையலாக வைத்திருக்கும் தனம். [3]பற்றுசரிந்தவன்—அவா நீங்கினவன்.

எண்அனைக் கிலங்குமார்பம் ஈந்தருள் பிரானை, நீல
வண்ணனைத், திகிரிசங்கம் வலம்இட முறக்கொண்டானை,
மண்அனைத்தும் புரக்கும் வாசுதேவனை, மணக்கும்
கண்ணனைத் துளவத்தாமக் கண்ணனைக் கண்ணிற்கண்டான்.

அனைக்கு—அன்னைக்கு—லக்ஷ்மிக்கு. கண்ணனைத் துளபத்தாமம்—(கண்ணனை—கள்நனை)—தேன் ஈரலித்திருக்கும் துளஸிமாலை. (நனை—தேனுக்கும் பெயராதலால் மிக்க தேனுள்ள துளஸிமாலை என்றும் சொல்லலாம்.)

## கண்ணன் உபசரித்தல்.

காண்டலும் உவகைபூத்துக் கால் விசைகொடு நடந்தான்.
ஆண்டகை[1] அவனும் கண்ணுற் றணை உடைத்தெழு நீத்தம்[2]போல்
நீண்டபூம்பள்ளி[3] நீத்து, நிலவு பேரன்பு பொங்கப்
பூண்ட மாதவன்முன் சென்று பொன்னடி வணங்கினானால்.

[1]ஆண்களில் தகுதியுடையவன்—புருஷோத்தமன். [2]வெள்ளம். [3]புஷ்பசயனம்.

திலகம் மண்தோய ஐயன் திருவடி வணங்கிப், பின்னர்
நிலவு மெய்ப்புளகம் போர்த்து நிரம்புறத் தழுவிக்கொண்டான்:
குலம்முறைத் தலைவனென்றும் கூர்ந்த[1] மெய்நட்பனென்றும்
மலர்தலை உலகம்[2] கூறும் வாய்மை[3] காத்தருளினானே.

[1]மிக்க. [2]அகன்ற இடமுள்ள உலகம். உலகம் இங்கே உலகினர். [3]உண்மை.

அப்பால் அம்முனிவரை ஒரு பொற்பீடத்தில் எழுந்தருளப் பண்ணி, புதிய மஞ்சனநீ ராட்டி, ஈரம் புலர்த்திப் பட்டாடை சாத்தினான்: சாந்தம்பூசிப் பூமாலை வேய்ந்தான். பின்பு அறுசுவை உணவளித்துக் கையும் வாயும் பூசினான். அடைக்காய் உதவி அமளியேற்றினான். அருகிருந்து முதுகு தைவந்தான். வழிநடந் திளைத்த அடிகளை மெல்ல வருடினான். குசேலர் ஒன்றும் பேசாது ஐயன் திருவுருவையே சிந்தித்து அசைவற்றிருந்தார்.

உருவினைக் கண்டும், கண்டத்தொளிர் வனமணம்[1] கவர்ந்தும், [1]துளஸிவாஸனை.
அருமைசால் முகமன்[2] கேட்டும், அமைந்த மெய்ப்பரிசம் உற்றும்,
வெருவில்நல் திருநாமங்கள் விருப்பின் உள்துதித்தும், ஐந்தும்[3] [3]ஐம்புலன்களும்.
பொருவில் ஆனந்தம் எய்தப் பொலி[4]கடத்தீபம்[5] போன்றான்.

[2]உபசாரவார்த்தை. [4]விளங்கும். [5]குடத்திலிட்டவிளக்கு.

நீருறும் உப்புப்போலும், நெருப்புறு பளிதம்[1]போலும்,
ஏருறு வடிவத் தண்ணலிடத்துத் தன்மனம் கலப்பப்,
பேருறு பவஞ்ச[2]வாழ்க்கைப் பிணிப்[3]பொழிந்தகலக், கஞ்சத்
தாருறுமார்பத்[4] தையன் தன்னையும் மறந்திருந்தான்.[5]

[1]கருப்பூரம். [2]ப்ரபஞ்சம். [3]ஸம்பந்தம். [4]கஞ்சத்தாருறு மார்பன்—தாமரைமாலை யணிந்தவன் (தாமரைமாலை பிராமணர்களுக் குரியது). [5]அவசமாயிருந்தான்.

## கண்ணன் குசேலரோடு அளவளாவல்.

முனிவர் இங்ஙனம் இருக்க, அவருடைய வரவின் காரணத்தை அவர் சொல்லாமலே உணர்ந்துகொண்ட கண்ணபிரான் அவரைப் பார்த்துச் சொல்லலுற்றான்.

"பூன்ற தயை என்னிடத் தெப்போதும் நீ வைத்தருள்க.
ஆன்ற எனதுளத்தினைவிட் டகன்றிலை இந்நாள்காறும்:
சான்ற குணத்தாய்! இன்னும் சந்ததமும் நினைந்திருப்பேன்.
தோன்ற அனேகம் பெறினும் தொன்னட்பின் சிறந்தனவோ?

பூன்ற—பூரணமான. தொன்னட்பு—பழமையான சிநேகம்.

[நட்பு.]

ஆயின் மறைமுதல் கலைகளனைத்தும் உணர்ந்(து) அறம்[1]மறம்[2]பாத்[3] — [1]புண்ணியம்.
தே,இனிது நன்றிதுதீ தென்றுணர்த்தும் அவர் நட்பை — [2]பாபம்.
வீயினுந்தான் மறப்பார்களோ மேதையோர்? மறப்பரேல், — [3]பகுத்து.
நாயினும் கீழ்ப்பட்டவர்கள் அவர்காண் இந்நானிலத்தே.[4] — [4]பூமி.

பேயோடு பழகுறினும் பிரிவ தரிதரிதென்று
தூயோர்கள் மொழிவரால். தூயோரும் புகழ்தூயோ
ராயோர்கள் பெருநட்பை அருந்தவத்தால் பெறலன்றி
ஏ ஓ எண்மையின்[1] கிடைப்பின், இகழ்வரோ இகழ்வில்லார்? — [1]ஸுலபத்தில்

சமையம்வரின் இடித்துரைப்பார்; தக்கவழிச் செலச்செய்வார்;
இமையவர்தம் உலகுறவும் இருளுலகம் பகையுமாய்
அமைய அறிவுறுத்துவார். அந்தோ, நூல்கற்றுணர்ந்த — [1]க்ஷமை—பொறுமை.
கமை[1]யுடையார் நட்பெவர்க்குக் காண் கிடைக்கும்? அரிதரிது.

கூடுதற்குக் கூடாத கூட்டத்துப் படுமநட்பு
வீடுதற்குத் தக்கதாய் நாடோறும் மெலிந்தொழியும்.
நீடுதற்குத் தக்கது நன்னெறிநின்றோர் நட்பொன்றே.
தேடுதற்குக் கிடையாத திரவியமும் அஃதாமால்.

முத்திக்கு வித்தாகும் முழுதுணர்ந்தோர் பெருநட்பே
தித்திக்கும் நாடோறும்: தேவர் பெறற்கருந்திருவும்
சித்திக்கும்படி அருளும்: செப்பரிதால், அதுநிற்க.
எத்திக்கும் புகழு நினக் கியல்மணம் நன்காயிற்றே?

நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்பு பெரு நீர்மை[1]யளே? — [1] தன்மை.
மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா மாண்பினளே?
தன்னுடைய உயிரா நின்றனைப் பேணும் தன்மையளே?
உன்னுடை வருவாய்[2]க்குத் தக்கசெல வுஞற்றுவளே? — [2] வரும்படி.

பைங்குதலைவாய் மைந்தர் பலர் பிறக்கவேண்டுமே.
எங்கும் அரும்புக ழுடையாய்! எத்தனை மைந்தர்கள் பிறந்தார்?
அங்கவரைப் பேரவையோர் அணிதரச்செய் செயலனைத்தும்
சிங்கல்[1]றப் புரிந்தனையோ? செய்தனையோ உபநயனம்? — [1] குறைதல்.

நனை[1]முதல் சந்திசெபம் நன்கு நடக்கின்றனவே? — [1] ஸ்நானம்.
ஆனவிவை செய மெய் திடமாகி யிருக்கின்றதே?
மானமுறு மறைப்பொருளில் வைத்த தியானம் சிதறு
தீனமற நிற்கின்றதே? எவரும் சொலற்கரியாய்!

சீரார்நின் ஊர்நின்று சேர இவண் வருவாரால்
நீரார்நின் தன்மையெலாம் நென்னல்[1]வரைக்கும் தவறு — [1] நெருநல்—நேற்று.
தாராய்ந்து கொண்டிருந்தேன். அகன்ற பல நாள்களின் பின்
ஏ[2]ரார் இன்பம் சிறப்ப இருவேமும் கூடினேம். — [2] அழகு.

நள்ளார்கள் அண்மை[1]க்கண் இருந்தாலும் நட்புறுத்தார். — [1] ஸமீபம்.
விள்ளார்கள் சேய்மை[2]க்கண் இருந்தாலும் விருப்பொழியார். — [2] தூரம்.
தள்ளாத பல்பொருள்கள் தனைச்சூழ இருந்தாலும்
உள் ஆதவன்[3] கதிரை உறநோக்கும் நெருஞ்சியே. — [3] ஸூர்யன்.

ஐயநீ குடியிருக்கும் அணிநாட்டில் அதிகமழை[1]
பெய்யுமழையின்மை[2] கிளி விட்டில் முதல் பெருங்கேடு
வெய்ய கொடுங்கள்வர் வனவிருகம்[3] முதல் பலகேடு
நைய,[4] இனி துயரெலாம் நன்கு தழைக்கின்றனவே?

1 அதிவ்ருஷ்டி—வெள்ளக்கேடு. 2 அநாவ்ருஷ்டி—வறட்கேடு. 3 காட்டு மிருகம். 4 நசிக்க.

இளமையில் நாம் இருவரும் சாந்தீபமுனிவரிடம் ஓதுநாளில் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்த பேச்செல்லாம் நினைவிருக்கின்றதா? ஒருமுறை அவருடைய மனைவி சோறு சமைத்தற்கு எரிகரும்பின்றி, நம்மிருவரையும் அது கொண்டுவருமாறு வேண்டினரே. , அது தேடி நாம் காட்டில் திரியும்போது பெருங் காற்றுமழை அடிக்க, உடலும் எரிகரும்பும் நனைந்து திகைத்திருந்தோம். மழை மேலுமேலும் சோனுமாரியாகப் பெய்யவே வெள்ளம் அரையளவாக ஓட, இரவாகி இருள் கம்மிக்கொள்ள, நாம் ஒருவர் கையை ஒருவர் பற்றி, காலால் வழிதடவி, விடிகிறவரையில் குளிரில் இடர்ப்பட்டு ஓரிடமுற்றிருந்தனம். பொழுது விடிந்தபிறகு நம்முடைய குருநாதர் நம்மைத் தேடி வந்து, "உமக்குக் கல்விப்பொருள்போல் செல்வப்பொருளும் பெருகுக. நன்மனைவியர் வருக. மைந்தர்கள் பல்குக. சுற்றம் பெருகுக. வாழுநாளும் வளர்க" என்று ஆசிகூறி நம்மை அழைத்துப் போயினரே. ஈதெல்லாம் நினைவில் இருக்கிறதா? என்று வினவினான்.

### கண்ணன் குசேலர் கொண்டுவந்த அவலை உண்ணல்.

"பந்தனை அகன்ற மேலோய்! பற்பல நாட்குப் பின்பு
வந்தனை. எனக் கென் கொண்டுவந்தனை? அதனை இன்னே
தந்தனையாயின் நன்று. தருசுவைப் பக்கணத் தென்
சிந்தனை நின்ற" தென்றான் தெரிவரும் வஞ்சக்கள்வன்.

பந்தனை—கட்டு—தளை—tie, bond. பக்கணம்—பக்ஷணம்—சிற்றுண்டி.

"இனிய சிற்றுண வேதேனும் இன்றி நீ வருவாய்கொல்லோ?
இனியநின் உள்ளம் இன்றோ எண்ணி யான் அறிதல்வேண்டும்?
இனியநின் மனைவி வாளா எகிவா என்பளோ? மற்
றினிய எற்கன்றி யார்க்குக் கொண்டுவந்திருக்கின்றாயே?

வாளா—சும்மா. எற்கன்றி—(எற்கு + அன்றி)—எனக்கன்றி.

"திருந்த இங்களித்தி" என்று செங்கரம் மலர்த்தி நீட்டப்,
பொருந்த இன்பால் உண்பான்பால் புளித்த காடியைக் கொடுத்திட்(டு)
அருந்திடென் றுரைத்தல்போல், 'இவ் அவற்கொடை' என்றுவாளா
இருந்தனன் குசேல மேலோன். இவனுளம் அறிந்த கண்ணன்,

மலிதரும் அன்பின்வந்த வண்பொதி அவிழ்த்து நோக்கி,
'வலிதரும் அவற்றுள் நன்று வாய்த்தது நமக்கி' தென்று,
ஒலிதரு கழற்கால் ஐயன் ஒருபிடி அவலைக் காதல்
பொலிதர எடுத்து வாயில் போகட்டுக்கொண்டான் மாதோ.

மலிதரும்—மிக்க. பொதி—முடிச்சு—மூட்டை.

"செறிதரு சுவைத் தீது. என்றும் தேவர்க்கும் அரியதாகும்.
அறிதரு விருப்பின் இல்லின் அமைத்ததே: பழைதும் அன்று.
குறிதரு விலைப்பால் சென்று கோடல் இவ்வளத்ததோ?" என்
றுறி அளை[1] வாரி உண்டோன் ஒருபிடி அவல் தின்றானே.

[1] தயிர்.

"முன்னும் இவ்வவல் ஒன்றேனும் முனைமுறிந்ததுவும் இன்று;
பன்னும் முட்டையும் இன்றாகும். பட்ட அங்கையும் மணக்கும்.
கொன்னும் வாய் செறிப்பின் அம்ம குளமும் வேண்டுவதின்" றென்று
உன்னுபல் உலகமுண்டோன் ஒருபிடி அவல் தின்றானே.

குளம்—சர்க்கரை.

"நாட்டும் இவ்வவல் விருப்பம் நமக்கு மிக்குள்ளதென்று
கேட்டுளாய் 'கொல்லோ? முன்னும் கிளந்திருப்பதுவு மன்றே" என்
றேட்டு மென்மலர்ப் பூந்தொங்கல் இமையவர்க் கமிர்தம் முன்னாள்
ஊட்டிய புகழின்மேலோன் ஒருபிடி அவல் தின்றானே.

கிளந்திருப்பது—சொல்லியிருப்பது.

குசேலருடைய அன்பினையும் கூட்டி இங்ஙனம் ஒருபிடி அவலைத் தின்று, மற்றொருபிடி எடுத்து வாயிலிடப் போகும்போது, உருக்குமணிப்பிராட்டி பொருக்கென ஓடிவந்து கணவன் கையைப் பிடித்துக் கொண்டாள். அவன் தின்ற ஒருபிடி அவலுக்கே சகம் கொள்ளாத

பெருஞ்செல்வம் கிடைக்கும்: அஃதன்றி மீட்டும் ஒருபிடி யெடுத்து உண்டால், கண்ணன் குசேலருக்குப் பலநாளும் அடிமையாய் அமர வேண்டுமே என்றஞ்சியே அந்தப் பிராட்டி அவன் கையைப் பிடித்துத் தடுத்தாள். உண்ட ஒருபிடி அவலோடு மிகு மகிழ்ச்சி கொண்டு துதித்துப் பல முகமன் சொன்னான். அன்றிரவு அந்தப்புரத்தில் கண்ணன் ஒரு படுக்கையிட்டு அதில் முனிவரைப் பள்ளிகொள்ளச் செய்தான்.

## குசேலர் விடைகொண்டு திரும்புதல்.

வைகறையில் விழித்தெழுந்து, கடன் பலவும் முடித்துக்கொண்டு, முனிவர் கண்ணனிடம் விடைபெற்று ஊர்க்கு வழிக்கொண்டார். கண்ணன் வாயில்வரை உடன்சென்று அடியில் விழுந்து வணங்கி மீண்டான்.

ஈதெல்லாம் கண்ட மாதர்கள் ஒருவரோடொருவர் பலவிதமாய்ப் பேசிக்கொண்டனர்:—

"தாய் எதிர்வுற்ற சேய் என உள்ளம் தழைவுற்றான்.
போய் எதிர்கொண்டான்; காலில் விழுந்தான்; புனைவித்தான்[1].
நேயம் உளானென் றா ரறிவித்தான். நீங்கென்றான்.
சேய்மையன் ஒத்தான்: நன்றிது" என்றார் சிலமாதர்,

[1] அலங்காரம் செய்வித்தான்.

"பார்த்திபர்[1] பல்லோர் காத்தனர் நிற்கப் பாரானைக் — [1] அரசர்.
கூர்த்த[2]மதிப் பூசுரன்[3] எதிர்கொண்டான். கொண்டாடிப் — [2] மிக்க.
பூர்த்தி மிகுந்தான். அந்தோ வாளா போகென்றான். — [3] பார்ப்பான்.
சீர்த்தி மிகுந்தான் அன்றே" என்றார் சிலமாதர்.

"துன்றிய அன்பின் கட்டியணைத்தான்; தொழுதிட்டான்;
பொன்திகழ் பள்ளிமீ தமர்வித்தான்; புகழ்ந்திட்டான்;
ஒன்றும் அளித்திட்டானலன். உதயத் துன்னூர்க்குச்
சென்றிடுகென்றான்: நன்றிது" என்றார் சிலமாதர்.

"எளியோன் பாவம்! இத்தனை தூரம் ஏன் வந்தான்?
அளியார் தேனே பாலே என இனிதாப் பேசிக்
கிளியாயின் ரேர்காசும் ஈயான், கழிகென்றான்.
தெளியார் நல்லோர் இவனுரை" என்றார் சிலமாதர்.

"எத்துணைய செல்வம் மிகுத்திருந்தாலும் ஈத்துவத்தல் இவன்பால் இல்லை.
மெத்து நயமொழிகளால் மயங்கி ஒன்றும் கேளானாய் விரைந்து போனான்
பித்துறு மாமறையவனும். இவனும் மகிழ்ந் தாறனுப்பிப்[1] பெயர்ந்துவந்தான்.
கொத்துறும்[2] இந்நட் பிருந்தென்? இராதொழிந்தால் என்?" என்று குயின்றார்[3]
[சில்லோர்.

[1]வழிவிட்டு. [2]திரண்ட. [3]சொன்னார்.

குசேலமுனிவர் துவாரகையின் தெருக்களைக் கடந்து, கடலையும் கடந்து, தன் ஊருக்குச் செல்லும் வழியைக்கூடி, மிகமகிழ்ந்து நடந்தார்.

# III. குசேலர் செல்வம் நுகர்ந்து வைகுந்த மடைதல்.

## திரும்பி வருகையில் வழியில் நேரிட்ட அற்புதங்கள்.

அருந்தவர்கள் புகழ்சீர்த்தி அமைந்த திருக் கண்ணபிரான் அருளினாலே,
பொருந்து விரதாதிகளால் மிக்கிளைத்த தன்னுடம்பு பூரிப்புற்ற(து).
இருந்த பழங்கந்தை செழும்பொன் ஆடையாயிற்றால். இலங்குகண்டப்
பெருந்துளப மணியாரம் பெருவிலை முத்தாரமாய் பிறங்கிற்றாலோ.[1]

[1]விளங்கியது.

பாய பெருமிடி முன்னே தனக்கொழிந்த அவித்தையெனப் பாறி மாய்ந்த(து).
ஏய வழிநடையிளைப்பு முதலியவெலாம் சற்றும் இன்றாய்விட்ட.
காயவெயில் குளிர்ந்தது. பாலையும் நீரூறிற் றிளமென்காலும் வீசிற்(று).
ஆய இவையனைத்தும் உணர்ந் திறும்பூது மிகக்கொண்டான். அன்ன காலை,

பாய—பரவிய. அவித்தை—அஞ்ஞானம். பாறி—ஓடி. இறும்பூது—ஸந்தோஷம்.

ஒழுகும் கடவரையும், கதிர் உறழ் செம்பொன் இரதமும், [1]பிடரிமயிர்
எழுவெங்கதி உளை[1]பொங்கிய இயல்[2]தங்கிய பரியும், [2]லக்ஷணம்
கொழுநின்றவை[3] அயில்[4]கொண்டவர் குழுவும், பலகுழுமப் [3]கூர்மை.
பழுதென்ப திலவர் மன்னவர் பலர்வந் தெதிர்கொண்டார். [4]வேல்

கடவரை—(கடகம்—மதஜலம். வரை—மலை)—மதத்தையுடைய மலை, யானை. இலவர்—இ(ல்)லவர்—இல்லாதவர்.

மணிவார்முடி மண்தோய்தர மறைமாமுனி தாளில்
பணிவார்சிலர், துதிப்பார்சிலர், படர்அன்பினில் வழிபட்
டணிவார்சிலர், பார்ப்பார்சிலர், ஆர்ப்பார்சிலர், ஆகிக்
கணிவார்புய விறல்வேந்தர்கள் கழலாக்களிப் புற்றார்.

கணி—க(ண்)ணி—மாலை. விறல்—வெற்றி. கழலா—நீங்காத.

பொன்னார்வடவரை[1]மேல் கதிர்ப் புத்தே[2]ளெனப் பொலிய
மின்னார் கதிர்உமிழும் ஒரு வியன்[3]மாமணித் தேர்மேல்
முன்னார் மறையோனைப் பல முகமன் புகன் றேற்றி,
நல்நா[4]ரொடு பெருவேந்தர்கள் சூழா நடந்தனரால்.

[1]மேருமலை. [2]ஸூர்யதேவன். [3]பெரிய. [4]அன்பு.

மண்ணென்பது தெரியாவகை வானத்திடை அமரர்
கண்ணென்பது நுழையாவகை கற்பத்தரு மலரை
எண்ணென்பதும் இன்றாம்வகை இறைத்தார், களித்தார்த்தார்.
புண்ணென்பது பொலிவேலவர் பூத்தார் இறும்பூது.

"இவையெலாம் எம்பிரான் அருள்" என நினைந்து சென்று முனிவர் தம்முடைய ஊர்ப்புறம் அடைந்தார்.

மற்படு கானமெல்லாம் மாடமாளிகையே யாகிச்
சொற்படு புலவராலும் சொலற்கருஞ் சிறப்பு வாய்ந்து,
விற்படும் அமரர்நாடு வீழ்ந்து மண் இறைகொண்டாற்போல்
அற்படுத் தொளிர்ந்த(து). ஐயன் அருளினிற் சிறந்ததுண்டோ?

வில்—ப்ரகாசம். இறை—தங்குதல். அல்படுத்து—இருளைக்கெடுத்து.

## ஊரினர் எதிர்கொள்ளல்.

உள்ளே புகுங்கால் அந்நகரிலுள்ளார் அழகிய கையுறைகளோடும் அஷ்டமங்கலங்களோடும் பல வாத்தியங்களோடும் எதிர்கொண்டு அழைத்துச் சென்றனர். முனிவருடைய வைபவத்தைக் கண்ட மாதர்கள்

"மனம் மொழி காயம் என்ன வகுத்திடு கரணம்[1] மூன்றும்
கனம்[2] விளர்ப்பெனக் கறுத்த[3] கண்ணன்தன் அடிக்கே யாக்கி,
தினமும் நன்னெறியில் நிற்கும் செயி[4]ரிலாச் சீர்த்தியான் இப் [4]குற்றம்.
பனவனுக் கிதுவோ செல்வம்? பகரரி தினும் உண்" டென்பார்

[1]கருவி. [2]மேகம். [3]மேகமும் வெண்மையென்னலாம்படி அவ்வளவு கறுத்த.

"புயல்[1]நிகர் வண்ணத் தண்ணல் பொருவில்[2] அம்போருகக் கண்
நயனுறச் செல்லுமாறே நல்திருமகளும் செல்வாள்.
பயனு றிப்பனவன்மேல் அப்பார்வைமிக் காயிற்(று). அந்தச்
செயலினுக் கேற்குமா றத்திருவும் வந்துற்றாள்" என்பார்.

[1]மேகம். [2]பொரு இல்—ஒப்பில்லாத. அம்போருகம்—தாமரை. பனவன்—பார்ப்பான்.

"கரிசறு மனைவி பல்கால் வேண்டிடக் கண்ணன்பால் சென்
றரிய அன்போடும் தன்னால் உதவிய தளித்துக் கண்டு,
வரிசைகள் மிதப்பப் பெற்று, வளர்பெருந் திருவும் பெற்றிப்
பரிசு வந்தனன் நம்போல்வார் பாக்கியம் அனையான்" என்பார்.

கரிசு—குற்றம். இப்பரிசு—இவ்விதம்.

## மனைவளம் காணுதல்.

அவர்கள் அங்ஙனம் சொல்லியிருக்க, முனிவர் தம் மனைவாயிலை அடைந்தார். தமது சிற்றிலைக் குடில் முன்னை நிலைமாறிப் பெருமாளிகையாய் விளங்கக் கண்டார். மணிகள் இழைந்த அணிகலன் பூண்டு அழகிய ஆடை உடுத்து மனைவி முனிவரை எதிர்கொண்டழைத்தாள்.

வந்தனை புரிந்து பைம்பொனுதனத்தின் மகிழ்நனை நிறுத்தி, உள்மகிழ்ந்து
சந்தமென் மடவார் செம்மணிச் சிரகத் தண்புனல் வாக்கிடத், தன் பொன்
செந்தளிர்க் கரத்தால் திருவடி விளக்கிச், சிறந்தவெண் பட்டினால் ஒற்றிக்,
கந்தநல் வருக்கம் பூசி, மென்மலரால் கட்டிய மாலையும் சாத்தி,

சிரகம்—கரகம். புனல்—ஜலம். வாக்கிட—வார்க்க.

விரைகெழு தூமம்[1] தவழ்தரக் கோட்டி,[2] மிளிர்தரு விளக்கமும் காட்டிக்,
கரையில் பல்மணி நீராஞ்சனம்[3] வளைத்துக் கடி[4] திருபாலினும் எறிந்து,
புரை[5]யில் கற்புடையாள் வணங்கினள் நிற்பப், புயலெனப் பல்லியம்[6] குளிற[7],
வரையெனப் பணைத்துக் கதிரொளி[8] மழுக்கும்[9] மாளிகைக் கெழுந்தருளினனே.

[1]வாஸனை பொருந்திய புகை. [2]வளைத்து. [3]ஆலாத்தி. [4]கடிது—சீக்ரம். [5]குற்றம். [6]பல் இயம்—பல வாத்தியம். [7]சப்திக்க. [8]ஸூர்யப்ரகாசம். [9]மழுங்கச் செய்யும்.

ANMIYUR

இரசிதக்[1] குவையும், காஞ்சனக்[2] குவையும, இலகுறு செம்மணிக் குவையும்,
தாளம்[3]வெண் குவையும், வச்சிரக் குவையும், சாற்றரும் மரகதக் குவையும்,
பரவிய கிரணச் செந்துகிர்க்[4] குவையும், பாய மேதகப்[5]பெருங்குவையும்,
அரதந[6] வகையில் மற்றுள குவையும் அறைதொறும் கிடப்பன கண்டான்.

[1]வெள்ளி. [2]பொன். [3]முத்து. [4]பவளம். [5]கோமேதகம். [6]இரத்தினம்.

பொற்கலப் பேழை, மணிகலப் பேழை, புரையில் வெண் பொற்கலப் பேழை,
விற்படு விசேடக் கலன் நிறை பேழை, மேவிய இருபத்தேழ் மகாரும்
அற்புறீ அணியத் தனித்தனி வகுத்த அணிகலப் பேழை, பல்நிறத்த
சொற்பெறு விலைப்பட் டடுக்கிய பேழை தொகையிலா திருப்பன கண்டான்.

வெண்பொன்—வெள்ளி. அற்புற—அற்புஉற—அன்போடு.

குருமலர் செம்பொன்கலம் எதிர்வைத்துக் கோறுறு வெள்ளிய முரல்,[1]
பருகுதற் கமைந்த இன்சுவைக் குழம்புப் பால்விராய்[2] உபசரித்தூட்டத்,
திருகுபு வேண்டா என்மரு[3]ரும், அதனைத் திருமிப்பாராது செல்குநரும்,
அருகிய[4] பசியும் இல்லை என்மருமாய், அணிமகார் செருக்குதல் கண்டான்.

[1]சோறு. [2]கலந்து. [3]என்பார். [4]கிட்டிய.

வயிரவொண் சுட்டி நுதல்மிசைப் பொலிய, மார்பிடை ஐம்படை விளங்கக்,
கயில்செறி தொடரும் கடகமும் கரத்தில், காதில் அம்பொன்குழை தயங்கச்,
செயிரறு பொன்ஞாண் அரைமிசைக் கதிர்ப்பச், சிறுசிலம் படிகளில் கவினப்,
பயில்தரு மைந்தர் கலகலவெனப் பண்பினின் றுடுதல் கண்டான்.

ஐம்படை—ஐம்படைத்தாலி—பஞ்சாயுதம்—a gold ornament worn by children on the neck bearing in relief the five weapons of Vishnu.

தளவரும் பனைய கரிசில் வால் அரியும், தயங்கு செம்பொன்னிறப் பருப்பும்,
வளமிகு குறையாக் கறிகளும், குறைத்த மாண்கறிக் குப்பையும், மற்றைக்
கிளர்தரும் உபகரணங்களும், உலோகமேழினும் கெழுமுறச் செய்த
பளகறு கலங்கள் பல்லவும், அடுமில் பரப்பெலாம் பொலிவன கண்டான்.

தளவரும்பு—முல்லையரும்பு. வால் அரி—வெண்மையான அரிசி. கெழுமுற—பொருந்த. பளகு—குற்றம். அடுமில்—சமையலறை.

## விருந்தோம்பல்.

அப்பால் நீராடி நியதிக்கடன் முடித்து போஜனசாலையில் புகுந்தான்.

இந்திரன்திசை[1] நோக்கினனாய் உவந்திருந்தான். [1]கிழக்கு.
நந்தரம்பை[2] அம் பேரிரு பாசிலை[3] நயக்க [2]வாழை.
முந்தரிந்த வாய் வலம்பட முன்பு போகட்டார், [3]பசுமையாகிய இலை.
சிந்தை யன்பொடு கரகநீர் புரோக்கித்துத் திருத்தி.

நிலவு மெய்ப்பணி மாதரார் எடுத்துக் கை நீட்டக்,
கலவ மாமயில் சாயல்அம் கற்புடை மனையாள்,
குலவு தன்கையால், குய்கமழ் கருனை, நல் வறையல்,
பலவும், இன்புளி விரவிடாப் பாயதீங் கறியும்,

கலவம்—கலாபம். குய்—தாளிப்பு. கருனை—பொரிக்கறி. விரவிடார்—கலவாமல்.

அறை[1]யை நேர் ததி[2] ஐயவி[3] அளாவிய கறியும், [1]பாறை.
முறையில் முற்று வேவா தடு முதிர்சுவைக் கறியும், [2]தயிர்.
குறைவில் புன்னிலப்[4] பயறொடு கூட்டிய கறியும், [3]கடுகு.
நிறையும் நெய்ப்பசை அறு நிகரறு புளிங்கறியும், [4]புன்செய்.

கதிக்கு மற்றைய கறிகளும், ஊறிய காயும்,
உதிக்கும் நோலை[1]யும், அடையும், மற்றுள்ள சிற்றுணவும்,
விதிக்கும் சித்திர அனங்க[2]ளும், மேவு பாளித[3]மும்,
பதிக்கும் அன்பொடு பேரிலை புதைபடப் படைத்து,

[1]ஒருவகைச் சிற்றுண்டி. [2]சித்திரான்னம்—பலவகைச்சாதம். [3]பாற்சோறு.

முல்லை வீ[1]யினை நிகர்தரும் மூரலும் படைத்து, [1]அரும்பு.
வல்ல பொன்னிறப் பருப்படு திரளையும் வைத்து,
நல்ல ஆனநெய்க் குடம் கவிழ்த், திவ்வகை நயப்ப
எல்லையில் மறையவர்க்கும் மைந்தருக்கும் பாங்கியற்றி,

ஆனநெய்—பசுநெய்.

உவந்து முன்னர்நின் றுண்கமா என் றுபசரிப்பத்,
தவம் தழைத்த மாமறையவன் தருவன உண்ணா,
இவர்ந்த[1] ஆசையின் விலாப்புடை வீங்க உண்டெழுந்த [1]மிக்க.
நிவந்த[2] வேதியர் குழாத்தொடும் எழுந்தவண் நீந்தி, [2]சிறந்த.

உண்கமா: மா—வியங்கோளொடுவரும் அசைச்சொல். குழாம்—கூட்டம்.

வளங்கொள் நீரில் வாய்பூசினன். நியதியின் வகையும்
களங்கமில் மறையவரொடும் இயற்றினன்; கந்தம்
தளங்கொள் பூந்தொடை விரைகெழு பாகடை தாங்கி.
விளங்கும் மன்னர்முன் யாவர்க்கும் இவ்வகை விரும்பி,

வாய்பூசுதல்—வாயலம்பல். பாகடை (பாகு—பாக்கு. அடை இலை)—தாம்பூலம். நியதியின் வகையும் இயற்றினன் என்பது "முக்காற் குடித்துத் துடைத்து முகத் துறுப், பொத்தவகையால் விரலுறுத்தி வாய்பூசல்" என்பது. மன்னர் முன்—அரசர் முதலான.

விருந்து செய்தனன். சாந்தம்பூப் பாகு வெள்ளிலை[1]யும் [1]வெற்றிலை.
திருந்த நல்கினன். அவரவரிடம் புகச் செலுத்தி,
பொருந்தும் இவ்வகைப் போகத்தில் சிற்சினாள் போகக்,
கருந்துழாய் கமழ் சேவடி கமழ்தரும் உளத்தான்.

## ஞானசமாதி.

ஒருநாள் ஓரறையினை அடைந்து, மக்களும் மனைவியும் உறாதபடி. தாளிட்டுக்கொண்டு, ஒருத்தனாயிருந்து சிந்திக்கலானான்.

"இம்மைதனில் மற்றிரும்பொருளை ஈட்டல் காத்தல் அழித்தலென
வெம்மைபுரி மூவகைத் துயரும் விளையாநிற்கும். பாவத்தால்
அம்மை நிரயத் துயரும் உறும். அந்தோ! சீசீ! இப்பொருளைச்
செம்மையுடையோர் வேண்டுமெனச் சிந்தித்திடுவரோ மறந்தும்?

தானல் உடலை[1] யானென்றும், தன்னோடுரிமை யல்லாமை
ஈனமுறு பல் பொருளனைத்தும் எனதென்றும் உறநினைத்து
மானவயர்[2] பற்றினுக் கேது மயக்கம். அதனை மாய்ப்பவனே
வானவரும் செல்லரும் உலகம் புகுவான் என்னும் மறைநூல்கள்.

[1]தான் அல்லாத உடல் (ஆத்மா வேறாகையால்). [2]அயர்—வாட்டம்; distress.

எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் எழுமைப் பவமும் ஈன்றிடும் வித்
தொல்லா அவாவே. அப்பவத்தின் உறுதுன் பறிந்தோன் உறியாமை
யல்லால் மற்றும் வேண்டுமோ? வேண்டானேல். அவ்வுறியாமை
சொல்லார்ந் திலங்கும் வேண்டாமைதன்னை வேண்டத் துனைவின் வரும்.

ஒல்லா—பொருந்தாத. வேண்டாமை—அவாவில்லாமை: அவாவைநீக்குதல். துனைவின்—விரைவில்.

ஆதலால் இம்மனைவாழ்க்கையகத்தே யிருந்து முத்திதனைப்
போத அடையத் துணிவதுதான்; புணை[1]யா மஞ்சு[2]துயில்பொருப்[3]பைக்
காதல்மிகுதியால் பெயர்த்துக் கத்தும் தரங்க[4]க் கடலிடையிட்(டு)
ஏதம்[5] அகல அது[6]பற்றி ஒருவன் கரையேறுதல் போலும்.

[1]தெப்பம். [2]மேகம். [3]மலை. [4]அலை. [5]துன்பம். [6]அந்தப்புணையை.

மனையில் பெருஞ்செல்வத் துறைவோன், மருவு தியானமுறச் சிறிது
நினையில், காணவருவாரை நேர்சென் றழைத்துத் தழுவிடவும்,
வினையத்தினும் விநோதத்தினும் விரும்பிப் பேசிடவும், அவர்கள்
நினையப்பட்ட தளித்திடவும் பொழுது கழியும்; நினைப்பழியும்.

நினைப்பு—தியானம்.

ஒன்றும் பெறுதலிலர் எனினும், உற்ற பெருஞ்செல்வத்தினர்பால்
சென்றுகொளும் நட்புடையரெனத் தேயம் சொலற்கே சிலர் சூழ்வார்.
மன்ற[1] என்றுமியினும் ஓர்பயன் வழங்கலாகும் என, மூடல் [1]நிச்சயமாக.
துன்று நறுநெய்க்குடத் தெறும்பு சூழ்தல்போலும், சிலர் சூழ்வார்.

பொறையின்றேனும் பொறையுடையாய், புகழின்றேனும் புகழுடையாய்,
நிறை[1]யின்றேனும் நிறையுடையாய், நீதியுடையா யின்றெனும்,[2] நல்
துறையின்றெனு[3]நல் துறையுடையாய் என்றுசூழ்வர் கேட்டவர்கள்.
அறைகின்றனர் பல்லோரும் நமக்கமைந்தவெலாம் என்றகங்களிப்பர்.

[1]மனவுறுதி—moral firmness. [2](நீதி) இன்றேனும். [3]துறை இன்றெனினும்.

களியில் தெய்வசிந்தனையும் கழிந்தேநிற்கும். அதுகழிய
அளியின் சிறந்த நல்லறமும் அகன்றே நிற்கும். அஃதகல
ஒளியிற்றிடவந் திருளடைந்தாங் குடற்றும் பாவம் வந்தடையும்.
விளியின் கொடிய நிரயமெலாம் புகுந்துகிடக்கும் வேலை மிகும்.

உடற்றும்—வருத்தும். விளியின்—இறந்தால். நிரயம்—நரகம்.

அந்த நிரயத் துன்பத்தைப் படுவார் எவர்? அதனை நினைத்தாலும் உள்ளம் உளைகின்றது. இவற்றுக்குக் காரணம் செல்வமே. இவ் வருத்தமெல்லாம் ஒழியும்படி எம்பிரானை வந்தித் துதிப்பேன்" என் றெண்ணி, தசாவதார வைபவங்களையும் வைத்துப் போற்றுதல் செய்து, கண்கள் நீரரும்ப இரண்டு கைகளும் தலையின்மேல் குவிய நெக்குருகி மனக்கசிவுற்றனர்.

### பழையபடி வறுமையே வேண்டுமென்று பகவானோடு ஸம்வாதம்.

அப்போது துந்துபி முழங்க, தேவர்கள் பூமழை பொழிய, பகவான் பிராட்டிசமேதனாய் மனோவேகத்தினும் விரைந்துவந்து எதிரில் தோன்றினான்: தோன்றி "குசேலமுனிவனே, நீ விரும்பியது என்ன?" என்றான். முனிவர்

"மனமொழியுடலம் என்னவகுத்திடு காரணம் மூன்றும்
தினமும் நின்திருவடிக்கே செலுத்தும் நாயடியேன், இந்தக்
கனவெனும் செல்வத் தாழ்ந்தோ களித்து நாள் கழியாநிற்பன்?
உனதடியவர் பூந்தாளில் உறப்பணிந் துய்தல் நீங்கி.

"முன்னரே வெறுத்து வேண்டா இதுவென முனிந்து, செல்வம்
பின்னர் கைக்கொள்வேனாகில், பேரறிவுடையனன்றே.
அன்னதும் அன்றிக் கொண்ட விரதமும் அழித்தானேனேன்.
நன்னர் நெஞ்சுடைய நீரார் நகைக்கும் நாணுது நின்றேன்.

"உடலழுக் ககற்றத் தூநீர் உற்றவன், அள்ளல் வாரி
இடனுறப் பூசிக்கொள்வான்கொல்? இருகாலும் யாத்த
தொடர்செய் பொன் நிகளம் சீக்கத் துணிந்தவன், இரும்பால் செய்யப்
படு பெரு நிகளம் பூண்டுகொள்வனோ பாரிடத்து?

அள்ளல்—சேறு. யாத்த—கட்டிய. நிகளம்—சங்கிலி, விலங்கு.

"அதலால் ஐய இந்த அநித்தியச் செல்வம் வேண்டேன்.
மேதக முன்னிருந்த மிடியதே இன்னும் வேண்டும்.
காதலின் அடியார் வேண்டும் காரியம் அளித்துக் காக்கும்
நீ தயைபுரிந் தென் உள்ளக்கருத்தினை நிரப்பு" கென்றான்.

அநித்தியம்—நிலையில்லாதது. மேதக—மேன்மைபொருந்த.

அல்கலில் அன்பன் வார்த்தை அனைத்தையும் செவிமடுத்து,
மல்கு மாமறைகட் கெட்டா மாயவன் முறுவல்பூத்துப்,
"பல்கு நன்பொருள் வேண்டாது பயனின்றிக் கழிந்த தீய
நல்குர வளித்தி என்ற காரணம் நவிற்று" கென்றான்.

அல்கல்—சுருங்கல். முறுவல்—சிரிப்பு. நல்குரவு—தரித்திரம். நவிற்றுக—சொல்லுக.

"தெள்ளு[1] காரணந்தான் முன்னர்ச் செய்த விண்ணப்பத்தாலே
வெள்ளிடை[2] விலங்கல்[3]போல விளங்குபு[4] கிடந்த தைய!
உள்ளுதல்[5] முதல யாவும் இயல்பினின் உணராநிற்கும்
வள்ளல்! நீ அறியான்போல வினவுதல் மாட்சித்தேயோ?

[1]தெளிவான. [2]வெளி. [3]மலை. [4]விளங்கி. [5]நினைத்தல்.

"செய்யநின் அடி[1]த்தியானம் செய்து நாள் கழியாநிற்பேற்(கு)
ஐய! ஈ திடையூறாகி அடைந்த(து). இங்கிதனைப் போற்றிப்
பொய்படு பவஞ்ச[2]வாழ்க்கைப் புலை[3]த்தொழில் பாரம் பூண்டு
நைபடும்[4] உள்ளத்தேனாய் நாடொறும் கழிதல் நன்றோ?

[1]திருவடி. [2]ப்ரபஞ்சம். [3]இழிவு. [4]நசிகின்ற.

"எம்பிரான் கருணைசெய்க" என்றிரந் தடியில் வீழ்ந்தான்.
"வெம்புறேல். கவலையெல்லாம் விடுதி" என் றுடலம் ஂதவந்(து)[1]
"உம்பரார்க்[2] கரிய இன்பம் உறுவை[3]" என் றுரைக்கலுற்றான்,
தும்பி[4] காலுழக்க மட்டு[5]த் துளித்திடும் துளபத்தாரான்.

[1]தடவிக்கொடுத்து. [2]தேவர். [3]அடைவாய். [4]வண்டு. [5]தேன்.

## பகவான் குசேலருக்குத் தேற்றரவு சொல்லல்.

''திருவம்[1] நன்களித்த துன்னைச் சேர்ந்தவர் நிமித்தம் கண்டாய்.
ஒருவில் நின்னுள்ளம்போல் அன்னா ருள்ளமும் துறவிற்றேயோ? [1]செல்வம்.
மருவிநிற் சார்ந்தார் துன்பின் வயங்குதல் அழகிதாமோ?
பொருவிலா முனிவரேறே! அஃதெண்ணிப் புந்திமாழ்கேல்.[2] [2]மயங்காதே.

''நின்னை அச்செல்வம் என்னே செய்யும்? நேர் அதகத்தோடு
பன்னுமந்திரம் உள்ளாரைப் பாம்பின் வாய்விடம் என்செய்யும்?
மன்னு செங்கதிரோன்தன்னை மயங்கிருட்குழாம் என்செய்யும்?
உன்நிலை தவறாதென்றும் ஒருபடித்தாய் நிற்பாயால்.

அதகம்—மருந்து. இருட்குழாம்—இருளின்கூட்டம். ஒருபடித்தாய்—ஒரேவிதமாய்.

''சாற்றும் மெய்யறிவினோர்கள் தகுதொழில் இயற்றுங்காலை
மாற்றுதலின்றாய்த் தாம் தாமரையிலை நீர்போல் நிற்பர்.
போற்று நின்றனக் கிந்தப் பந்தம் பொருந்தாது. பன்னாள் வாழ்வுற்(று)
ஈற்று நம்முலகம் சார்ந் தின்பெய்திட வரம் தந்தேமால்.

''திகழ்தர இருத்தி. மீட்டும் செல்வம் வேண்டுவ தின்றெனின்,
புகழ்தரு நம்தம் காதற்பொன்னை[1] நீ இகழ்ந்தோனானாய்.
இகழ்வினுக் கஞ்சி அன்னாள் இரிதர[2] இரிவம்[3] யாமும்.
அகழ்வினை[4]த்தவத்தின் மேலோய்! அழுத்தி டிவ்வுரையை உள்ளம்''

[1]லக்ஷ்மியை. [2]ஓடிப்போக. [3]ஓடிப்போவோம். [4]வினையை அகழ்ந்த (அகழ்தல்—தோண்டுதல்).

என்று முனிவர் மறுக்க முடியாதபடி பல வார்த்தைகளைச் சொல்லி பகவான் அந்தர்த்தானமானான். முனிவரும் ''இவன் திருவுள்ளம் இருந்தபடி இதுவோ'' என்றெண்ணி, அவன் இணையடி மறவாது நெடுங்காலம் வாழ்ந்திருந்தார்.

## குசேலர் வைகுந்த மடைதல்.

*ஒப்பிலா முனிவன் பின்னர் ஒருதினம் வானநாடர்*
*வெப்பிலாக் கற்பகப்பூ விரைகெழு மாரி பெய்ய,*
*வைப்பின் மெய்யடியார்க் காய வைகுந்த உலகம் சார்ந்து*
*திப்பிய உருவ மாயன் சேவைசெய் தின்புற்றானே.*

வைப்பு—பெருமை. திப்பியம்—திவ்யம்—தெய்விகமானது. சேவை—வழிபாடு

# முன்னுரை

வடமொழியில் பலகவிஞர் வகுத்துரைத்த அரிச்சந்திரசரித்திரத்தையும் தமிழ்மொழியில் வழங்கியிருந்த அரிச்சந்திரவெண்பாவையும் முதனூல்களாகக் கொண்டு நல்லூர் வீரக்கவிராயர் விருத்தப்பாக்களால் அரிச்சந்திரபுராணம் என்கிற வழிநூலை இயற்றினார். இந்நூல் கி. பி. 1524-ம் வருஷத்தில் திருப்புல்லாணி என்கிற திருப்பதியில் திருமால் ஸந்நிதியிலே சக்கரதீர்த்தக் கரையிலுள்ள மண்டபத்தில் அரங்கேறியது.

விதியின் அரசிழந்த அரிச்சந்திரன்தன்
வியன்கதையாம் வெண்கவியை விருத்தமாக்கி
அதிவிதமாம் கலியுகத்தில் வருசகாப்தம்
ஆயிரத்து நானூற்று நாற்பத்தாறில்
சதிர்மறைதேர் புல்லாணித் திருமால் முன்னே
சக்கரதீர்த்தக் கரைமேல் மண்டபத்துள்
கதிதருசீர் நல்லூர் வாழ் வீரன் ஆசு
கவிராசன் கவியரங்கம் ஏற்றினானே.

இந்நூலில் உள்ள 1200 விருத்தங்களில் ஸ்த்ரீவர்ணனையானவைகளையும் உத்ப்ரேக்ஷை உயர்வுநவிற்சியானவைகளையும் விட்டொழித்து, உரையிடையிட்டெழுதிய இப்பதிப்பில் 200 விருத்தங்களே எடுத்திருக்கின்றன.

குசேலோபாக்கியானத்திற்போலவே இதிலும் அவ்வச்செய்யுளின்கீழ்ச் சில அரும்பதங்களுக்கு மாத்திரமே உரை எழுதியிருக்கிறது. இயன்றமட்டில், சந்தி பிரித்தெழுதியிருப்பதால் மாணவர் அநேக பாடல்களின் பொருளை ஸுலபமாய்த் தாங்களே அறிந்துகொள்ளலாம்.

# அரிச்சந்திர புராணம்

## அரிச்சந்திரன் சந்திரமதியை மணத்தல்.

ஸூர்யவம்சத்தரசர்கள் இருந்து அரசியல் நடத்தியது கோசல நாடு. அந்நாட்டுக்கு ராஜதானி அயோத்திமாநகரம். அரிச்சந்திரன், பாலகுமாரனாய் அரசாட்சி செய்திருந்தபோது, ஒருநாள் கொலுமண்டபத்தில் சிங்காசனத்தில் வீற்றிருந்தான்.

இருந்தகாலையில், யாவர்க்கும் விடைகொடுத்தருளித்
திருந்து மாமுடி மன்னவன் சிலருடன் இருப்பப்,
பொருந்து நன்னெறிப் புண்ணியதீர்த்தங்கள் ஆடி
அருந்தவத்தினர் அநேகர் வந் தந்நகர் அடைந்தார்.

சடையும், முண்டமும்,[1] சிகையும்,[2] நுண்டாது[3] கல்தோய்ந்த
உடையும், மாமரவுரிகளும், உடுத்தழகிருந்த
இடையும், தாழ்சிறு பண்டி[4]யும், எய்த்திளைத் தோய்ந்த
நடையும், வாழ்த்தலுஞ் சபித்தலு முந்துறு நாவும்,

[1] மொட்டைத்தலை. [2] குடுமி. [3] தாது-காவிக்கல். [4] வயிறு.

நூலும், மார்பமும், நூலிடைத் திகழ்ந்துற நுடங்கும்
தோலு[1]ம்; அங்குலித் தருப்பை[2]யும், துளங்கும்ஒண்செவியில்
நாலும்[3] யாககுண்டல[4]ங்களும், நான்மறைநெறிமுக்
கோ[5]லும், ஏந்திய குடைகளும், குண்டிகைக் கரமும்,

[1] மான்தோல். [3] தொங்கும். [5] திரிதண்டம்.
[2] விரல்களில் தர்ப்பைமோதிரம். [4] யாகதீக்ஷிதர் என்பதாகிய குண்டலங்கள்.

இன்ன கொண்டுளே இருடிகள் யாவரும் எய்தி,
அன்னசத்திரம் அணைந்து புக்கனர் அயர்வுயிர்த்து,[1] [1]ஆயாஸம் தீர்ந்து.
முன்னம் வாரிதி[2] ஆர்ப்[3]பெடுத்தாலென முழங்கி [2]ஸமுத்ரம்.
மன்னர்மன்னவன் மாளிகை வாயிலில் வந்தார். [3]முழக்கம்.

அவர்களை எதிர்கொண்டுபசரித்து ஆசனங்களில் இருக்கச்செய்து,

"எந்தத் தேயங்கள் கண்டனீர்? எத்திசை புகுந்தீர்?
எந்தத் தீர்த்தங்கள் ஆடினீர்? புதுமை என் கண்டீர்?
முந்தக் கூறுமின்" என் றரிச்சந்திரன் மொழிய,
அந்தக் காலையில் அரசனுக் கருந்தவர் உரைப்பார்.

"அங்கண் மாநிலத் தரிய கன்னோசிநாட் டகத்துப்
பொங்கு கண்டகி என்பதோர் புண்ணியதீர்த்தம்.
அங்கு யாம் புகுந்தாடி, நின் அருள்முகம் காண
இங்கு வந்தனம். இன்னமும் கேட்டி" என்றிசைப்பார்:—

"அந்தநாட்டினில் கன்னமாபுரிநகர் ஆள்வோன்,
சந்திரன்வழிச் சந்திரதயன் தவம்புரிந்து,
கந்தவார்சடைக் கடவுள்தன் வரத்தினால் பயந்த
சந்த[1]நன்முகத் தையல், சந்திரமதியென்பாள், [1]அழகு.

"மண்மடந்தையர்[1]தம்முளும், வாசவன்[2] உறையும் [1]பெண்கள்.
விண்மடத்தையர்தம்முளும், நிகரிலாவிறல்[3]வேல் [2]இந்திரன்.
கண்மடந்தை, அந்தண்குழல் அருந்ததிக் கற்பின் [3]வெற்றி.
எண்மடங்கு கற்புடையள்: இந்திரை[4]யினும் எழிலாள். [4]லக்ஷ்மி.

"அன்னதன்மையளை, அமிர்தினில் பிறந்த அணங்கபிடேக[1]த்தை, அனந்த மன்னர்தந்தமக்கு மணஞ்செயக் கருதி மணமொழிந்தவர்க்கெலாம் கொடாது, 'முன்னம் எம்பெருமான் மொழிந்தவற்கன்றி முடிக்கிலேன் கடிமணம்' என்னச் சொன்ன தோர்மொழியும் கேட்டனம். அவள்நின் தோள்களுக் கிசைந்தவள்."
[என்றார்.

[1]அமுதத்தில் தோன்றின லக்ஷ்மிக்குத் திருமுடி போல்பவள்.

அந்த வார்த்தையைக் கேட்டு அரிச்சந்திரனுக்குச் சந்திரமதியை மணஞ்செய்துகொள்ளவேண்டும் என்கிற *விருப்பம் உண்டாயிற்று.

கரையழி காதல் ஆற்றை அறிவெனும் கரைசெய் தாற்றி
வரையன புய[1]த்து மன்னன், முனிவரை நோக்கி, "மாதர்க்
கரசியை அடியனேனுக் கணிமணம் புணர்க்க நும்வாய்
உரையுளதாயின், என்மாட் டுயிருளதாகும்" என்றான்.

[1]மலைபோன்ற புஜம்.

"அல்லி[1]யங்குழலாள்தன்னை அருமணம் அடியேன் சூட்டக் [1]அகவிதழ்.
கல்லியல் சுர[2]மும் காடும் கடந்து கால்வருந்த நீர் போய், [2]பாலைவனம்.
வல்லியைப் பயந்தோற் கண்டு மணமொழிந், தந்தவேந்தன்
சொல்லிய நெறிகேட், டென்பால் வருக"என் றினிதுசொன்னான்.

அவர்கள் அங்ஙனமே மீண்டும் கன்னோசிநாட்டை அடைந்து மதிதயன் ஸபையில் புகுந்தனர். அவர்களைக் கண்ட மதிதயன்—

"வானம் நீர்பொழிந்து முத்தம் மணிகொழித் தருவிபாய்ந்த
கானம் நீர்பெருகும் தெய்வ கண்டகி என்னும் தீர்த்தத்
தானம் நீராடி, என்தன்தலைக் கடிமுடிகள் சூட்டி[1]ப்
போனநீர், உடனே மீண்ட அருத்தி[2]யென்? புகலும்" என்றான்.

1—என் சிரஸுக்கு உங்களுடைய பாதங்களைக் கிரீடமாகச் சூட்டி: அதாவது, உங்கள் திருவடிகளில் நான் நமஸ்காரம்பண்ண. [2]ஆர்த்தி—விருப்பம்.

"மன்ன!கேள்—சென் றயோத்திமாநகர் புகுந்து, யாங்கள்,
அந்நகர்க்கரசன் நீதிஅருள் அரிச்சந்த்ரன் என்பான்,
நின்னகர் வளமும் நின்றன் நெறியும் நின்மகள்தன் எரு[1]ம்
சொன்னபின், நின்பால் எய்தும்[2] உவகையே துணிந்துநின்றான்.

[1]அழகு. [2]உன்னிடம் வருவதான.

"அறநெறிமிக்கோர்தம்பால் அருந்ததிக்கற்பினளைப்
புறநெறி போகாவண்ணம் வருந்தியும் பொருந்தச்செய்தல்
மறநெறி[1]யன்று. மாயா மாதவந்தன்னில் மிக்க
திறநெறி. அதனால் நின்பால் சேர்ந்தனம் செல்வ!" என்றார்.

[1] தீய செய்கை.

"புவனம் உள்ளளவும் யாங்கள் புக்கறிந் தனேககோடி
நவநரபதிகள்[1] தம்மைக் கண்டனம். நறுந்தார் வேந்தே!
சிவன் நல்க நீ பயந்த திருமகள்தனக்குக் கேள்வன்[2]
அவனலதில்லை" என்ன வகுத் தவர் எடுத்துரைத்தார்.

[1] புதிய அரசர்கள். [2] நாயகன்.

அதுகேட்டு மதிதயன்.—

"மூவராயவரில் முன்னும் மூர்த்தியார்[1] அருளிச்செய்த
தேவராசியம்[2] ஒன்றுண்டால். அன்னது தெரியவல்லார்
யாவராயினும் யான் பெற்ற இளங்கொடிதனக்குக் கேள்வர்
ஆவரால். அவன் இங்கெய்தின் அறியலாம், அழையும்" என்றான்.

[1] திரிமூர்த்திகளில் முதலான சிவபெருமான். [2] தேவ ரஹஸ்யம்.

அதுகேட்டு முனிவர்கள் திரும்பினர்.

சுயம்வரம் ஏழுநாளளவு உள்ளதென்று அரசருக் கறிவிக்குமாறு மதிதயன் தூதும் ஓலையும் அனுப்பினான். செய்தி தெரிந்தவளவில் அரசர் பலர் கன்னோசிநாட்டில் சென்று சேர்தலாயினர். அரிச்சந்திரனிடம் முனிவர்கள் வந்து தாங்கள் சென்ற செய்தியை அறிவித்தனர். தேர் கொண்டுவரும்படி ஏவி அரிச்சந்திரன் தேரில் ஏறினான். முனிவர்கள் வானில் ஏறினர். ஆறுகளையும் மலைகளையும் காடுகளையும் கடந்து அரிச்சந்திரன் கன்னோசிநாட்டில் கன்னமாபுரியில் மதிதயனுடைய அரசிருக்கை மண்டபத்திலே புகுந்தான். முனிவர்களும் சென்றடைந்தனர். அரிச்சந்திரனைக் கண்டு ஸந்தோஷித்துச் சந்திரதயன் சிங்காதனத்தை விட் டிறங்கிவந்து எதிர்கொண்டு தழுவி, உடன்வந்த முனிவருக்கும் அரசருக்கும் ஆசனங்கள் கொடுத்து உபசரித்தான். அரசரும் அமைச்சரும் அரிச்சந்திரனுடைய அழகைக் கண்டு அதிசயித்தார்கள். சந்திரதயன்—

"சிவன் நமக்கருளிச்செய்த திருவுளப்படியே, காண்ப[1]
திவன்றனக் கெய்துமாயின், எழை[2]யும் யானும் செய்த
தவமும் மாதவமாம். அல்லால், தவமும் என்தனையைப்பேறும்
அவம்[3]" என எண்ணியெண்ணி அளவிலா தழுங்கலுற்றான்.[4]

[1] சந்திரமதியின் மங்கல்யத்தைக் காண்பது. [2] பெண். [3] வீண். [4] கிலேசிக்கலானான்.

அடுத்தநாளில் மணப்பந்தலில் வந்துசேர்க என்று மதிதயன் அரசர்களை நோக்கிச் சொன்னான். அவ்வளவிலே அரசரெல்லாரும் தத்தம் விடுதிகளுக்குச் சென்றனர். மதிதயன் தன் மாளிகைக்குப் போனான்.

முன்னம் மன்னன் முகூர்த்தம் ஒரேழெனச்
சொன்ன நற்றினம் வந்து தொடங்கலும்,
மன்னனும் மறையோர்களும் நாத[1]ரும்
கன்ன[2]லம் திருக்காவண[3]த் தெய்தினர்.

[1] பெரியோர். [2] கரும்பு. [3] பந்தல் (கல்யாணப்பந்தல்)

வேந்தர் ஈண்டினர்; வேதியர் ஈண்டினர்;
மாந்தர் ஈண்டினர்; மங்கையர் ஈண்டினர்;
ஆய்ந்தநீதி அமைச்சரும் அவ்வவர்ச்
சேர்ந்த சேனையும் சேரவந் தீண்டின.

சந்திரமதியைக் கூட்டிக்கொண்டு தோழிமார் வந்து அவளுக்கு அரசருடைய ஊர் பேர் முதலானவைகளை முறையாக எடுத்துச் சொல்லிவந்தனர். இவன் சேரன், இவன் பாண்டியன், இவன் சோழன், இவன் குருநாடன், இவன் குகுதநாட்டரசன், இவன் மகதநாட்டரசன், இவன் கவுடவளநாடன், இவன் சிந்துநாடன் என்று சொல்லிச் செல்கையில், இவன் கோசலநாட்டரசன் என்றனர்.

மந்தரம்[1] அனையதோள் வள்ளல் பேர் சொலச்,
சுந்தரத்தோகைமார் தோளைத் தாழ்த்தி, அச்
சந்திரமதி அரிச்சந்திரன்றனைக்
கந்தரம்[2] நீட்டி உட்கருத்து நோக்கினாள்.

[1] மந்தரமலை. [2] கழுத்து.

அங்கைவேல்மன்னனும் ஆசை மீக்கொள[1] 1மேலாக.
மங்கைதன் பங்கயவதனம்[2] நோக்கினான்; 2தாமரைபோன்றமுகம்.
செங்கயற்கண்ணினாள் திருக்கழுத்தினில்
மங்கலநாண் உறீஇவயங்கக்[3] கண்டனன். 3பொருந்திவிளங்க.

"கன்னியென் றெண்ணினம்; கன்னியோ அலள்.
முன்னரே மங்கலம்பூண்ட மொய்குழல்
இன்னமும் ஒருவருக் கெய்துமோ?" எனா
மன்னவன் மாதுலற்[1] குரைவழங்கினான். 1மாமன்.

"பொறுத்துமுன் மங்கலம் பூண்ட பேதையை
மறுத் திரண்டாவது மணம் முடிப்பரோ?
சிறுத்தவர் செய்தொழில் திரைவரைப்[1]பதில் 1கடல்சூழ்ந்தபூமி.
நிறுத்தினீர் நீர்" எனா நெடிதுகூறினான்.

வள்ளல் ஈதுரைத்தலும், மதிதயன் தன
துள்ளம்விட் டோங்கிய உவகை[1]யம்பெரு 1ஸந்தோஷம்.
வெள்ளம் உள்ளடக்கியே "வேந்தர்காள்!இவன்
கள்ளமோ மெய்ம்மையோ கட்டுரைத்த[2]தே? 2சொன்னது.

"தையலாள் கழுத்தினில் தாலி உண்டெனில்
கையினால் கண்ணுறக் காட்டும் நீர்"எனச்,
செய்ய கை யறைந் தணிமூக்கில் சேர்த்தி, "இவ்
ஐயனும் பொய்யன்"என் றரசர் கூறினார்.

"மண்டலவேந்தன் எம் மடந்தை மங்கலம்
கண்டதும் நீங்கள்தாம் கண்டிலாததும்
திண்டிறலீர்[1]! ஒரு தேவராசியம்
உண்"டென மதிதயன் உரைப்பதாயினான்.

1மிகுந்த ஸாமர்த்யம் உள்ளவர்களே.

"அண்டர்[1]நாயகன் வரமளித்த நாளையில், [1]தேவர்.
'வண்டணிகுழலி[2]யோ டுதித்த மங்கலம்
கண்டவர் பதி[3] இவட்' கென்ற கட்டுரை [3]நாயகன்.
உண்(டு).அஃதன்றி வேறுண்டு. கேட்டி[4]ரால். [4]கேளுங்கள்.

[2]வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலை யுடையவள்.

"மஞ்சன[1]ச்சடையினுன் வரத்தில் வந்த நாள்,
கஞ்சன[2]நீழலில் காண்பதன்றியே,
அஞ்சன[3]க் கண்ணிக்கும் அங்கை[4]க் கெய்திடா(து).
எஞ்சலில்[5]யாவரும் யானும் கண்டிலேம்"

(கங்காஜல) அபிஷேகம். [2]கண்ணாடி. [3]மை. [4]அழகிய கை. [5]குறைவில்லாத.

என்றலும், வல்லி முன்எண்ணிய நாமம்[1]
ஒன்றல துள்ளுற உன்னலளாகிச்
'சென் றவன்மார் பிது சேர்'கென உன்னு
மன்றலர்[2] மாலையை வானில் எறிந்தாள்.

[1]அரிச்சந்திரனுடைய பெயர். [2]மணம் விரிகின்ற.

வஞ்சி வழங்கிய மாலை அணிந்தோன்
செஞ்சுடரின் முகம் நின்றொளிசெய்ய,
வெஞ்சுடர்[1]முன் சசி[2]யாமென மிக்கோர் [1]ஸூர்யன். [2]சந்திரன்.
கஞ்ச[3]முகங்கள் கரிந்தன வன்றே. [3]தாமரை.

மாதர்கள் ஆர்த்தனர்; வானவர் ஆர்த்தார்;
கீதர்கள்[1] ஆர்த்தனர்; கேளிரும் ஆர்த்தார்; [1]கீதங்கள் பாடுவோர்.
சூதர்[2]கள் ஆர்த்தனர்; துறவரும் ஆர்த்தார்; [2]பாடுவோர்.
வேதர்கள் ஆர்த்தனர் வேலை[3] யடங்க. [3]கடல்.

நல்லியல் நூலறி நாவலர் பாடப்,
பல் இயமும் பல பாடலும் ஆர்ப்ப,
அல்லிமலர்த்தொடை மாலை அணிந்தே
வல்லியும் மன்னனும் மாளிகை புக்கார்.

சிலநாள் கழிந்தபிறகு அரிச்சந்திரன் சந்திரதயனிடம் விடை பெற்றுக்கொண்டு சந்திரமதியோடு அயோத்திக்குத் திரும்பினான்.

சிலகாலம் சென்றபிறகு சந்திரமதி ஓராண்பிள்ளையைப் பெற்றாள்.

பிள்ளைவந்து பிறந்தனன் என்றலும்,
வள்ளல் உள்ளமகிழ்ந் திரவோர்[1]க்கெலாம் — [1]யாசகர்.
"அள்ளிநீர் அறை[2]யைத் திறந் தேழுநாள் — [2]பொக்கிஷ அறை.
கொள்ளை கொண்மின்" எனக் கொடுத்தான் அரோ.

ஆவலின் அரிச்சந்திரன்மைந்தனை
மூவரன்ன[1]முனிவர்கள் வாழ்த்தியே, — [1]மும்மூர்த்திகளை ஒத்த.
யாவரும் நிகரில்லவற் கேற்றிட[2]த் — [2]தகுதியாக.
**தேவதாசன்** எனப்பெயர் செப்பினார்.

[முதல்வரியில் 'ஆவயின்' என்றும் பாடம் உண்டு.]

தேவதாஸனுக்கு ஏழுவயதாயிற்று.

**இந்திரன் ஸபையில் வஸிஷ்ட விசுவாமித்திர முனிவர்களுடைய சபதம்.**

தேவலோகத்தில் அமராவதி பட்டணத்தில் ஒருநாள் இந்திரன் தன் ஸபையில் சிங்காதனத்தில் வீற்றிருந்தான். தேவர்களும் அசுரர்களும் சித்தர் வித்தியாதரர் இயக்கர் கின்னரர் முதலானவர்களும் துதித்திருந்தனர். வஸிஷ்டர் விசுவாமித்திரர் உள்ளிட்ட பலமுனிவர்களும் வந்து கூடியிருந்தார்கள். இந்திரன், அவர்களை ஆசனங்களில் வீற்றிருக்கச்செய்து, "ஓ முனிவர்களே! பூலோகத்தில் பழிபாவங்களுக் கிடங் கொடாமல் சாஸ்திரவிசாரணை செய்து சத்திய சீலர்களாய் விளங்கும் அரசர்களில் சிறந்தவர்கள் இன்னாரென்று சொல்லுங்கள்" என்று கேட்டான். அப்போது வஸிஷ்டர்,

"பாருக்கொருவன், பரதாரசகோதரன்,[1] வெம்
போருக்கொருவன், புகழுக்கும் மறைப்பொருட்கும்
நேருக்கும் விடாமனுநூனெறிக்கும் பொறைக்கும்
ஆருக்கு மிக்கான், அரிச்சந்திரனாகும்" என்றான்.

[1]அன்னியர் மனைவிகளுக்கு ஸஹோதரனானவன்.

வஸிஷ்டரிடம் வஞ்சம் வைத்துள்ள **விசுவாமித்திரர்** வஸிஷ்டரை நோக்கி

"வெய்யன், பதகன், பரதாரவிருப்பன், வீணன்,
பொய்யன், நிறையும்பொறையும் சிறிதுமில் புல்லன், [1]வஞ்சகன்.
கையன்[1], கபடன், கயவன்[2]றனை நல்லன் என்றிவ் [2]புத்தியீனன்.
ஐயன்திருமுன் உரைத்தாய். இதென்னுக?" என்றான்.

அதுகேட்டு வஸிஷ்டர்,

"தீவெந்தொழிலின்றி ஒப்பற்றமெய்ச் செவ்வியோனைக்
காய்வெந்திறலால் இவைகூறிய கௌசிகா! நின்
வாய்வெந்திலை: நின்மனம் வெந்திலை: வம்புசொன்ன
நீ வெந்திலை. தெய்வமும் நின்வயின் பொய்த்த" தென்றான்.

உடனே விசுவாமித்திரர்

தெய்வந்தனை நொந்து வசிட்டன் இச்செய்தி செப்பக், [1]பழகிய.
கைவந்த[1] கொடுந்தொழில் கௌசிகன் கன்றி[2]நோக்கிப் [2]கோபித்து.
"பொய்வந்த நின்வாய் புழுவாகுதலன்றிப் பொய்யா
மெய்வந்த என்வாய் மனம் வேவல" என்றுசொன்னான்.

அவ்வளவில் வஸிஷ்டர் கண்களிலே நெருப்புப்பொறி பறக்கக் காலருத்திரனைப்போல் கோபங்கொண்டெழுந்தார். விசுவாமித்திரரும் அங்ஙனமே கோபம்பொங்கியெழுந்தார். அதைக் கண்டு பயந்து

ஆற்று நெடுவெஞ்சினம் ஆற்றியமர்த்தி, உள்ளம்
தேற்று,[1] மகவான்[2] திருச்செம்மலர்க்கையமைத்துக்,
"கூற்றால்[3] விளைவாவன கண்டிடில், கூறும்நீர்மை
தோற்றால், இழிதக்கது செய்வ தென்? சொன்மின்" என்றான்

[1]தேற்றி. [2]இந்திரன். [3](உங்கள்) சொல்லால்,

அன்பால் கடலாய வசிட்டன் அழன்று, "மன்னன்
தன்பால் தவறுண்டெனக் கௌசிகன் சாய்க்கின்,[1] அன்றே
என்பால் தவம்விட் டிழிகள்[2] தலையோட்டின் ஏந்தித்
தென்பால்[3] தனிச் செல்குவன் யான். இது திண்ணம்" என்றான்.

[1]காட்டினால். [2]இழிவானகள். [3]யமலோகத்துக்கு.

"அரிச்சந்திரனுடைய மனதை அறியாமல் வஸிஷ்டர் இப்படிப் பட்ட சபதத்தைச் சொல்லார். நீர் தெளிந்து உம்முடைய சபதத்தைச் சொல்லும்" என்று நாரதர் கூறக் கேட்டு,

"நன்றாருக" என்றவன் நாரதனுக் குரைத்துப்
"பின்றாய் அவன்போல் பெரும்பாடை[1] பிதற்றமாட்டேன்.
வென்றானெனின் யான்செய்த மெய்த்தவந்தன்னில் பாதி
குன்றாமல் ஈவேன்" எனக் கௌசிகன் கூறினனால்.

["பின்றுதிவன்போல்"–பாடபேதம்.]
[1]பாஷை. இங்கே சபதம்.

நாரதர் "இதுவே போதும் போதும். அரிச்சந்திரனிடம் நான் போய் இங்கே நடந்தவைகளைச் சொல்லாதபடி என்னை இங்கே தேவர்காவலில் வைத்து, நீர் போய் அரிச்சந்திரனுடைய நீதிக்கிரமத்தையும் தருமத்தினது நேர்மையையும் பரிசோதித் தறிந்துகொள்ளும். போம்" என்று சொல்லி, தேவர் காவலில் இருந்தார்.

ஸபை கலைந்தது. முனிவர்கள் தங்களிடம் போயினர். விசுவாமித்திரர் இந்திரனை ஆசீர்வதித்து மகா மேருமலையின் சாரலில் தாமிருக்கிற சோலைக்குப் போனார்.

## யாகத்துக்குப் பொருள்கொடுப்பதாக அரிச்சந்திரனிடம் விசுவாமித்திரர் வாக்குறுதி பெறுதல்.

இந்திரனுடைய ஸபையிலே தாம் சொல்லிய வார்த்தையை மெய்ப்பிக்கும் உபாயம் என்னவென்று விசுவாமித்திரர் ஆலோசித்திருந்தார். அவரைக் காணும்படி சில முனிவர்கள் வந்தனர். அவர் "நான் ஒரு

சிறந்த யாகத்தைச் செய்துமுடிக்கவேண்டும். நீங்கள் அரிச்சந்திரனிடம் போய், நான் கேட்கிற பொருளைக் கொடுக்கும்படி ஸம்மதிக்கச்செய்து வாருங்கள்" என்றுசொல்லி அவர்களை அரிச்சந்திரனிடம் அனுப்பினார். அவர்கள் அங்ஙனமே சென்று அரிச்சந்திரனுடைய ஸம்மதம் பெற்று வந்து, அது செய்தியை விசுவாமித்திரருக்குத் தெரிவித்துப் போயினர்.

அப்பால் விசுவாமித்திரர் அரிச்சந்திரனிடம் சென்று, "யாகத்தின் பொருட்டாக நீ கொடுக்கும்படி ஸம்மதித்த பொருளைக் கொடு" என்றார். அரசன் "எவ்வளவு பொருள் வேண்டும்?" என்றுகேட்டான். முனிவர் "ஒருவன் யானையின்மேலிருந்து எறிந்த கவண்கல் எவ்வளவு தூரம் போகுமோ அவ்வளவு பொருள் வேண்டும்" என்றார். அங்ஙனமே கொடுப்பதற்கு அரிச்சந்திரன் ஆயத்தப்படுகையில், முனிவர் "அப் பொருளனைத்தும் உன்னிடத்திலேதானே இருக்கட்டும். யாகம் செய் யும்போது பெற்றுக்கொள்ளுகிறேன்" என்றுரைத்துத் திரும்பினார்.

### விசுவாமித்திரர் ஏவிய மிருகங்களையும் மாயப்பன்றியையும் அரிச்சந்திரன் வதைத்தல்.

தமது தவப்பெருமையால் பல மிருகங்களையும் பக்ஷிகளையும் வரு வித்து விசுவாமித்திரர் "நீங்கள் போய் அரிச்சந்திரனுடை நாட்டிலுள்ள சீவன்களையும் சோலைகளையும் பயிர்களையும் அழித்துவாரும்" என்றேவி னார். அவைகள் சென்று அவ்வாறு செய்திருக்கையில், அதனைக் குடிக ளாலறிந்த அரசன், வேடர்களோடு சென்று வேட்டையாடி, அவைகளைக் கொன்றான்.

அதனைக் கேள்வியுற்ற விசுவாமித்திரர், தமது தவமகிமையால் ஒரு மாயப்பன்றியை உண்டாக்கி, "நீ அரிச்சந்திரனுடைய படைத் தலைவர் வேடர் முதலானவர்களைக் கொன்று அரிச்சந்திரனை இங்கே கொண்டுவந்து விடவேண்டும்" என்று சொன்னார். மாயப்பன்றி போய் அதிக சேதம் உண்டாக்கியது. அரசன் அப்பன்றியையும் வென்று தன் பரிவாரங்களுடன் வந்து ஒரு சோலையில் மிகவும் அலங்காரமான ஒரு தடாகக்கரையில் அமைத்த கூடாரத்தில் தங்கினான்.

### விசுவாமித்திரர் அனுப்பிய புலைச்சியரை அரிச்சந்திரன் வெறுத்தல்.

தோல்வியுற்ற மாயப்பன்றி வருத்தமுற்று விசுவாமித்திரரிடம் சென்று நடந்த செய்தியைச் சொல்லியது. அதைக் கேட்டவளவில் அவருக்கு அரசன்மீது மிகுந்த கோபம் உண்டாயிற்று. அக்கோபத்தில் அதிக அழகுள்ள இரண்டு பெண்கள் உதித்தனர். கோபத்திலிருந்து பிறந்தமையால் அவர்கள் புலைச்சியராயினர். அப்போது சில முனிவர்கள் வந்து, அரசன் ஸமீபத்தில் உள்ள சோலையில் தடாகக் கரையில் தங்கியிருப்பதைத் தெரிவித்தார்கள். உடனே விசுவாமித்திரர் அந்த இரண்டு பெண்களையும் பார்த்து, "நீங்கள் அரிச்சந்திரனிடம் சென்று, உங்கள் பாடலால் அவனை உருகும்படி செய்து, அவனுடைய வெற்றிக்குடையை வாங்கிவாருங்கள்: அது கூடாதாயின், அவனை விவாகஞ்செய்துகொண்டாயினும் வாருங்கள்" என்று கட்டளையிட்டனுப்பினார். அவர்கள் அரசனிடம் சென்று, வீணையைக் கையிலே கொண்டு, ஏழிசைகளையும் வகைவகையாய்ப் பாடினார்கள்.

காவி[1]யங்கண்ணும் மூடா; கவர்[2]இதழ்தானும் கோடா; [1]நீலோற்பலம்.
வாவியங்கமலம் அன்ன வதனமும் நுதலும் ஏறா; [2]இரண்டுபட்ட.
தூவியந்தோகைநல்லார், சுவரின்மேல் எழுதிவைத்த
ஓவியம் பாடிற்றென்னப் பாடினார் உருக யாரும்.

அட்ட[1]மா[2] அனைத்தும் புள்ளும்[3] ஆவிபெற் றேகும் என்பார்; [1]கொன்ற.
சுட்டநீள் வனங்களெல்லாம் சோலையாத் தழைக்கும் என்பார்; [2]மிருகம்.
பட்டவாள் வீரரெல்லாம் உய்வகை பலிப்ப தென்பார்; [3]பறவை.
வட்டமாமதியம்[4]அன்ன வதனத்தார் பாடல் கேட்டே. [4]பூரணசந்திரன்.

நாடெலாம் அழிக்கக்கேட்டு நரபதி[1] வெகுண்டு வேட்டை [1]அரசன்.
யாடலால் வெருண்டுபோய்த் தம் ஆருயிர் ஓம்பி[2]த் துன்றும்[3] [2]காத்து.
காடெலாம் கரந்த மாக்கள், கன்னியர் மதுரகீதப் [3]நெருங்கிய.
பாடலால் வெளிப்பட்டுற்ற; பறவையும் பறந்த வம்மா.

அரசன் மனமகிழ்ந்து பலவித ஆபரணங்களைப் பரிசாக அளிக்கப் போக, அந்தப் பெண்கள் அவைகளை வேண்டாவென மறுத்து, முனிவர் கூறியவாறு கேட்டனர். அதற்கு அரசன் உடம்படவில்லை.

"கொடுப்பன கொடுப்பதல்லால் கொடாதன கொடுக்கமாட்டார்;
விடுப்பன விடுப்பர்; என்றும் விடாதன விடவுமாட்டார்;
தொடுப்பன தொடுத்து நும்மால் சொல்வன சொல்லி, நுங்கட்
கடுப்பன கொண்மின்: அல்லால் அகன்மின்" என் றமைச்சன் சொன்னான்.

"வள்ளலென் றடைந்தோம். உன்பால் வந்திரந்தோர்க் கொன்றீயாக்
கள்ளனென் றறிந்தால், இங்கு வருகலம் கண்டாய்" என்றார்.
உள்ளமும் கண்ணும் செந்தீ உருத்தெழச் சினந்து வேந்தன்
தள்ளுமென் றருளிச்செய்தான், விளைவது[1]தன்னை ஓரான்[2].

[1] இனி நடக்கப்போகிறது. [2] அறியான்.

அப்போது காவல்வீரர் கோபித்து நெருங்கிவருவதைக் கண்டு, அந்தப் பெண்கள் உடலும் கைகால்களும் நடுங்க, மார்பில் அணைத்திருந்த வீணையை அங்கே போகட்டு ஓடிப்போயினர்.

ஆறுகொண் டோடார், செல்லா அடவியில் சென்று, மேனி
மாறுகொண் டுதிரம் சிந்த, மஞ்சி[1]னைப் பழித்த கூந்தல் [1] மேகம்.
தூறு[2]கொண் டீர்க்கச், சேர்த்த துகில் கிழிந்தகலச், சாப [2] Thicket.
வீறு[3]கொண் டேவிவிட்ட முனிவன்முன் வீழ்ந்தார் வந்து. [3] பெருமை.

அதைக்கண்டு கோபங்கொண்டு விசுவாமித்திரர் "இப்படி வந்த காரணம் என்ன?" என்று கேட்டார். அவர்கள் நிகழ்ந்ததைச் சொல்ல, முனிவர், கோபம் அதிகரித்து, இனி அரசனுக்குத் துன்பத்தைச் செய்வதே செய்யத்தக்க கார்யமென்று ஆலோசித்துக்கொண்டு, தவமுனிக் கூட்டங்களுடனே ரௌத்ராகாரமாய்த் தடாகக்கரைக்கு வந்தார். அதைக் கண்டு

"கடல்கள் என்படும்? நெடுந்திசைகள் என்படும்? அகன் ககனம்[1] என்னும்?
உடல்கள் என்படும்? அவற்றுயிர்கள் என்படும்? இடிந் துலகம் என்னும்?
விடலருந்தவமுடைப் பெருவலிக் கௌசிகன் வெகுளியால்"என்
றடல்[2]நெடுஞ்சிலையவன் கடிதெழுந் ததிர்நடந் தடிபணிந்தான்.

[1]ஆகாசம். [2]வெற்றி.

'உருமி[1]டித்தன எனச் சினமிகுத் திகல்[2]செயற் குறுவதற்குக்
கருமிடற்றவன்[3] அலேன், கடனிறத்தவன்[4] அலேன், கமலன்[5] அல்லேன்.
கிருமியிற் கடையனும் எளியனோ வலன்?" எனக் கெழுமி ஏகுற்
றிருமலர்க்கழல்[6]களைக் காமுறத் தழீஇ நிலத்திடை கிடந்தான்

[1]உருமு—இடி. [2]சண்டை. [3]நீலகண்டனான சிவன்.
[4]கடல்வண்ணனான விஷ்ணு. [5]பிரமதேவன். [6]பாதம்.

காமுறத் தழுவலும், கௌசிகப் பெயரினன் கால்பறித்தே,
சிரமிசைத் திருமுடிச்சுடர்மணித்தொகைகள் பஃறிசை[1] தெறிக்க,
உரமி[2]சைப் பணி[3] தெறித்திட உதைத்தனன். உதைத்திடலும் "உன்தன்
மரு[4]மலர்க் கழல் சிவப்புறும்" எனக் கைகளால் வருட[5]லுற்றான்.

[1]பல்திசை—பலதிக்கு. [2]உரம்—மார்பு. [3]ஆபரணம். [4]வாஸனை. [5]தடவுதல்.

'குடியின் நிற்பிடை[1] பிழைத்திலம். உனக் கடிமையின் குறையு மில்லேம்.
இடிஇடித்தனவெனச் சினமிகுத் திடைவிடா தெனை உதைத்த
அடி வடுப்படு[2]மெனக் கவலுகிற்பதையொழிந் தைய! என்தன்
முடி வடுப்படுமெனக் கவல்கிலேன். வெகுளிஎன்? மொழிதி" என்றான்.

[1]உமக்குக் குடியாய் நிற்றலில். [2]காயமாகும்.
["குடியினிற்பிழை யிழைத்திலம்" என்றும் பாடம்.]

"மாவினை[1]த் துணிசெய்தாய்; கேழலு[2]க் கிடர்செய்தாய்; வான்அளாவும்
காவினைப் பொடிசெய்தாய்; நீதியால் ஈன்ற என் காதல்மக்கள்
பாவினைப் பழிசெய்தாய்; தீவினைக்குரிய ஓர்பாவி நீதான்
ஆ[3]வின் நற்றோல் பொதிந் தடுபுலி[4]த்தொழில் செய்தாய். அழகி" தென்றான்.

[1]மிருகங்களை. [2]பன்றி. [3]பசு. [4]கொல்லும்புலி.

"நாடழித்திடினும், நன்னகர் அழித்திடினும், என் நறுமலர்ப்பூங்
கூடழித்திடினும், நீள்கால்[1] அறக் கிளை[2]யினைக் களையினும், கொன்
றீ[3]டழித்திடினும், நீதான் விடுத்தனையெனு[4] யான்அறிந்தால்,
பாடழித்திடுவேனோ?" என் றரிச்சந்திரன் பல மொழிந்தான்.

1ஸந்ததி. 2சுற்றம். 3ஈடு—பெருமை. 4என்று.

"சிறியரானவர்தமக் குரியவேயல்லவோ தீமை? நன்னூல்
அறிஞரானவர்தமக் கல்லவோ பொறை? பிறர்க் காகுமோதான்?
நெறியிலா வினையினேனொருவனைப் பொருளதா நீ முனிந்தால்,
பொறையும் நின்னருளும் என்னளவிலோ இலவெனப் போன" என்றான்.

மடித்த வாயினன், மிகக்கொதித்த நெஞ்சினன், "எதிர்மறுத்து நீதான்
படித்த வாசகமெலாம் எனக்கு நீ பிதற்றிடற் பாலவோதான்?
வடித்த எழிசை நினக் கிசைக்கவே வந்த என் மக்கள்தம்மை
அடித்த காரணமெலாம் எனக்கு நீ தக்கவா றறைதி" என்றான்.

"இக் கருங்குழல் ஏழையர்தம்மை நின்
மக்களென்ப துணர்ந்திலன். மாதவ!
தக்கவா றுரையாமையின் தள்ளினேன்.
புக்க தீது[1]. பொறுத்தருள் நீ" என்றான். 1நடந்தசெய்தி இது.

"கழுத்தரிந்து கைப்பிழை வந்ததென்
றழுத்தமாக உரைத்தனை. ஆதலால்
பழுத்த நல்லறிவுற் றுனைப்பற்றிய
ஒழுக்கமற் றுளம்உட்கிடக் கூறினாய்.

"இரப்பவர்க் கொன் றிலையெனில், யாவையும்
கரப்பவர்க் குறு கட்டுரை கூறுவர்.
புரப்பவர்க்குப் பொறுத்தலல்லால் அடித்
துரப்பலும் தகுமோ?" என் றுருத்தனன்.

"மை குலாவு கண் மாதரை மோதிய
கை குறைக்கினும், கண்ணினைச் சூலினும்[1], 1தோண்டினாலும்.
மெய் குறைக்கினும், வேண்டியவாறு நீ
செய்க" என்ன, மறைமுனி செப்புவான்.

### புலைச்சியரை மணக்கும்படி முனிவர் அரசனை வலியுறுத்தல்.

"கொய்து[1] மாக்களைக் கொன்றதும், பன்றியை
எய்ததும், இசைகேட் டடித் தீனமாய்
வைததும், என்றன் மக்களை நீ மணஞ்
செய்திடின் பொறுப்பேன்" என்று செப்பினான். 1 அறுத்து.

"நிலத்தில் யாரும் நெறியல[1] செய்திடின்
விலக்கும் நீ இவை என்கண் விளம்பல் என்?
புலைக்குலத்தொடும் மன்னர் பொருந்துதல்
நலத்ததோ?" என்று நாயகன் கூறினான். 1 நீதிக்கு விரோதமானவை.

"முன்னே வஸிஷ்டன் இட்ட சாபத்தாலே புலையனான திரிசங்கு ராஜனுடைய மகனான நீ இந்தப் பெண்களை மணஞ்செய்துகொள்வது முறைமையன்றோ?" என்றார் விசுவாமித்திரர். அரிச்சந்திரன்

"அற்றைஞான்[1] றெமதையன் வசிட்டனால்
பெற்றசாபப் பெரும்புலை[2] தீர்த்தனை.
இற்றைஞான் றிங் கெனைப் புலையாக்க நீ
கற்றதே" தெனக் கால் கரம்பூண்டனன். 1 அந்த நாளில். 2 நீசத்துவம்.

"முன்னம் உந்தை[1] முழுப்புலை நீக்கினம்:
இன்னம் நீக்க எமக் கரிதன்று. யாம்
சொன்ன வாசகம் கேட்டுச் சுடர்முடி
மன்னர்மன்ன! என்மக்களை மண" வென்றான். 1 உன்தந்தை.

"அடினும், நின்விழி ஆரழலால் எனைச்
சுடினும், என்னுடல்தன்னைத் துறந் துயிர்
விடினும், மேனியை வெட்டியரிந்து கூ
றிடினும், இச்சொற் கிசைகிலென் யான்" என்றான்.

அதைக் கேட்டுக் கோபங்கொண்டு முனிவர் "என் பெண்களான அவ் விருவரையும் நீ மணஞ்செய்துகொள்ளாவிட்டால் உன்னைச் சபித்து விடுவேன்" என்றார்.

கூற்றம் உண்ணக்கொடுத் தெமதாருயிர் [1]இழத்தல்.
தோற்றல்[1] நன்றுநன்றென்று துணிந்து, நின்
சீற்றம் மாற்றிடச் செப்பிடும் சாபம் யான்
ஏற்றல் நன்(று).இடு" கென்ன இயம்பினான்.

["தோற்றல் நன்றிநின் என்று" என்றும் பாடம். 'ஏற்றனன் இடுகென்ன' என்றும் பாடம்.]

அதன்மேல் விசுவாமித்திரர் "ஆஹா, இவனுடைய குணவிசேஷமும் பொறுமையும் வேறெவரிடத்தும் நான் கண்டதில்லை. நம்முடைய கோபத்தை இந்த ஸமயத்தில் முடித்தால், இந்திரனெதிரில் நாம் சொன்ன வார்த்தை தவறிப்போகும்" என்று நினைந்து,

"துடிமருங்குல்[1] அத்தோகையர் தங்களைக்
கடிமணஞ்செயல் தீதென்ற கள்வனே!
குடிமைசெய்யும் கொடும்புலையற்கு நீ
அடிமையாவை: அறிதி" என்றோதினான்.

[1]உடுக்கை போன்ற இடை.

அரிச்சந்திரன்—

"வாரி காய்ந்து கொதித்திடின் மாற்றத் தண்
ணீரி[1] யார் தருவார்கள்? அந்நீதியின்
சீரியாய்! எனை நீ மிகச் சீறிடின்
யாரியார்[2] அஞ்சல்[3] என்பவர்?" என்றனன்.

[1]தண்ணீரியார்—தண்ணீர் யார் (இகரம் ஸந்தியாக வந்த குற்றியலிகரம்). [2]யாரியார்—யார் யார் (இங்கும் இகரம் குற்றியலிகரம்).
[[3]பயப்படாதே. நீரியாவர் தருவர் என்றும் பாடம்.]

"தாயும் தந்தையும் தஞ்சமும் தெய்வமும்
நீ உண்டென்று நினைத்திருந்தோம் எனாச்
சேயும்[1] வேந்தும் திரு[2]வும் அமைச்சனும்
போய் "உன்பாதம் புகல்" என்று பூண்டனர்.

[1]சேய்—பிள்ளை. [2](லக்ஷ்மிபோன்ற) மனைவி.

முனிவர்

"அன்னை என்பை அருந்துணை என்பை; உன்
முன்னைவாழ்வும் முதல்வனும் என்பை. மற்
றென்னை இப்படி வெல்பவன் இச்சமர்த்
துன்னையல்லது கண்டிலன் உண்மையே"

அரசன்

"கண்ணை வேண்டினும் ஈகுவன். காக்கின்ற
மண்ணை வேண்டினும் வாழ்வுடன் ஈகுவன்.
பண்ணை வேண்டிய செஞ்சொல் பறைக்குலப்
பெண்ணை வேண்டிலன் யான்" என்று பேசினன்.

### அரிச்சந்திரனுடைய அரசியலை முனிவர் ஏற்றல்.

மன்னர்மன்னன் உரைத்திட மாதவன்
"அன்னதே நமக்காம்" என் "றவாவுறீஇ[1]ச், [1]ஆசைகொண்டு.
சொன்னதே அமையும். கடல்சூழ் புவி
என்னதே" என் றெழுந்தெழுந் தாடினன்.

[அவாவுறீஇ என்ற பாடத்துக்கு ஆசையற்று, அதாவது பூமியை ஆள்வதாகிய அசை அற்று என்பது பொருள்.]

"மருவும் நாடும் வளநகரும் பெருந்
திருவும் ஈகுவன் என்றனை. செவ்வியோய்!
'தருவன்' என்ற மொழிதவறாமல் உன்
அரசளிக்கின் அமையும்" எனச் சொனன்.

அந்தணாளனை நோக்கி, அவ்வண்ணலும்,
"உந்தம் மக்கள் உறுநலன் வேண்டிலேன்.
எந்தம் நாடும் இருநிதிக்குப்பை[1]யும்
தந்தனன். மொழி தப்புவதில்" என்றான்.

[1]மிக்க செல்வத்தின் குவியல்.

"பாரை[1] வார்த்தையினால் தரற்பாலதோ?
தாரைவார்[2]" எனக் கௌசிகன் சாற்றிட,
நாரைவாய்க் கயல் பாயும் நறுந் தட[3],
நீரை வார்த்தனன் "நீள்புவி ஆள்"கென.

[1]பூமியை. [2]தாரைவார்த்துக்கொடு - தத்தம்பண்ணி நீர் விட்டுக்கொடு. தாரை — stream of water poured on the right-hand of the receiver in making grants or donations. [3]தடப் - தடாகம்.

என்று மன்னன் இயம்பி இறைத்த நீர்
அன்று கௌசிகன் அங்கையில் ஏற்றபின்,
நின்ற மாதவர்தங்களை நேர்குறித்
"தின்று நீர் எழுந் தார்த்திடும்" என்றனன்.

கோசிகன் இன்னே கூறியபின், கூகூவென்றே
ஆசிகள்சொன்னார்; ஆடினர்; ஆர்த்தார்; அணியாடை
வீசினர்; நீயே மேன்மகனென்று மேன்மேலும்
பேசினர்; பேசி மாசனர்[1] நேசம் பெரிதுற்றார். [1]மஹாஜனங்கள்.

மென்னடை அன்னநடையாளை விறலானை
முன் அடையாநின், றின்னவை பின்னும் முனி கூறும்:—
"என்னகர்நின்றே இவ்வுலகெல்லாம் யான் ஆள
நின் அடையாளம்[1] தந்திடு மாறாநெறி[2]" என்றான்.

[1]முத்திரை: முத்திரை மோதிரம்—ராஜமுத்திரைமோதிரம். [2]தப்பாத மார்க்கத்துடன்.

"வாழிய[1] நாடேர் செல்வம் அமைச் சென்மாசேனை [2]முசபடாம்.
சூழி[2]நெடுங்கைப் போர்மதவேழம்[3] துரகம்[4] தேர் [3]யானை.
ஊழி[5]யின்மட்டும் ஆளுதி, தந்தேன் உன"தென்றே [4]குதிரை.
ஆழி[6] அளித்தான், பாருளமட்டும் அழியாதான். [6]மோதிரம்.

[1]வாழ்வையுடையதான. [5]ஊழிகாலம்—உலகமுடிவு.

அப்புறம் அரசன் "இனி நான் போகிறேன். விடைகொடும்" என்று நமஸ்கரித்தான்.

துணியும் தனிநெஞ் சுடையான், "நினது தோள்மாலை ¹கங்கணம்.
மணியும், வளை[1]யும், வலயங்க[2]ளும், நின் வடிவாளும், ²கேயூரம்.
அணியும், முடியும், சேயும் தாயும் அணியும் பொற் ³பொன்னாபரணம்.
பணி[3]யும், கழலும்[4] தந்தே"கென்று பல சொன்னான். ⁴வீரக்கழல்.

அங்ஙனமே அரசன் அவைகள் எல்லாவற்றையும் கழற்றிக்கொடுத்து விட்டான்.

"உனையும் மடமாதினையும் அரசே! உன்மைந்தன்
றனையும் விடுதற் கணியும்பணி நீ தந்தாய் காண்.
வனையும்[1] கழலாய்! மகனும் நீயும் மடவாளும் ¹தரித்திருக்கும்.
புனையும் கிரணக்கலை[2] தந் தகலப்போ" என்றான். ²ஒளிபொருந்திய வஸ்திரம்.

"ஆரை இரப்போம் ஆடையளித்தால்? அரனே!" என்
றாரை அளித்த காவலன் நின்றே உயிர்சோரும்
தாரை[1] நினைந்தே, கௌசிகன் ஆங்குத் தான் மூடும் ¹கண்ணீர்தாரை.
சீரை[2] கிழித்தே மூவகையிட்டுச் செலவுய்த்தான். ²மரவுரி.

"நாறல் பாழ்ந்துணி; சீலைப்பேன் ஒருநாள்மாறாப்
பீறற்சீலை[1]; இதாருக்"கென் றுரைபேசாமே,
"மாறல் காலம் இதாகின் செய்வதென் மற்"றென்னாக்,
கூறற்காம்இசை[2]பூண் அக்கோன் அது கொண்டானே.

¹கிழிந்த வஸ்திரம். ²சொல்லுதற்குத்தக்க கீர்த்தி.

காவிச்சீலையை உடுத்து, களைந்த கூறையாடைகளை முனிவரெதிரில் வைத்து, "விடைதாரும்" என்று அரசன் கேட்டான்.

"தா" என்றான். "விடைதந்தேன். நீ ஒருசார்பூடு[1] ¹ஒருபுறத்திலே.
போ" என்றான். "இதுவேநலன்"என்னாப் போவானை
"வா" என்றான். அதுகேளா[2] மீளவும் வந்தெய்தி ²கேட்டு.
"யா? என்றான் இனி ஈகுவ எந்தாய் யான்[3]" என்றான்

³எந்தாய் இனி யான் இகுவயா என்றான்—சுவாமி இனி யான் கொடுப்பன என்னதான்.

### அரசியலை ஏற்றபிறகு யாகத்துக்குரிய பொருளைக் கொடுவென்று வலியுறுத்தல்.

முனிவர்

"செந்தேன் ஓடும் தண்பணை[1]சூழும் திருநாடா! [1]வயல்.
வந்தே நானும் மாமுனிவோரும் வளர்வேள்விக்(கு)
உந்தேம்[2] நண்ணி இரந்த[3] பசும்பொன் உளவெல்லாம்
தந்தே போவாய்"என் றிறையோனைத் தடைசெய்தான்.

[2]உம் தேம்—உம்முடைய தேசம். [3]யாசகங்கேட்ட.

அரசன்

"முன்னம் உனக்குச் சொன்ன திறத்தின் மொழிமாறி,
அன்னது கைக்கொண் டிங்கிதி தந்தேனல்லேன் யான்.
நன்னகரோடு பொன்னுளமுற்றும் நனி[1]தந்தேன். [1]மிகுதியாக
இன்னம் உனக்குப் பொன்தர என்பால் இடமுண்டோ?

முனிவர்

"தாருடனே செந்தாமரையாள்[1] சேர் தட[2]மார்பா! [1]லக்ஷ்மி.
யாருடனே இம்மோசம் உரைப்பாய்? அறிவில்லாய்! [2]விசாலமான.
ஊருடனே முன்கூறிய பொன்னும் உடனென்றே[3] [3]கூடச் சேர்த்ததென்று.
நீருடனே நீ பேசியளித்த நெறிஉண்டோ?

"சொன்னது மாறார் பானு[1]குலத்தில் தொல்[2]வேந்தர். [1]ஸூர்யன்.
அன்னது காணேம் நின்னிடை" என்றான். அதுகேளா[3] [2]பழைய.
மன்னவன் உள்ளம்நொந் தற[4]நாணி, "மதிவல்லோய்! [3]கேட்டு.
இன்னமும் ஒன்றுண்"டென்ன இரந்தே இவை கூறும்:— [4]மிகவும்.

"நித்த[1]னைப் பிரமனை அனையாய்! நினைவழிந்த
பித்தனைப் பொருள் வினவினை, எங்கு யான் பெறுகோ[2]?
இத்தனைத் தினத் தீவதென் றியம்புவையெனின், யான்
அத்தனைக்குள் நின்பொருள் தர அவதி[3] ஈ[4]"கென்றான்.

[1]சிவன். [2]பெறுவேனோ. [3]அளவு (கால அளவு) [4]ஈக—கொடுப்பாயாக.

"ஊரும் நாடும் நீள்மலைகளும் கானமும் உழன்றே
யார் உனோ டிழுப்புண்பவர்? அவதி யார் இடுவார்?
சோரம் உள்ள நீ கூறும் அப்பொருள்தனைச் சொரிந்து
போ.அடா! உனைத் தடுத்தனன்: போகலை" என்றான்.

பக்கம் நோக்கிலன், பார்மிசை விழுந் தடிபூண்டு,
சுக்கல் வந்திட மிடற்றினை ஒடுக்கும் அக்கதைபோல்,
விக்கலும் பொருமலும் மிசைமிசையெழ, விரிநீர்
உக்க கண்ணன், வாயூறுநீர் வற்றிட உரைப்பான்.

2nd line — ஒருவனுக்குக் கக்குதல் வந்தபோது மற்றொருவன் வந்து அவன் கழுத்தை நெருக்கிப்பிடித்த கதைபோல.

"'இழைத்ததீவினை பொறுத்தனன். அரசு தா' என்னத்
தழைத்த அன்பொடு தந்து யான் அகன்றிடுகாலை
அழைத்த நீ, எனக் கவதியிட் டாள்விடின், ஐய!
பிழைத்திலன். இதோர் பெரும்புகழ் பெறுதி" என்றிரந்தான்.

[பிழைத்தனன் என்றும் பாடம். உய்ந்தேன் என்பது பொருள்.]

"சுற்றுண்டாகிய மலைகளில் வனங்களில் தொட்[1]டுன்
பற்று[2]ண்டாகிய பதிகளில் படுபொருள்[3] அல்லால்,
உற்றுண்டாகிய நிதியம் உன்திருவுளம் உணர
மற்றுண்டாமெனின் விளம்பிடு வழங்கிட" என்றான்.

[1]தொடர்தலாய். [2]உன்பற்று—உன் ஸம்பந்தம். [3]உண்டானபொருள்.

"ஆம் இதேயெனின், அரச! கேள், அவதி யான் உரைப்பன்,
ஏமகூடமும் காசியும் அன்றியில் இப்பால்
தாமமார்ப! நீ தந்த நன்று(டு). இதற்கப்பால்
போமதுண்டெனில், பொருளும் அப்பொருளலா தளியேல்.

"இந்த எல்லையில் இப்பொருள் ஈதலல்லாமல்
அந்த எல்லையில் பொருள்தர வல்லையே யானால்,
முந்து நீ சொன்ன முறைமையால் அவதியான் ஈவேன்.
தந்திடாயெனின் சத்தியம் எ"தெனச் சாற்றும்.

அரசன்

"நிற் பிழைத்திடின் நினக்குயான் அருநிதியளிக்கும்
சொல் பிழைத்திடின் சூளுற[1]வேதெனின், சொல்வல்[2].
கற்பிழைத்த நற்சொல் பரதாரத்தைக் கருதி
இற்பிழைத்தவன்[3] ஆவன், நின் அருநிதி கொடேனேல்."

[1]சபதவார்த்தை. [2]சொல்வேன். [3]இல்லறம் வழுவநடந்தவன்.

"காசிநாட்டினில் சென்ற அந்நாளில் உன்கனகம்
ஆசில்மாதவ! அளிப்பன் அவ்வவதியில். அது நீ
பேசிடாய்"என, "இருபது நாளையின் பின்பு
மூசி[1]வண்டுறை தாரிரேயாய்! தரு"கென மொழிந்தான். [1]நெருங்கி.

அரசன்

"அங்குற்றெய்த நாள் அம்முறைக் கிருமடங் கடங்கா.
எங்குற் றீட்டுவ திப்பொருள்? ஐய!" என்றியம்ப,
"நம்குற்றம் இலை. நாற்பதிற்றெட்"டெனநவின்றான்.
"உம்குற்றம் இதற்குள் கொடாதொழிந்திடில்" என்றான்.

"இப்புத்திக் கினி தொத்தனன். ஆள்விடு" கென்று
குப்புற்[1]றேகலும், கௌசிகன் மீளவும் கூவித்
"தப்புத் தீர்தரத் தந்த அப்பொருளெலாம் பதிவந்
தொப்புத்தந்து பின்போ"எனு மன்னனுக் குரைத்தான். [1]கடந்து, விட்டு.

## அரசியலை நேரில் ஒப்படைத்துப் போதும்படி அழைத்தல்.

"பார் அளித்தனை, புரக்க நின் பதியிடைச் சென்றால்,
'ஆர்அளித்தனர்?' என்பர் நின் அடியவரெல்லாம்.
ஊர் அளித்திட உடன்வரத் துணிதி. ஈதொழியின்,
நீர் அளித்ததே எனக்கு: மண் நினக்"கென மொழிந்தான்.

4th line—தாரைவார்த்தது மாத்திரமே எனக்கு லாபம்: உனக்குத்தான் பூய ஆளுமை முடிவுபெறும்.

அரசன்

"நன்றுநன்று, நீ நகரியில் எழுந்தருள். நாயேன்
இன்று நின்பிற செய்துவல்" என்றினி தியம்பச்,
சென்று கௌசிகன் தேர்மிசை ஏறினன். திரண்டு
நின்ற மாதவர் கரி[1]யினும் பரி[2]யினும் நிறைந்தார்.

[1]யானை. [2]குதிரை.

தேரிலேறி மாமுனி செலச், சேனை பின்செல்லப்,
போரில்வீரனும் தேவியும் புதல்வனும் நடுவே
பாரின்மேல் நடந் தடிபொரா[1] துடல் பதைபதைக்க
வேரிவாவி[2]விட் டயோத்தியை நோக்கியே விரைந்தார்.

[1]கால்கள் பொறுக்கமாட்டாமல். [2]வாசனையுள்ள குளம்.

நகரத்திலுள்ள மஹாஜனங்களெல்லாம் எதிர்கொண்டுவந்து பார்த்து, அரசனைத் தேர்மேல் காணாது மயங்கி, தேரில் முனிவர் ஏறிவருகிற காரணத்தை அறியாமல் நெருங்கினார்கள். அரசனுக்கு விரதவேஷம் எப்படி உண்டாயிற்றென்று மெலிவடைந்து கைகளாலே முகத்தில் மோதிக்கொண்டு கதறியழுதார்கள். மதில்வாயிலை அடைந்தவளவில் முனிவர் தேரைவிட் டிறங்கினார்.

கோசிகன்றனை உடன்கொடு கோநகர் புகுந்து,
வாசி[1] உள்ளவும் மதகரிஉள்ளவும் வழங்கிக்,
காசினல்லறை[2] பூசனை யறையெலாம் காட்டித்
"தூசினல்லறை[3] துயிலறை பார்" எனச் சொன்னான்.

[1]குதிரை. [2]பொக்கிஷ வீடு. [3]வஸ்திரங்கள் வைக்கின்ற வீடு.

"என்னின் முன்னவர் இருபதோடொருவர் உண்(டு). அந்த
மன்னர்வைத்த செம்பொன்னறை ஈ"தென வழங்கி,
"அன்னசத்திரம் இவை; இவை அடியனேன் வைத்த
பொன்னறைத்தொகை; கொள்"ளெனக் கொடுத்தனன் புகழோன்.

"ஆடரங்குகள் அம்பலம் மடம் அனசாலை
மாடமாளிகை மண்டபம் மஞ்சனச்சாலை
கூடகோபுரம் மடைப்பள்ளி கோயில் செய்குன்றம்[1]
பீடம் ஆதனம் இவை"எனக் கொடுத்தனன் பின்னை.

[1]செய்கைமலை.—artificial hillock.

"இந்த ஆதனத் திருந்தருள்" என முனி இருந்தான்.
அந்த எல்லையில் அரசனும் அவனடி பணிந்தான்.
வந்த மன்னரும் அமைச்சரும் மங்கையர் குழாமும்
சுந்தரக் கழல் சேனையும் அவனடி தொழுதார்.

தொழுதெழுந்து தம் சுடர்முடி மன்னனை நோக்கி
அழுதுநின்ற அத்தலைவரை அவன் கையா லமைத்துப்
"பழுதிலாது நீர் எமக்கு முன்செய்த அப்பரிசே[1]
முழுதும் இந்த மாமுனிவற்கு முறைசெயும்" என்றான்.

[1]அந்தப்ரகாரமே

"எவர்க்கும் நல்லவர்; திரிபுரம் எரியெழச் சிரித்த
சிவற்கும் நல்லவர்; செங்கண் மாலுக்கும் நான்முகத்த
னவற்கும் நல்லவர்; அமரர்க்கும் நல்லவராவர்.
இவற்கு நல்லவர் எனக்கு நல்லவர்" என இசைத்தான்.

அரசனுரைத்ததைக் கேட்டு அவர்கள் "உம்முடைய வார்த்தையைத் தடுத்து நடப்பவர் இங்கே எவருமில்லை" என்று சொல்லி, முகத்திலே கையால் மோதியடித்துக்கொண்டு அழுதனர். அதைக் கண்டு, "ஐயோ தர்மாத்மாவாகிய இவனை வீணில் தேவர்முன் நிந்தித்தோம். இது அறிவீனமே. நீதி தெரிந்தவர் இங்ஙனம் செய்யார்" என்று சற்றுநேரம் மெய்ம்மறந்திருந்து, பின்னும் ஒரு வார்த்தை சொல்லுகிறார்:—

"இந்த வையமும் இருநிதிக்குழுவும் இப்பொருளும்
முந்து நீதர மொழிந்த அப்பொருளும் யான் இழப்பேன்.
எந்தன் மக்களை மணம்புணர்ந் திந்கர்இரு" என்
றந்தணன் மகிழ்ந் தரசனைக் கைபிடித்தமைத்தான்.

உடனே அரசன் முனிவருடைய காலைப் பிடித்துக்கொண்டு, "உண்மையை உறுதியாகப் பிடித்தலும் உத்தம காரியங்களைச் செய்தலு

மன்றி, புலைப்பெண்களை மணப்பதும் பொய்யை உறுதியாகப் பிடித்தலும் அதர்மங்களைச் செய்தலும் கீர்த்திக்குக் காரணமாகுமோ?

"உமக்கு யான் சொலல்வேண்டுமோ? மனுவின்பின் உதித்தே
எமக்குமுன் அரசாண்ட பார்வேந்தர் மூவெழுவர்
தமக்குமுன் ஒருத்தருக்கும் தாங்கரும் பெரும்பாரம்
சுமக்க வல்லனோ? தவிர்க இச்சொல்" எனத் தொழுதான்.

"பெண்களை மணப்பதற்கு நான் ஸம்மதிக்கமாட்டேன். கொடுப்பதாகச் சொன்ன பொருளுக்காக ஓராளைக் கூட்டி என்பின்னே வரவிடும்" என்று சொல்ல, முனிவர் "நாளைக்குக் கூட்டி யனுப்புகிறேன். இன்றே நீ வெளியே போ" என்றார். அரசன்

"சிறுத்த நாயினேன் செய்த இப்புன்மைகளெல்லாம்
பொறுத்தல் வேண்டும்" என் றடியிணை இருகரம் பூண்டான்.
கறுத்த சிந்தையன் கௌசிகன் "பொறுத்தனன்" என்றான்.
"மறுத்தும் இன்னுமொன் றுரைத்திடக் கேள்" என வள்ளல்,

கையினல்பிடித் தமைச்சரைக் காட்டி, "மற்றிவர்கள்
வையினும் நினை, மறுக்கினும், மற்றும் ஓர்குற்றம்
செய்யினும், பொறுத்தருள்செய்வாய். செல்கதி அளிந்த
ஐயனே! உன தடைக்கலம் இவர்" என அளித்தான்.

குடைநிழல் பொலி கௌசிகன் அடியின்மேல் கொடிநேர்
இடையினளையும் மகனையும் இறைஞ்சுவித்[1] தேத்திப்,
படையை நோக்கி "நீர் நின்மின்" என் றங்கையால் பணித்து,
"விடை இதே" எனப் பணிந்தனன் வேந்தர்க்குவேந்தன்.

[1]வணங்கச்செய்து.

"பரம்உனக்" கென் றிறை அகன்றனன். பரிந்து
புரமெரித்தவன் அனைய மாமுனி புவி புரந்தான்.
சிரமநீங்கு வீரர்கள் செறி மன்றமும் தெருவும்
பிரமசாரிகள் மலிந்தனர் பெருகும் உட்களிப்பால்.

தோலினோர்களும், தூரகதத்தோர்களும், சோதி
வேலினோர்களும், மாதரும், மிடைந்தமை மாறி,
நூலினோர்களும், நுண்ணிடைக் கவுந்தியர்[1]களும், முக்
கோலினோர்[2]களும் மலிந்தனர் கொடித்தெருவெல்லாம்.

[1]தவப்பெண்கள். [2]முக்கோலினர்—திரிதண்ட சந்நியாசிகள்.

முனிவர்கள் சூழவும் அரசர்கள் போற்றவும் விசுவாமித்திரர் சிங்காதனத்தின்மீதிருந்து உலகத்தை இனிதாக ஆண்டுவந்தார்.

அரிச்சந்திரன், மனைவியையும் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு, அரமனையைவிட்டு நீங்கி, மதில்வாயிலையும் சரயுநதியை யும் கடந்துபோய் ஒரு சோலையில் இருந்தான். ஜனங்களும் மந்திரி மார்களும் கூடவே புலம்பிக்கொண்டுபோயினர். மந்திரிமார்கள் "மஹாராஜா, நீர் எப்போது திரும்பிவருவீர்?" என்று கேட்க, அர சன் "முனிவருக்குக் கொடுத்துவிட்ட இந்த ஊரில் நான் இனி எக் காலமும் வரமாட்டேன்" என்றான். சிலர் "அவனை நாங்கள் வேண் டாமென்று தள்ளிவிட்டால், என்ன செய்வான்?" என்றனர். சிலர் "நாங் கள் போய் அவனோடு சண்டைசெய்கிறோம்" என்றார்கள். இவ்விதம் பலர் பலவிதமாகச் சொல்ல, அரசன் இரண்டு கைகளாலும் காதுகளை மூடிக்கொண்டு, "ஐயோ, இதென்ன பாவம்? என் குடி கெட்டாலும், என் உயிர் போனாலும், நான் கொடுத்த ஊரை இனிக் கொள்ளேன்" என்றான். நடந்ததையெல்லாம் மறைவில் கேட்டிருந்து எதிரில் வந்து

"வெய்தாநீ வேடுவரால் விலங்கனைத்தும் கொல்வித்தாய். வெருண்டேன[1]த்தை
எய்தாய். என்மக்களையும் இசைகேட்டுத் தூரத்தடித்தாய்.[2] இன்றும் என்னை
வைதாய்.[3] நீ எனக்களித்த மண்டல[4]த்தை யான்தர நீ வாங்காயாகில்,
செய்தாய் இன் றிவருரைத்த தீமையெலாம்" என்னமுனி செப்பினனே.

[1]பன்றி. [2]தூரத்தியடித்தாய். [3]திட்டினாய். [4]பூமி.

"சிறுத்தவர்கள் அறியாமல் செய்த பிழை அத்தனையும் செவ்வியோய்! நீ
பொறுத்தருளாயாமாகில், பொறை[1] என்னும்? முறை[2] என்னும்? புலமை[3] என்
ஒறுத்திடினும்[4] வெறுத்திடினும், உனக்களித்த அரசுரிமை ஒருகாலத்தும்
மறுத்தினி யான் வாங்கேன்" என் றெடுத்துரைத்தான் மன்னன். முனி வாட்ட [மூற்றான்.

[1]பொறுமை. [2]நீதி. [3]அறிவு. [4]கொன்றாலும்.

"பொன்கேட்கப் பொன்அளித்தான். புவிகேட்கப் புவிஅளித்தான். போதா
என் கேட்கினும் தருவதில்லையெனும் புன்மை இவனிடத்தில் இல்லை. [தென்று
முன்கேட்ட பொருளாலே மொழிவழு[1] வந்தெய்தும். அது முடக்கமானால்,[2]
பின் கேட்டார் இகழ்வார்கள். யாம் பொறுத்தும்" எனநினைந்து பேசலுற்றான்.

[1]சொல்தவறு. [2]தப்பினால்.

## பொருளைத் தண்டிவரும்படி சுக்கிரனைக் கூட்டியனுப்பி வழியில் பலவகைத் துன்பங்களை உண்டாக்குதல்.

"என்னை இன்றுரைத்த பிழை பொறுத்தேன். யாகஞ்செய்வதற்குக் கொடுப்பதாகச் சொன்ன பொருளைக் கொடுப்பாயோ? கொடுக்கமாட்டாயோ?" என்று கேட்டார். அரசன் "கொடுப்பதாகச் சொன்னதை நான் தப்பமாட்டேன். என்னுடன் ஓராளை அனுப்பும்" என்றான். உடனே முனிவர் சுக்கிரபகவானைக் கூப்பிட்டு, அரிச்சந்திரனோடு போகும்படி ஸம்மதப்படுத்தி, சுக்கிரனைத் தனியாக வைத்துக்கொண்டு "அவன் கொடுக்கவேண்டிய பொருளைக் கொடுத்தால் வாங்கிக்கொள். பின்பு நீ கூடப்போனதற்குள்ள கூலிப்பொருளும் கேட்டுவாங்கு. பசிக்கு இலை கனி தேடும்போது, 'எனக்கு நல்ல சோறு வேண்டும்' என்று சொல்லு. அப்படிக் கொடுத்தால், 'போதாது, எனக்கு வேண்டாம்' என்று சொல்லு. சோறு கிடைத்து அவன் உண்ணப்போனால், 'நில்லுநில்லு; எனக்குப் பொருள் கொடுக்குமுன் நீ உண்ணக்கூடாது' என்று தடு. நாம் கொடுத்த கெடு வந்தால், அங்கே இருக்கிறவர்களை ஸாக்ஷிவைத்துக்கொண்டு நீ அங்கே நில்லாமல் மறுநாளே இங்கே வந்துவிடு. அவன் மனத்தைக் கலக்கி, 'அரிச்சந்திரா, முனிவருக்குக் கொடுக்கிறேனென்று சொன்னசொல் தவறி நான் கொடுக்கமாட்டேன் என்று

ஒப்பி நீ சொல்வாயானால், உன் அரசாட்சியை நானே வாங்கித்தருகிறேன்' என்று சொல்லு. அதற்கு அவன் ஸம்மதித்தால், நமக்கு அவ்வளவே போதும்; அவனை நம்மிடம் கூட்டிக்கொண்டுவா" என்று சொல்லி, விடைகொடுத்துத் திரும்பிவிட்டார்.

அரிச்சந்திரன் மனைவியையும் மகனையும் உடன்கொண்டு போகும்போது அவர்கள் காட்டில் பல கஷ்டங்களை அநுபவித்தனர். விசுவாமித்திரர் விஷஜந்துக்களையும் மிருகங்களையும் ஏவி உண்டாக்கிய துன்பமும் ஆற்றுவெள்ளத்தையும் அக்கினியையும் ஏவி உண்டாக்கிய துன்பமும் கடந்து சென்றனர். சுக்கிரனால் உண்டான துன்பமும் கொஞ்சமல்ல. வழியிடையில் விசுவாமித்திரரும் வந்து "ஒரு பொய்யைச் சொல்லி நாடு நகரத்தைப் பெற்றுக்கொள்க" என வேண்டினார். அதற்கு ஸம்மதிக்காமல் சென்று காசியை அடைந்தார்கள்.

### அரிச்சந்திரன் தன் மனைவியையும் மகனையும் விற்றல்.

நகர்வளங்களைக் கண்டு விசுவநாதரை தரிசனம்பண்ணிக்கொண்டு ஓர் அம்பலச்சாவடியை அடைந்தனர். கூடேவந்த மந்திரியாகிய சத்தியகீர்த்தி கடைவீதிக்குப் போய்ச் சமையலுக்கு வேண்டியவைகளை வாங்கிவந்தான். சந்திரமதி சற்றுநேரத்தில் சமையல் செய்தாள். எல்லாரும் உண்டு இளைப்பாறியிருந்தனர்.

மறுநாள் சுக்கிரன் "விசுவாமித்திருக் குரிய பொருளை இப்பொழுதே கொடுத்துவிடு" என்று வருத்தினான். அரசன் மறுமொழி சொல்லாமல் "பொருள் தருவதான உபாயம் என்ன" என்று சிந்தித்துக் கண்ணீர் சொரிந்திருந்தான். சந்திரமதி "பொருள் கொடுக்கத் துணியாமல் கண்ணீர்விடக் காரியம் என்ன?" என்றாள். அரசன்

"மின்னஞ்சிய[1] இடையாய்! கதிர்வேலஞ்சிய விழியாய்!
வன்னெஞ்சுடை முனி நம்முடை வளமுள்ளது கொண்டான்.
என்னெஞ்சமும் உன்னெஞ்சமும் ஒன்றன்றி இரண்டோ?
உன்னெஞ் சறியா தென்வயின்[2] உளதோ பொருள்?" என்றான்.

[1]மின்னல் அஞ்சுதலான. [2]என்னிடம்.

"கல்லென்றுயர் தோளாய்! கௌசிகன் எண்ணுதலல்லால்,
இல்லென்பதும் உளதென்பதும் யாம் எண்ணுதல் தகுமோ?
எல்[1]லொன்றினி அவதித்தினம். எனையும் மகனையும் நீ
வில்" என்றனள் கற்புக் கொருவித்தாகி உதித்தாள்.

[1]நாள். எல்...தினம்–கெடுவாகக் கொடுத்திருக்கிற தினம் இனி ஒருநாளே உண்டு.
["அறதித்தினம்"–பாடபேதம்.]

அவ்வாறுரைசெய மன்னவன் அலையும் குறையுயிர் கொண்
"டெவ்வா றுமை விலைகூறுவல்" எனவெண்ணி இடைந்தான்[1].
வெவ்வாய் வடிவேலோய்! எமை விலைகூறுதல் அரிதென்
றெவ்வாயெனின், விடுமோ நம தூழின்வலி?" என்றாள்.

[1]பின்னிட்டான்.

தே[1]மென்கனிவாயாள் இதுசெப்பச், "செயல் இதுவே
ஆ"மென் றெழுவே, வெள்ளியும்[2] "அதுவேநலன்" என்றான்.
மாமன்னவன் மைந்தன் தலைமிசையும் குலமடவாள்
பூமென்குழல் மிசையும் சிறுபுல் வைத்து நடந்தான்.

[1]தித்திப்பு. [2]சுக்கிரன்.

"தாலத்தரம்[1] உணரா துயிர்தளரும்படி பலசெய்
மேலைப்பழவினை பற்றிட விற்கின்றனன் வினையேன்;
வால[2]ச் சிறுபருவத தென்நன்மரபில் புதல்வனையும்
நீலக்கயல்விழியாளையும் நிதியுள்ளவர் கொண்மின்."

[1]உலகத்தினது தகுதி. [2]வாலம்–பால்யம்.

என்றுசொல்லி நடந்தான். "ஐயோ பாவம், லக்ஷ்மியைப் போன்ற மனைவியையும் மகனையும் விலைகூற நேரிட்ட துன்பம் என்னவோ? இவ்விருவருக்கும் தக்க விலை கொடுக்கத்தக்கவர்கள் இங்கே எவர் உண்டு?" என்று அவரவர்கள் பேசிக்கொண்டனர்.

அப்போது ஒரு பிராமணன் வஞ்சகமாக வந்து "இவர்களுக்கு விலை என்ன?" என்று கேட்டான். அரசனும் "யானை முதுகிலே நின் றெறிகிற கவண்கல் போமளவான பொருள்" என்றான். பிராமணன்

"பொருளைப் பெற்றுக்கொள்பவர் யார்?" என்று கேட்க, அரசன் சுக்கிரனைக் காட்டினான். பிராமணன் பொருள்கொடுப்பதாக சுக்கிரனுக்குக் கைபோட்டுக் கொடுத்தான். சுக்கிரன் "விலைச்சீட்டு எழுதிக்கொடு" என்று அரசனிடம் சொல்ல, அரசன் அங்ஙனமே செய்து, மகனையும் மனைவியையும் பிராமணனிடம் ஒப்பித்தான். சந்திரமதி கணவனைப் பார்த்து, "எங்களுக்காக வருந்தவேண்டா" என்று சொல்லிக் கண்ணீர் சொரிந்து நமஸ்கரித்து

"நின்று காணும் நிருப[1]ரும் யானும் அன் [1]அரசர்.
றென்று காண அவாவுறு செம்முகம்
இன்று காண எய்தியதன்றி மற்
றென்று காண்பன் இனி?" யென ஏங்கினாள்.

ஏங்கி மன்னன் இடைவனென்றே படர்
தாங்கி, "நாயக! தா விடை" என்றயல் [1]அரசன்.
நீங்கினாள். இறை[1] நீள் கழுத்தைத் தழீஇத்[2] [2]தழுவி.
தூங்கி[3] வாய்விட்டுத் தோன்றல் அரற்றினான். [3]தொங்கி.

"எம்ஐய! என்னையும் யாயையும் தாங்கிய
சுமை இறக்கினையோ? சுகம் உற்றதோ?
உமை அணைந் திங் குறவென்றிருந்தவா
றமையுமோ? ஐயனே!" என்றரற்றினான்.

கழுத்தைப் பூண்டழும் காவலன் கைகளை
அழுத்தமாம் பற்றற விடுவித்தனன்,
விழித்தகண் பொறி[1] சிந்திட வேதியன் [1]நெருப்புப்பொறி.
இழுத்துப் போய்த் தனதில்லிடம் எய்தினான்.

### சுக்கிரனுக்குக் கூலிகொடுக்க அரிச்சந்திரன் தன்னை விற்பித்தல்.

அதுகண்ட அரிச்சந்திரன் மூர்ச்சையாய்க் கீழே விழுந்தான். அப்போது அருகிலிருந்த மந்திரி தேற்றத் தேறி, அரசன் சுக்கிரனை "பொருள் சேர்ந்ததா?" என்று கேட்டான். சுக்கிரன் "முனிவருக்

குரிய பொருள் சேர்ந்தது. எனக்குக் கொடுக்கவேண்டிய கூலி எங்கே?" என்றான். அரசன் மந்திரியைப் பார்த்து "நீ என்னை விலைசெய்து இவருக்குக் கூலி கொடுத்துவிடு" என்ன, மந்திரி "நான் உம்மை விலை கூறுவது தகுதியன்று. நீர் என்னை விலைசெய்து இவருக்குக் கூலிகொடுத்தனுப்பிவிடும்" என்றான். அரசன் "நான் கொடுக்கவேண்டிய பொருளை உன்னை விற்றுக் கொடுப்பது தகுதியாகுமா? இனி நீ தாமதம்பண்ணுமல் என்னை விலைசெய்க" என்றான். மந்திரி, பொன்முடி சூடுகின்ற அரசன் தலையிலே புல்லைச் சூட்டி, கடைவீதிகளில் சென்று;

ஆதிநூலினராயினும் அல்லது
சாதியீனர்களாயினும் சால்புடைக்
கோதிலான்றனைக் கொண்மின்" எனப் பல
வீதிதோறும் விலையது கூறினன்.

அப்போது வீரவாகு என்று பெயருள்ளவன் ஒரு பறையன்

குடக்கள் நுங்கி[1] மயங்கிய கொள்கையால்
தடக்கைகால் விதிர்ப்புற்ற[2] தளர்ச்சியான்,
விடக்[3]கின் தோல்தசை விண்டு[4]வின் தண்டினில்
தொடக்கி[5]க் காவிய[6] திண்பெருந் தோளினன்,

[1]குடித்து. [2]நடுங்கும். [3]மாம்ஸம். [4]மூங்கில். [5]மாட்டி. [6]காவடி போட்டுக்கொண்டுள்ள.

சுமக்கும் கா[1] வைத்துத், தூ[2]சொடுவாய் புதைத்,
"துமக்கு வேண்டும் உறுபொருள் நல்கிடின்
அமைக்கும் புன்றொழிலாளர் எம்போல்பவர்
தமக்கும் விற்கத் தகுதியுண்டோ?" என்றான்.

[1]காவடி. [2]வஸ்திரம்.

அரசன் "இவனையல்லாமல் என்னை விலைக்கு வாங்குகிறவன் இங்கே வேறெவனும் இல்லை" என்றெண்ணி, "என்னை இவனுக்கு விலைசெய்துவிடு" என்றான். மந்திரி "உனக்கு விற்கிறேன்" என்று வீரவாகுவிடம் சொல்ல, வீரவாகு "விலை என்ன?" என்று கேட்டான். மந்திரி "பதினாயிரம் பொன்" என்றான். வீரவாகு விலைக்கு ஸம்மதித்த அளவிலே, மந்திரி தன் பெயரால் விலைச்சீட்டெழுதிப்

புலையனிடம் கொடுத்துப் பொருளைவாங்கி சுக்கிரனிடம் கொடுத்தனுப்பினான்.

மீளி[1]வேந்தும் விடக்கின் தசைச்சுமை
தோளில் ஏற்றிப் புலையற் றொடர்ந்தனன்.
ஆளிமொய்ம்[2]பின் அமைச்சனும் மன்னவன்
தாளில் வீழ்ந்து தளர்ந்து வருந்தினான்.

[1]வீரன். [2]சிங்கம்போலும் புஜபலம்.

வலையம்[1] நீத்த புயத்திடை வைத்த கா
அலையவே பின்தொடர்ந் தரிச்சந்திரன்
தொலைவிலா முடை[2] நாறிய தொன்னெறிப்
புலையன் மேவும் புலைக்குடில் நண்ணினான்.

[1]கேயூரம். [2]புலால் நாற்றம்

பார்த்தவர்க்குப் பசுந்தசையாய், மறை
கோர்த்த காவை இறக்கிக் கொடுத்தபின்,
ஊத்தை[1]க் கொட்டிலின் உள்ளிருந்தே, புவி
காத்த சோவுடன் காலன்[2] இயம்புவான்.

[1]அழுக்கு. [2]யமன் (இங்கே வீரவாகு).

"தாங்[1]கிருள் கடியும் செந்தீச் சுடலையில் சுடும்பிணத்துக்
கோங்கிய புலைப்பே[2] றுடை ஒன்றுண்டு; பணம் காலுண்டு.
வாங்கி ஈதெனக்கு வைத்து, வாய்க்கரிசியை நீ இட்டுண்
டாங்கிரு" என்று பின்னும் அண்ணலுக் கவன் உரைப்பான்.

[1]தங்குதலான. [2]புலைப்பேறு—புலையன் பெறுவது.

"எனக்குநீ பணமும் கொள்ளியாண்டையும் இனிதுநல்கி,
உனக்கு வாய்க்கரிசி தந்தேன், உண்டிரு பசியை நீக்கி,
மனத்துளே வஞ்சம் இன்றி மயானத்தில் உறைவாய்" என்னத்,
தனக்குநேர் இல்லான்தானும் நன்றெனச் சுடலை சார்ந்தான்.

சுட்டவெம்பிணத்தோடொக்கத் தொலைந்துவெந் தெரிந்தகொள்ளிக்
கட்டையும் பாடைசேர்ந்த கழிகளும் ஒத்துக்கூட்டிக்
கொட்டில் ஒன்றெடுத்து[1], மேனாள் கொடுஞ்சவம் கொணர்ந்துபோட்ட
கட்டில் ஒன்றேறிச் செங்கோற்காவலன் வீற்றிருந்தான்.

[1]கட்டிக்கொண்டு.

சத்தியகீர்த்தி அன்றிரவு ஒரு மடத்திலே தங்கியிருந்து, பின்பு அரசனைத் தேடிவந்து சுடுகாட்டில் இருக்கிறதைக் கண்டு அலறிவிழுந்து,

"மன்னவர் இடம்பொருது வந்துசூழ்ந் திறைஞ்சிப் போற்ற,
அன்னமென் னடையார்ஆட, அரம்பையர் பாடவைகும்
பொன்நெடுங் கோயில் நீங்கிப், பூதமும் பிசாசும் ஆடும்
இந்நெடுங் கோயிலோ வந்தெய்திய தைய!" என்றான்.

அரிச்சந்திரன்

"கதிதரும் அயனும் மாலும் கடக்கருங் கொடிய நீர்மை
விதியினை எளிய நம்மால் வெல்லலாம் தகைமைத் துண்டோ?
அதிகம் வந்தெய்தா, மேனாள்[1] அமைத்தவே அடுக்குமல்லால். [1]முன்னாள்.
மதிவலோய்! இதற்கு வாடி வருந்தலே" என்று சொன்னான்.

என்றுசொல்லி மந்திரியைத் தேற்றி, அரசன் தான் சேர்த்துவைத்திருந்த வாய்க்கரிசியை அவனிடம் கொடுத்தான். அதை மந்திரி கொண்டுபோய்ப் பசுவுக்குக் கொடுத்து, அதன் கோமயத்தோடு விழுவதான அரிசியை எடுத்துக் குத்திச் சமைத்துக் கொடுத்துவந்தான். அந்தச் சோற்றை உண்டு அரிச்சந்திரன் அங்கிருந்தான்.

## லோகிதாஸன் பாம்புகடித் திறத்தல்.

வல்லியும் மகனும் அந்த மறையவன் மனையில் சேர்ந்து,
சொல்லிய பணிக[1]ளெல்லாம் சோர்வறச் செய்து, பின்னும் [1]வேலைகள்.
எல்லி[2] ஓர் சாமமென்ன எழுந்திருந் தேவல்முற்றி, [2]இரவு.
அல்[3] இருசாமம் சென்றால் அளித்தகூழ் உண்டுறங்கி, [3]பகல்.

கையினில் உலக்கை பற்றிக், காந்த[1]ளின் உதிரம்பாய, [1]காந்தள்போன்ற கை.
மெய்யினில் வெயர்நீர் சிந்த விழியினில் அருவிபாய,
நெய்யினில் முடித்தகூந்தல் நெல்குத்தும் கொடுமை காண[2] [2]கண்டு.
மையினில் திகழ்வேல் கண்ணார் அரம்பையர் மறுகிச்சோர்ந்தார்.

புன்க[1]ணுற் றரம்பைமாதர் வருந்தவும், புந்திசெய்யா [1]துன்பம்.
வன்கணன் இரக்கமில்லான், மடித்தவாய் வெடித்த சொல்லான்,
தன்கண் அன்பில்லான், பேர்ல்லான், தறுகணன் விலைகொண்டாள்வோன்.
இன்கண் இல்லாதான் பாரி இவனிலும் கொடிய பாவி.

அடியினல் அஞ்சி மைந்தன் அனந்[1]தலைப் பயம் உணர்த்த, [1]தூக்கம்.
விடியுமுன் எழுந்திருந்து, விளைபுலம் களைபறித்துக், [2]இலை.
கடிவனத் தடகு[2] கொய்து, காட்டமும்[3] சமிதையும் பொன் [3]விறகு.
முடிபுனை தலையில் வைத்து முறைமுறை வருமந்நாளில்

ஒருநாள் அவன் சில பிள்ளைகளோடு சென்று காட்டிலே விறகு தேடிச் சுமைகட்டிச் சுமந்துகொண்டு வருகிற வழியில் ஓரிடத்தில் தர்ப்பை அதிகமாயிருக்கக் கண்டான். விறகுசுமையை அருகிலுள்ள ஆலமரத்தின்கீழே இறக்கிவைத்துப்போய் தர்ப்பையைப் பிடுங்கினான். தர்ப்பைக்குள் இருந்த பாம்பு விசுவாமித்திரர் ஏவலால் சீறியெழுந்து அவனைக் கடித்தது. உடனே துள்ளித் துடித்துவந்து ஓரிடத்திலே விழுந்தான். சற்றுநேரத்தில் உயிர் நீங்கியது. மற்றப் பிள்ளைகளெல்லாம் தங்கள் சுமைகளோடு காசிக்குத் திரும்பினார்கள்.

அவர்களோடு தன் மகன் வாராமையைக் கண்டு, சந்திரமதி அவர்களைக் கேட்டுத் தன் மகன் அரவுதீண்டி இறந்ததை அறிந்து மூர்ச்சித்து விழுந்தாள். அப்பால், அவன் இறந்துகிடக்கிற இடத்தின் அடையாளத்தைக் கேட்டறிந்து, அழுகையை அடக்கிக்கொண்டு உள்ளேபோய்த் தான் செய்யவேண்டிய பணிவிடைகளையெல்லாம் செய்துமுடித்தாள். முடித்த பிறகு, பிராமணனிடம் சென்று செய்தியைத் தெரிவித்து, பிள்ளை இறந்துகிடக்கும் இடத்துக்குப் போக உத்தரவு கேட்டாள். பிராமணன் கோபித்து, "அவன் இறந்ததனால் எனக்குத்தானே பொருள் நஷ்டம் உண்டாயிற்று. உனக்கென்ன நஷ்டம். நீ போகவேண்டாம்" என்றான். சந்திரமதி "ஐயரே! பெற்றவயிறு பற்றியெரிகிறது. இறந்து கிடப்பவனைத் தேடியெடுத்து அடக்கஞ் செய்து பொழுதுவிடியுமுன்னே வந்துவிடுகிறேன்" என்று அவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு பட்டணத்தைக் கடந்து போனாள்.

## சந்திரமதி லோகிதாஸனை தகனஞ்செய்யப் போதல்

பாவியேன் மகனே என்பள்; பதைப்பள்; மென்முகத்தில் மோதித்
தாவியே விழுவள்; நின்று தயங்கியே மயங்கி வீழ்வள்;
காவியங்கண் ணீர்பாயக் கதறுவள்; பதறியேங்கி
ஆவியைத் தேடித்தேடி அலமரும்[1] உடலம் ஒத்தாள். [1]அலைகின்ற.

ஓடினாள்; உள்ளமெல்லாம் உருகினாள்; கருகிமேனி
வாடினாள்; விறகுவைத்த வட[1]த்தினுக் கருகே வந்தாள்; [1]வடம்—ஆலமரம்.
நாடினாள்; கழுகும் பேயும் நரிகளும் குற[2]ளும் துன்றிக் [2]பூதம்.
கூடிய குழுவின் நாப்பண்[3] குமரனைச் சென்று கண்டாள். [3]நடு.

கண்டனள் கதறிவீழ்ந்தாள், கழுகெலாம் இரியல்போக.[1] [1]ஓடிப்போக.
கொண்டதோர் மகவினாசை ஆவியைக் கொள்ளைகொள்ள, [2]தாமரை.
முண்டக[2]க் கரத்தால் ஏந்தி, முருகனை[3] மடிமேல் வைத்தே, [3]இளையோன், குமரன்
அண்டரும் மறுகி ஏங்க வாய்திறந் தரற்றலுற்றாள்:—

"பணியால் நனைந்து வெயிலால் உலர்ந்து பசியால் அலைந்தும் உலவா,[1]
அணியாய வெங்கண் அரவால் இறந்த அதிபாவம் என்கொல் அறியேன்.
தனியே கிடந்து விடநோய் செறிந்து தரைமீ துருண்ட மகனே!
இனி யாரை நம்பி உயிர்வாழ்வம் என்றன் இறையோனும் யானும் அவமே?

[1]சாவாமல்.

"வானின் றிழிந்து சொரிகின்ற தாரைமழைபோல வீழ விழிநீர்,
ஊனின்றி மேனி உதிரங்கள் சிந்த, உயிரின்றி, வெம்பு தழலின்
மேனின்று வெந்த தளிர்போல் உயங்கி, விதியாரை நொந்து தனியே
யானின் றிரங்க ஏனென்ப தில்லை. இதுவோ உன் நீதி மகனே.

"செங்கோல் அறத்தின் முறையே செலுத்து திறலோன், எவர்க்கும் உரவோன்,
வெங்கோப யானை விறல்மன்னன் நம்மை விடுவிக்க எண்ணி வருநாள்,
பங்கேருக[1]த்து மலர்போல் விளங்கு வதனா![2] மகிழ்ந்த பரிவால்
'எங்கே என் ஆசைமகன்?' என்றுரைக்கில், எதிர் ஏதுசொல்வன்? மகனே!

[1]தாமரை. [2]வதனா—(வதனம்—முகம்)—முகத்தையுடையவனே.

"நீராளர்[1] வாவி செறிநாடனைத்தும் நிறைமாதவற்கு உதவினும்,
பாராளும் நீர்மை தொடர்[2]பற்ற தன்று. படி[3]யாளும் எந்தை முடியில்,
காராளர்[4] ஏர்கள் கடவோசை ஓய்வில் கன்னோசி நாடதனைமேல்
ஆராள வல்லர்? அவமே வனத்தில் அரவால் இறந்த மகனே!

[1]நீர்நிரம்ப. [2]ஸம்பந்தம். [3]பூமி. [4]வேளாளர்.

"நல்லோர் வகுத்த முறையாம் அறங்கள் நாலெட்டில் ஒன்று குறையேம்.
இல்லோரை அற்பம் இகழோம். இறுக்கும் இறையன்றி ஏற உகவேம்.
சொல்லோ மறுத்தும் உரையோம். உரைத்த துறவோர்கள் புத்தி கடவேம்.
எல்லோர் தமக்கும் இனிதே விளைப்பம். ஏதாக வந்த திதுவே?

இறுக்கும்...உகவோம்=கொடுத்துத் தீர்ப்பதான பகுதிப்பொருள் ஆறிலொருபங்கை யல்லது அதிகமாக விரும்பினோமல்லோம்.

"கன[1]மும் தருக்கள்குல[2]மும் தரித்த கரமும், பெருத்த உரமும்,
தினமும் சிறக்கும் முகமும், தரித்த சிகையும் கிடக்கும் முறைகண்(டு)
இனமும் தரித்த துயிரான பாவி இறவாமல். என்றன் மகனே!
மனமும் தரிப்பதில்லை. நொந்துபெற்ற வயிறும் தரிப்பதில்லையே.

[1]பிரதியுபகாரம் வேண்டாத மழையின் செய்கை. [2]கேட்டதைக் கொடுக்கும் கற்பகத் தருக்களின் செய்கை.

"வலியேறு வெற்றி நெடுவேல் மலர்க்கை மகனே டிறந்து மடியாக்
கொடியேன் முகத்தில் விழியார் முனிக்கு வளநாடளித்த கொடையார்.
இடியே றடர்த்த மரமாகி மண்ணி னிடையே உழத்தல் அழகோ?
அடியேனை ஒக்க முடியா திருத்தல் அநியாயம் மிக்க. யமனே!"

இங்ஙனம் துக்கித்தபின் பிள்ளையைத் தோளின்மேல் சாய்த்துக் கொண்டு சந்திரமதி மயான நோக்கிச் சென்றாள். பிணங்களைச் சுடுகின்ற புலையர் அரவத்தாலும் பிணங்களின் தலை வெடிக்கின்ற சப்தத்தாலும் மயானம் உள்ள இடத்தை அறிந்து, அங்கே நெருங்கிப் பிள்ளையை ஓரிடத்தில் வைத்தாள். குறைக்கொள்ளிக் கட்டைகளைப் பொறுக்கி அடுக்கி, ஒரு கொள்ளிக்கட்டையைக் கொண்டுவந்து நெருப்பை மூளப்பண்ணி, அதன்மேல் பிள்ளையை எடுத்து வளர்த்தினாள். மூண்டெரிகின்ற நெருப்பின் வெளிச்சத்தினாலே அதை அரிச்சந்திரன் பார்த்தான்.

## கொடுக்கவேண்டிய பொருளைக் கொடாமல் தகனம் செய்யலாகாதென அரிச்சந்திரன் தடுத்தல்.

அரவுகடித் தரசிளங்கோ இறந்தா னென்ப
தறியாமல், வெகுண் டிறைவன் "ஆரே இந்த
இரவுதனில் பிணஞ்சுடுவார் அறிவோம்" என்று
எழுந்திருந்து விரைந்தோடி, "ஏடி மூடி!
தரவுரிய பொருள் எனக்குத் தாராதே நீ
தனியே இப்பனியிருளில் சவம்கொணர்ந்து
கரவின் அழல் சுடுவ துனக் கடைவோ?" என்றுக்
கால்வீசிக் கான்முளை[1]யை எடுத்தெறிந்தான்.

[1] கான்முளை—பிள்ளை.

எறிந்திடலும் உயிரேங்க ஏங்கி, வேனில்
இடிவிழுந்தால் படிமிசையே அடிசாய்ந்தாடி
முறிந்துவிழும் மரம்போல் சென் றடிமேல் வீழ்ந்து,
மொழிகுழறி விழி அருவிசொரிய, வல்லி,
"அறிந்துமிலன் இவ்வூரில் வழங்கும் நீதி.
அருவினையேன் ஆருமிலி[1]: அறவும்பாவி.
மறிந்த மகன்தனைச் சுட நான் வந்தேன். ஐயா!
வறியேற்[2]குப் பொருள்உளவோ வழங்க?" என்றாள்.

[1] ஆருமற்றவள். [2] எளியவளான எனக்கு.

"பொருளுடையேன் தம[1]ருடையே னானால் இந்தப்
புத்திரனைத் தோள்மீது வைத்துப் போந்திவ்
இருளிடையில் சுடலையில்வந் தெய்துவேனோ?
எரிந்த குறைக்கட்டையினில் ஏற்றுவேனோ?
தெரு[2]ளுடையாய்! அறமுடையாய்! வினையேன் ஈன்ற
சிறுவனை யான் சுடக் கருணைசெய்யாய். தேயா
அருளுடையாய்! ஆதாரம் அற்றேற் குன்றன்
அடியிணை[3]யே தஞ்சம்"என அலறி வீழ்ந்தாள்.

[1] உறவினர். [2] தெருள்—தெளிவு. [3] பாதங்கள் இரண்டு.

"பொன் அனையாய்! விடுவிடு யான் புலையனென்னில்
புலையனு மல்லேன்; புலைபற் றடிமை கண்டாய்.
என் அடி நீ தீண்டுவது தகாது நீதான்.
இப்பொருட்கு யான் உரியனலேன். என்னை யாள்வோன்
சொன்னபணம் கால்உண்டு; கொள்ளியாடைத்
துண்டமும் ஒன்றுண்டு; தந்து சுடுதி. அன்பால்
அன்னவன்தான் படியாக எனக்குத் தந்த
வாய்க்கரிசி யான்அளிப்பேன்; அறிதி" என்றான்.

"துஞ்சிய மைந்தனை எடுத்துச் சுமந்துபோந்து
சுடுவாரற் றிடுகாட்டில் தோள்மேல் ஏற்றிப்
பஞ்சிபடும் பாடுபடும் பாவியேற்குப்
பணம் ஏது? கொள்ளி முறிப்பாதி ஏது?
நெஞ்சுதளர்ந் தருவினையேன் வருந்தக் கண்டும்
நீ இரங்காய்" எனஇரங்கி நிற்குங்காலை,
வஞ்சி திருமணிமிடற்றில்[1] வயங்காநின்ற[2]
மங்கலநாண் கண் டிறைவன் மறித்தும் சொல்வான்.

[1]கழுத்தில். [2]விளங்கும்.

"நல்லைநல்லை அறச்சமர்த்தி நீயே கண்டேன்.
நன்னுதலார் அனைவரினும் இந்த்ரசாலம்[1]
வல்லைவல்லை. விறகுகளும் களவே. செம்பொன்
மங்கலநாண் உன்கழுத்தில் இருக்க, ஏதும்
இல்லையெனச் சொல்லுவது சற்றும் ஏலா(து).
இதனை எனக் கீவாய்" என்றியம்ப, வேடர்
பல்லம்[2]உயர் நிலைவாயில் பட்ட மான்போல்
பதைபதைத்துப் பைந்தொடியாள் பதறிவீழ்ந்தாள்.

[1]அற்புதங்களைக் காட்டும் வித்தை. [2]அம்பு.

"அலைவிலா[1] அரிச்சந்திரற் கல்லது
தொலைவில் யாவர்க்கும் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போதவதோ?"என
உலையின்மீது மெழுகொத் துருகினள்.

[1]வருந்துதல் கொள்ளாத.

"இருளறுங்குணத் தெந்தைக்கு நல்வரம்
அருளுங் காலத் தரவ்வணிவேணியான்[1]
திருவுளஞ்செய்த் திவ்விய மென்மொழிப்
பொருளும் இத்தலம் புக்கபின் பொய்த்ததோ?

[1]பாம்பை யணிந்த ஜடையையுடைய சிவன்.

"பனிமதிச்சடைப் பாவைபங்காளனர்[1]
இனிய வாசகம் இன்றொடும் தீர்ந்ததால்.
புனிதனு[2]ரினும் பூவளந்தோ[3]னினும்
முனிவனே முதியோன்?" என ஏங்கினள்.

[1]பார்வதி ஸமேதரான சிவன். [2]சிவன். [3]விஷ்ணு.

"அற்புக் காழி அனன்[1] அரிச்சந்திரன்
விற்பப் போயின மேன்மைக் குலத்தொடும்
பொற்புப் போம்; பொறை போம்; நிறைபோம்; என்றன்
கற்புப் போவ தென்?" என்று கலங்கினள்.

[1]இரக்கத்துக்குக் கடல்போன்றவன்.

அப்போது அரிச்சந்திரன், அவள் தன் மனைவியென்றும் இறந்த பிள்ளை தன் மகனென்றும் கண்டறிந்து, மனமயங்கி துக்கிக்கலானன்

"அன்னையின்றி அருங்கானில் எய்திய
உன்னை ஓடி அரவம் கடித்தலின்,
மின்னையும் உனையும் விற்ற வெவ்வினை
யென்னை எவ்வணம் நொந்தனை? ஏந்தலே!

"ஒன்றிலாத உயிரினை ஓம்பியே
பொன்றிலாது[1] புலையனுக் காட்பட்டான்
வென்றிவேந்(து); இனி மீட்கத் தருவனே
என் றிறந்தனையோ?" என்றியம்பினன்.

[1]இறவாமல்.

"விற்றநாளில் என்மேனி தழீஇய நிற்
பற்றி அந்தணன் ஈர்த்ததும் பார்த்திருந்
திற்றைநாள்மட் டிரங்காத என்வயின்
உற்ற பாவம் ஒழித்தனையோ?" என்றான்.

இங்ஙனம் துக்கித்ததைக் கேட்டு, அவன் அரிச்சந்திரனே என்றெண்ணி அடிபணிந் தழுது, 'சந்திரமதி

"தீமை செய்த துனக்கும் சிறுவற்கும்
வாய்மை[1]தான். அது மண்ணுக்கும் விண்ணுக்கும் [1]ஸத்யம்.
தூய்மை[2]யே இனி என்று துணிந்தனன். [2]பரிசுத்தம்.
நீ மயங்கல்[3]: அறத்தை நினை" என்றாள். [3]மயங்காதே.

அரிச்சந்திரன் "என்னை அடிமையாகக் கொண்டவனுக்குக் காற்பணமும் கொள்ளித்துண்டு வஸ்திரமும் சேரவேண்டும். எனக்குப் படிச்செலவாக ஏற்பட்ட வாய்க்கரிசியைக் கொடுக்கவேண்டா. அவனுக்குரியதை நான் வாங்காவிட்டால் நீதி தவறும். உன்னை அடிமையாகக்கொண்ட பார்ப்பானிடம் சொல்லி, இவைகளை வாங்கிவந்து கொடுத்து, அப்புறம் மகனை தகனம்செய்க" என்றான். பிள்ளையைச் சுடுகாட்டிலே விட்டுச் சந்திரமதி போனாள்.

## போகிற வழியில் சந்திரமதி கொலைதண்டனை பெறுதல்.

போகும்போது, திருடர் காசிராஜன் பிள்ளையை எடுத்துவந்து கொன்று தெருவிலே போட்டிருந்தனர். பிராமணன் வீட்டுக்குப் போகும் சந்திரமதி, தெருவில் விழுந்துகிடந்த குழந்தையை உற்றுப் பார்த்தாள். குழந்தையை நாடிவந்த ராஜஸேவகர்கள் அவளைக் கொண்டு போய் அரசனிடம் விட்டனர். தானே கொலைசெய்தவள் என்று சந்திரமதி சாதிக்கவே, அரசன், வீரவாகுவை அழைத்து, அவளைக் கொலைசெய்யும்படி அவனிடம் ஒப்பித்தான்.

மின்னைக் கொண்டு முன்கட்டினை இறுகுற விசித்து,
மன்னைக் கைதொழுதேத்தித் தன்சேரியில் வந்து,
பின்னைத் தன்வயின் விலைப்பட்ட அயோத்தியர் பெருமான்
றன்னைக் கூவியே அவன்கையில் தையலைக் கொடுத்தான்.

"பிள்ளையைக் கொடுபோய் உடல்பிளந் துயிர்தொலைத்த
கள்ளியைக் கொலைக்களத்திடைக் கொண்டுபோய்க் கவந்தம்[1]
துள்ளியோட நீ வெட்"டெனத் தோகையைக் கொடுத்து
வள்ளியோன் கையில் தன்கையின் வாளையும் கொடுத்தான்.

[1]தலையில்லாத முண்டம்.

வாளை வாங்கிக்கொண்டு மாதையும் கூட்டிக்கொண்டுவந்த அரிச்சந்திரன் அவளைத் தன் மனைவியென அறிந்தான். சந்திரமதியும் தன்னை வெட்டவந்தவன் சுடுகாட்டிலிருந்த நாயகனே என்றறிந்தாள். அரிச்சந்திரன் "கடவுளுக்கு இது ஸம்மதந்தானோ" என மெலிவதைக் கண்டு, சந்திரமதி

"முன்னைநாள் அரசாண் டணிமுடி புனைந்திருந்த
மன்னர் செய்கையும் அறங்களும் திறங்களும் வளர்ந்த
இன்னமும். குறைந் துயிர்தரித்திருந்தவர் இல்லை.
அன்னதே துணி(வு). அடியனேற் கிரங்கிலை" என்றாள்.

அப்போது சத்தியகீர்த்தி வந்து, நடந்த செய்தியை அரசன் சொல்லக் கேட்டு உயிர்பதைத்துக் கூடவே சென்றான்.

இடக்கை பாச[1]மும் எதி[2]யும் பிடித்திட, வலத்துத் [1]கயிறு.
தடக்கை பற்றிய சவம்சுடுகோலினால் தள்ளிச் [2]கத்தி.
சுடர்த் தெருத்தனில் தோன்றிடத், துணுக்கமுற் றேங்கி,
மடக்கொடித்திருமாதரும் மைந்தரும் உரைப்பார்.

"வேலைப்பழித்த விழியாளைச் சினத்தரசன் வெட்டென் றுரைத்த பொழுதே
சால[1]ச் சவங்கள் சுடுகோலின் கடிந்து நனிதள்ளிக் கொணர்ந்த புலையன்
சீலத்தையும் கனகமார்பத்தையும் குலவுதிண்டோளையும் கண்டிடின், [மருள்வார்.
மால்ஒப்பன், அன்றி மயிலோன்ஒப்பன்; அல்லதொரு மதனொப்பன்" என்று

[1]மிகவும்.

மறையோனிடத் திவளை விலைகூறி மிக்க ஒருமகனோடும் விற்றவன் இவன்
குறையோ பொருட்செலவு தெரியாது. மற்றும் ஒரு கொடியோன் அலக்கண்[1]
[உறவே
பறையோனிடத் திவனை விலைகூறி விற்றும் உளன். பலநாள் கழித்த தறிவேம்.
இறையோன்மகற் கிறுதி[2]செயலால் இவர்க்குவரும் இடையூறி(து)" என்றுரை
செய்வார்.

[1]துன்பம், [2]இறுதி—முடிவு (உயிருக்கு முடிவு).

"எங்கோமகன் கதற உயிருண்ட கொலைகாரி இவளோ?" எனத் தொடருவார்.
"வெங்கோபவன்கரியின்முன் போடும்" என்று சிலர் வெகுள்வார்: நெருங்கி
[அடர்வார்.
"பங்கோ பறை[1]க் கிவளை வதைசெய்தல்? நம்படை படாதோ?" எனப் பதறுவார்.
"செங்கோல் முறைக்கு வழு நீர் கொல்வ"தென்று சிலர் செயலால் விலக்கி வரு
[வார்.

[1]பறையனுக்கு

"தப்பாது மன்மகனை உயிர்கொண் டுதிரம்உண்ட தறுகண் அரக்கி, நமர்தம்
கைப்பாசம் உற்றுவர வலளோ? விசும்பினிடை காவாதிருத்தலிலள்: என்?
அப்பாலனைக் கறுவி இவள் கொன்றதோ? அலது யார் கொன்றதோ? தெய்வமே!
இப்பாவிதன் தலையில் வைத்தாய். உனக்கு நடு[1]இலையோ?" எனப் புகலுவார்.

[1]பொதுவான நீதி.

"வல்லோர்கள் வல்லபடி சொல்வார்கள். மன்னும் இறை மருமானை[1] இவள் கொ
றில்லாதபோ திவளை வறிதே வதைத்த பழி யார்பால"தென்று பகர்வார். [ன்றவா
கொல்லாது வன்சிறையில் வைத்தே விளங்கின் இவள் கொலைதான், வதைத்திடுத
[லாம்.
அல்லாது விட்டிடலும் அறமாகும்"என்ன அவரவரோ டுரைத் துழலுவார்.

[1]பிள்ளையை.

"பதியேது? பாவிஇவண்[1] வரவேது? வந்து பெறு பலனேது? பாவம் நிகழ் பெண்
மதியே(து)? இதித்தனையும் விளைவித்த தே"தென்று மறுகா[2] மருண்டு விழுவார்.
"விதியே! அறக்கொடியை. எளியாள்தனைக் கறுவி விலைகூறி விற்றதும் அலால்
சதி[3]யே விளைத்தனை. இதறமோ?" எனச் சிலர்கள் தளர்வார்; முகத்தில் அறைவார்

[1]இவ்விடம், [2]மயங்கி, [3]கெடுதி.

அரிச்சந்திரன் சந்திரமதியின் கைகளைக் கட்டியிருக்கிற கயிற்றைத் தன்கையிலே கொண்டு பட்டணத்து மதிலுக்கு வெளியே வந்து சேர்ந்தான்.

அப்போது வஸிஷ்டர் தேவேந்திரனைப் பார்த்து "சபதம் செய்தது முதல் விசுவாமித்திரர் அரிச்சந்திரனைக் குற்றமுள்ளவனாகச் செய்ய வேண்டி உண்டாக்கின இடையூறுகள் இன்று முடிவாகும். நாம் போய்க் காண்போம் வருக" என்றார். இருவரும் தும்புரு நாரதர் முதலானவர்களுடனே வந்து ஆகாயத்திலே தோன்றாதிருந்தார்கள்.

அந்த ஸமயத்தில் விசுவாமித்திரர் விரைவாகவந்து, "எனக்கு நீ முன்னே கொடுத்த நாட்டை நான் கொடுத்திலேன் என்று சொன்னால், உங்கள் துன்பமெல்லாம் ஒழியும் என்றார். அப்போது தம்பதிகள் இருவரும்

"சேய்மை[1] அண்மை[2]யில் உயிர்க் கொருதுணையெனச் சிறந்த — [1]தூரம்.
வாய்மையால் அகம் தூய்மையாம்; மற்றில். அம்புயத்தைத் — [2]ஸமீபம்.
தூய்மைசெய்வது நீர்அலால் சொல்லின் வேறுளதோ?
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்[3]பெனக் கருதி, — [3]விரதம்.

"புலையனும் விரும்பாத இப்புன்புலால் யாக்கை[1] — [1]சரீரம்.
நிலையெனா மருண்(டு), உயிரினும் நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்.
கலையுணர்ந்த நீ எமக்கிது கழறுவ தழகோ?"

"இம்மை அம்மை[1] வீடென மறை புலங்கொள இயம்பும் — [1]வருபிறப்பு.
மும்மையும் தரும் முறையுடைத் தெனும்நிலை முரணி,[2] — [2]விரோதமாகி.
எம்மை ஆழ்வயிற் றடக்கி மீட்டுமிழ்கலா எரிவாய்
வெஃமைகூர் நர குய்க்கினும், மெய்ம்மையை விடேமால்.

"பதி இழந்தனம்: பாலனை இழந்தனம்: படைத்த
நிதி இழந்தனம்: இனி நமக்குளதென நினைக்கும்
கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலேம்" என்றார்.
மதிஇழந்து தன்வாய்இழந் தருந்தவன் முறைந்தான்

அப்போது இந்திரன் விசுவாமித்திரரை அழைத்து, "நீர் முன்னே சொன்ன காரணத்தை முழுதும் அறிந்துகொண்டு போம்" என்றான். விசுவாமித்திரர் நிறைந்த வெட்கமும் குறுகின பார்வையும் உண்டாகத் தமது நினைவு குறைவாகி இந்திரன் முதலானவர்களுடனே கூடியிருந்தார். அரிச்சந்திரன் சந்திரமதியை மயானத்திடம் கொண்டு போய்

"வழக்கின் என்றும் நீ வழிபடு தெய்வத்தை வணங்கிக்
கிழக்குநோக்கி ஈண்டிரு" எனக், கிளிமொழி மடந்தை
பழக்கமான அக்கணவனைப் பரவி, "என் ஆவி
இழக்கற் கஞ்சி நீ அறம்வழுவேல்" என இயம்பும்.

"பொருந்தும் நீத்தத்[1]தில் புற்புத[2] வாழ்வை நீ மெய்யென்
றருந்தவத்தையும் அறத்தையும் மெய்யையும் விடுத்து
வருந்தல், மன்னவ! வழிவழி சிறக்(க)" எனவாழ்த்தி
இருந்தபின், சுடர்வாட்படை வலக்கையின் எடுத்தான்.

[1]நீத்தம்–ஜலம். [2]குமிழி.

"உலகுயிர்க்கெலாம் பசுபதி[1] ஒருமுத லாயின்,
அலகில்[2] சீருடை அவன்மொழி மறையெனின், அதன்கண்
இலகறம் பலவற்றினும் வாய்மை ஈடில[3]தேல்,
விலகுறாமல் அவ்வாய்மையை விரதமாக் கொளின் யான்,

[1]சிவன். [2]அளவில்லாத. [3]ஸமானமில்லாதது.

"நெறியின் அன்ன என்றனைவிடா நிறை இவட் குளதேல்,
இறுதியின்மையைப் பெறுக. இல்லெனில் இவள் இறுதி
பெறுக" என்று வாள் வீசினன். பேதைதன் கழுத்தில்
மறுமணத்[1]திடு மாலையாய் வீழ்ந்த தவ் வடிவாள்.

[1]இரண்டாவது கலியாணம்.

அப்போது சந்திரமதி புடமிட்டெடுத்த மாற்றுயர்ந்த பொன்போல் விளங்கினாள். அரிச்சந்திரன் கடைச்சல் பிடித்தெடுத்த மாணிக்கம் போல், விளங்கினான்.

## தேவர்கள் தோன்றுதல்.

உடனே இந்திரன் முதலானவர்கள் மயானத்தில் வந்திறங்கினார்கள்.

"என்றனால் இவன்குணமெலாம் விளங்கிடின், எனைப்போல்
நன்றி யார் செய்தார் இவற்"கென நகைமுகம் மலர்ந்து,
துன்று வார்சடை சுவல்[1]மிசைச் சுழன்று வீழ்ந்தாட, [1]பிடர்.
வென்றுளா னெனக் கௌசிகன் ஆடினன் விரைந்து.

வாடி நாள்தொறும் வருந்திய வசிட்டன் மெய்ப்புளகம்
மூடினன் மிகக். காலங்கள் மூன்றையும் உணர்ந்தும்
ஆடினன், உயர்ந்தான், அயர்ந்தான், தனையறியா
தோடினன், மகிழ்ந் தவகையங்கடல் குளித் துறைந்தான்.

அப்போது மும்மூர்த்திகளும் மற்ற தேவர்களும் வந்தனர். அரிச்சந்திரன் ஸந்தோஷித்து அவர்களை வணங்கி யெழுந்தான். முருகவேள் அரசிளங்குமாரனை எழுப்பினார். சிவபெருமான் விசுவாமித்திரரைப் பார்த்து "இந்திரன் ஸபையிலே வஸிஷ்டரும் நீரும் சபதம்பண்ணிக்கொண்டீர்களே: உங்களில் வென்றவர் யார், தோற்றவர் யார்?" என்று கேட்டார். விசுவாமித்திரர்,

"கோதிலாக் குணத்தோன் நீதியும் நெறியும் குறியும் யான் அறிகிலா திகழ்ந்தேன்
ஆதலால்வென்றோன் வசிட்டனே.தோற்றோன் அடியனே. அடியேனேன் மேனாள்
காதலால் செய்த தவத்தினில் பாதி காவலன் றனக்கு யான் அளித்தேன்.
ஈதலால் எனக் கன்றீந்த பேரரசும் ஈந்தனன்" என் றுரைசெய்தான்.

உரைத்தது செவியில் காய்ந்த நாராசம் ஒட்டியதென இறை உருகிக்
"கரப்பினர் தாமும்கொடுத்தது வாங்கக் கண்டிலோம், கேட்டிலோம். கையேற் [கும்
றிரப்பினர்க் களித்த பொருள்தனைக் கொண்டோன் இவனெனப் பெயர்படைத்துல
புரப்பவன் யானோ? இப்பழிதனை யான் பூண்கிலேன்". என்றனன். பின்னும்,

"இம்மையில் பழியாம்; மறுமையில் நரகம்; இரந்தவர்க் களித்ததை வாங்கின்.
செம்மையோர்க்கெல்லாம் பெருநகையாம். இத்தீமை செய்வதற்கு நீ உலகத்
தெம்மையோர் கண்டாய்? இதற்குமுன் தீரா இடர்பல இழைத்தனை யெனினும்,
மும்மையும் பழியே சூட்டுதல் தகுமோ?" என்றனன். முனி அதற் குரைப்பான்:—

"கன்னலங்கழனிநாடும் நன்னகரும் கருதிச் செய்தவத்தை யான் விட்டு
மன்னவன் ஆக வல்லனோ? மீண்டும். வள்ளல்!கேள்:—வசிட்டனும் யானும்
முன்னமே மொழிந்த முறை அறிவதற் குன்முறைமை சோதித்தறிந் துணர்ந்தேன்.
நின்னகர் நீயே ஆளுதி" என்ன, நெடுந்தகை மறுத்தனன் மறித்தும்.

"வேதியற் காளாய் மனையையும் மைந்தன் தன்னையும் விற்றனன். யான்போய்ச்
சாதியில் கீழாம் புலையனுக் காளாய்ச் சவம்சுடு காடு காத்திருந்தேன்.
சோதி மண்டபத்தில் மணித்தவி சேறிச் சுடர்முடி கவித்து மண் புரத்தல்
நீதியன் றென்றே யான் அரசளித்தேன். நினக்கதே: எனக்கிதே" என்றான்.

நினக்...கிதே—உமக்கு அதுவே தக்கது; எனக்கு இதுவே தக்கது.

அப்போது அக்கினிபகவான் வந்து நின்று, "எனக்கு விற்றது உனக்கு இகழ்வாகுமா? நடக்கப்போகிறதை முன்னே அறிந்து அக்கினியாகிய நான் இங்கே பிராமணகுலத்திலே பிறந்திருந்தேன். உன் மனைவியையும் மகனையும் விலைக்குவாங்கின விக்ரயவோலை இதோ" என்று சிவஸந்நிதானத்தில் ஓலையை வைத்தான். அதுகண்டு அரசன் ஆச்சரியமடைந்தான்.

உடனே யமதர்மராஜன் வந்து பரமசிவனை வணங்கி, அரசனைப் பார்த்து, "பின்னால் நடக்கப்போகிறதை முன்னதாக அறிந்து, யமனாகிய நான், நீசனாகப் பிறந்து, உன்னை விலைக்கு வாங்கினேன். எழுதிக்கொடுத்த விலையோலை இதோ இருக்கிறது பார். நீ காத்திருந்தது சுடுகாடன்று: யாகசாலையே. திரும்பிப்பார்" என்றான். அரிச்சந்திரன்

ஆவணம்[1] இரண்டும் கண்டு, தம்மெழுத்தேயாம் எனவறிந்து மெய்மகிழ்ந்து,
கோவணக் கிரண மணி[2]முடி துளக்கிக், கிலேசமும் பீடையும் அகற்றிக்,
காவணநிழலின்[3] கழுகெழுந் தோங்கும் கனல்புகைச் சுடலையைப் பார்த்தான்.
பூவணங் குறையும் பொய்கையும் வாசப் பொழிலுமாய்ப் பொலிந்ததையன்றே.

[1]விலையோலை. [2]கோ...மணி=பெருமைபொருந்தின நிறமான ஒளியையுடைய ரத்நம்.
[3]பந்தல்போட்ட நிழலைப்போல்.

வா[1]யெலாம் யாகம்; மரமெலாம் யூபம்;[2] வானெலாம் ஆகுதித் தூமம்;[3]
தீயெலாம் முத்தீ; திசையெலாம் தருப்பை; தீப்படு விறகெலாம் சமிதை;
பேயெலாம் முனிவோர்; பேச்செலாம் வேதம்; பிணமெலாம் அதற்கமை பசுக்கள்.
ஆயவாறெலாம் நோக்கினன். தொல்லை அமைந்ததே ஈதென அமைந்தான்.

[1]வாய்—இடம். [2]யாகஸ்தம்பம். [3]புகை.

ஆங் கவன்றனைப் பாங்குடன் நோக்கி "அரச!நீ அயோத்தியின் அணுகித்,
தீங்கற மகுடம் சூட்டி, இம்முனிவன் செய்தவம் பாதியும் கொண்டு,
வாங்குநீர் உலகம் பொதுவ[1]றப் புரந்து, வருதி எம்பதத்தினில்" என்றாத்
தேங்கமழ்சடையான் திருவுளம் மகிழ்ந்து, தேவர்கோமாற் குரைசெய்வான்.

[1]உனக்கே சொந்தமாக.

"காரணம்[1] ஒன்று கேட்டியால்:—நீயும் காசிபன் முதல்முனிவரரும்
வாரணவாசி மன்னனும் அயோத்தி மன்னவன் தன்னுடன் ஏகித்
தோரணவீதித் திருநகர் புகுந்து சுடர்முடி சூட்டிய பின்னர்
ஊர் அணைந்திடு"கென் றுரைத்திட, வணங்கி உவகையால் அன்னவர் உரைப்பார்.

[1]செய்யவேண்டிய காரணம்.

"திங்கள் மேவிய செஞ்சடை முடியாய்! நின் திருவுளத்தின்படி யல்லால்
எங்கள் மாட்சிமை வேறிலை"என் றளித்த ஏவல் தம்தலைமிசைக் கொண்டார்.
அங்கண்மாஞாலம் அகன்றெழுந் தீசன் அணிதிகழ் கயிலையில் புக்கான்.
செங்கண்மால் ஏகிப் பாற்கடல் புகுந்தான். திசைமுகன் தனதுல கடைந்தான்.

மறுநாள் எல்லாரும் அரிச்சந்திரனையும் சந்திரமதியையும் லோகிதாஸனையும் தேரிலேற்றிக்கொண்டு அயோத்திக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். அந்தச் செய்தியை அறிந்து அயோத்தியில் உள்ளவர்களெல்லாம் அதிசயித்து எதிர்கொண்டார்கள்.

ஆரணம்[1]முழங் கயோத்தி அணிபெருஞ் சேனையோடும் [1]வேதம்.
வாரணவாசி மன்னன் படையொடும் வள்ளல் ஏகித்
தோரணவாயில் நண்ணிச் சுடர்மணித் தேரிழிந்து
பூரணகும்பம் மன்னும் மண்டபம் பொலியப் புக்கான்.

பல்முடி வேந்தர் தாழ்ந்து பணியப், பொருந்தவிசின் ஏற்றிச்,
சொல் முடிவற்ற நீர்மைத் தாபதர் சூழ்ந்து வாழ்த்த,
நெல் முடி சாயப் பாயும் நீர்வயல் நாட்டின்தன்னைப்
பொன்முடி சூட்டி வாழ்த்திப் புரந்தரன் விசும்பிற் போனான்.

"காருள சோலைசூழும் கௌசிகன் தீமை நன்கே.
நீர் உளவளவும் ஈரேழ்நிலம் உளவளவும் உன்றன்
பேர்உள(து): ஒருகாலத்தும் பிழைப்பில(து). உனக்குநேர்வே
றுருளர்?" என்று வாழ்த்தி அருந்தவ முனிவர் போனார்.

"மைந்தனோ நின்னை மாதை இத்தனை வருத்தம் கண்டேம்.
நிந்தனை சிறிதும் நின்பால் கண்டிலேம். நீதி வேந்தே!
எந்தம் மாதவத்திற் பாதி யாவரும் காண இன்றே
தந்தனம் உனக்கே" என்று கௌசிகன் தாரைவார்த்தான்.

"உற்றறிந் தளவிட்டோரா[1] தூய்மையான் இகழ்ந்துபேசப்
பெற்றவை பொறுத்திர்"என்று வசிட்டனுக் கினிய பேசிக்,
கொற்றவன் தன்னை ஆற்றிக், குமாரனை மயிலைத் தேற்றி,
மற்றும் மந்திரியை வாழ்த்திக் கௌசிகன் வனத்திற்போனான்.

[1]ஓராது—அறியாமல்.

கடி[1]மீதுறு கார்வள மல்கு திருக்
காசித் திருநாடனும் ஏகியபின்
முடிமீ தொளிபொங்கிட வெண்குடையு
முத்தின் குடையுங் கொடியும் மிடையப்
படி[2]மீதினில் மன்னவர் வந்துதொழப்
பல பாவையர் பாணர் பரிந்திடவே
அடிமீது வணங்க அயோத்தியர் கோன்
அரியாசன மீதில் இருந்தனனே.

[1]காவல். [2]பூமி.

PRINTED AT THE S.P.C.K. PRESS, UNIVERSITY PRINTERS, MADRAS—1914.